

### ஆசிரியர் உரை

# இயேசு கிறிஸ்துவின் பரமேறுதல்

# Ascension of Jesus Christ

Louis Rushmore

**வே**தாகமம் தன் பக்கங்களில் மற்ற உபதேசங்களைவிட, கிறிஸ்துவின் பரமேறுதலுக்கு குறைவான பக்கங்களைக் கொடுத்திருகிறது. இருந்தபோதிலும், பல வசனப்பகுதிகள் கிறிஸ்துவின் பரமேறுதலை சார்ந்திருக்கின்றன. இன்னும் பல வசனப்பகுதிகள், கிறிஸ்துவின் பரமேறுதலை இலைமறை காயாக வெளிப்படுத்துகின்றன. வேதாகமத்தில் கிறிஸ்துவின் பரமேறுதலுக்கு குறைவான பக்கங்கள் கொடுக்கப்பட்டாலும் கூட, இதுதான் **கிறிஸ்தவத்தின் நிறைவான, அடிப்படையான, பிரதானமான உபதேசமாகும்.** ஆம், இயேசு கிறிஸ்துவின் பரமேறுதல் அவரை நமக்காகப் பிதாவினிடத்தில் வேண்டுதல் செய்கிறவராகவும், பரிந்து பேசுகிறவராகவும் உயர்த்தியிருக்கிறது. **கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே** (ரோமர் 8:34). அவரே நம் மத்தியஸ்தராகவும் இருக்கிறார். I தீமோ. 2:5, **தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. இதினிமித்தம் அவர் நமக்காகப் பரிந்துபேசுகிறவராயுமிருக்கிறார்.** I யோவான் 2:1, **என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்: ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிக் கிறார்.** கிறிஸ்தவர்களுக்காக, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சர்வ வல்ல தேவனுக்கு முன்பாக இத்தனை பங்குகளை வகித்து வருகிறார். மேலும், அவருடைய பரமேறுதலின் மதிப்பு, அவர் பூமியிலிருந்து தூரமாயிருப்பதினாலல்ல, மாறாக, பிதாவோடு அவருக்கு இருக்கின்ற ஆவிக்குரிய நெருக்கத்தில் தான் இருக்கிறது. இப்போது கிறிஸ்து பூமிக்குரிய எல்லைகளைக் கடந்து, தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவர் பரலோகத்தில் இருப்பது , நாம் அங்கே போவதற்கான வாக்குத்தத்தமாகவும், உத்திரவாதமாகவும் இருக்கிறது.

## பரமேறுதல் விளக்கப்பட்டிருக்கிறது

கிறிஸ்துவின் பரமேறுதல் என்பது அவர் உயிர்தெழுந்து நாற்பது நாட்களுக்குப் பிறகு, அவருடைய சீஷர்களுக்கு முன்பாக அவர்களெல்லாரும் காணத்தக்கதாகப் பரலோகத்திற்குச் சென்ற நிகழ்வைக் குறிக்கிறது. இயேசு கிறிஸ்து பரமேறிய நிகழ்வு புதிய ஏற்பாட்டில் மூன்று இடங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

▲ *மாற்கு 16:19* **இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசின பின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்.**

▲ *லூக்கா 24:1* **அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்.**

▲ *அப். 1:9* **இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது.**

இயேசு கிறிஸ்து பரத்திலிருந்து இப்பூமிக்கு வருவதற்கு கன்னிப் பிறப்பையும், அவர் பூலோகத்திலிருந்து பரலோகத்திற்குக் கடந்து செல்ல பரமேறுதலையும் கருவியாகப் பயன்படுத்தினார் தேவன்.

கிறிஸ்துவின் பரமேறுதலைக் குறித்துப் புதிய ஏற்பாட்டில் நமக்கு அதிகான தகவல்கள் கொடுக்கப்படவில்லை. ஆயினும், இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்களோடு பேசிக்கொண்டிருந்தபோது உயர எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அப்போஸ்தலர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கையில் இரு தேவதூதர்கள் அவர்களைப் பார்த்து இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள். வெளி. 1:7, **இதோ மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்து புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்.**

மேலும், எலியா தீர்க்கதரிசி பரலோகத்திற்கு ஏறிப்போன நிகழ்வை IIராஜா.2:1–8 வசனங்கள் சற்று விரிவாகத் தெரிவிக்கின்றன. எவ்வகையில் பார்த்தாலும், ஏனோக்கு பரமேறிச் சென்றதைவிட, அதிகமான தகவல்கள் எலியாவின் காரியத்தில் தரப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து பரமேறின தகவல்களும் சுருக்கமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், எலியாவின் பரமேறுதல்

விரிவாகவும், தெளிவாகவும் வேதத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. II ராஜா.2:11, அவர்கள் பேசிக்கொண்டு நடந்துபோகையில் இதோ, அக்கினி ரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது; எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான். இந்த மூன்று பரமேறுதலிலும் பொதுவான காரியம் என்னவென்று பார்க்கும்போது இம்மூவரும் பூமியிலிருந்து மேலே எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்.

**கிறிஸ்துவின் பரமேறுதலைக் குறித்த முன்னறிவிப்புகள்**

கிறிஸ்துவின் பரமேறுதலைக் குறித்து பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டிருக்கின்றன. ஆம், அப்போஸதலர் 2-ம் அதிகாரத்தில், சங்கீதம் 110 - லிருந்து கிறிஸ்துவின் பரமேறுதல் பற்றி கையாளப்பட்டிருக்கிறது. முதன் முதலாகப் பதிவு செய்யப்படுகிற சுவிசேஷப் பிரசங்கத்தில் கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் ஆகியவைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அப்.2:23-36. அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கபட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள். தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது. அவரைக் குறித்துத் தாவீது: கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக் கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலது பாரிசத்திலே இருக்கிறார்; அதினாலே என் இருதயம் மகிழ்ந்து, என் நாவு களிகூர்ந்தது, என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்; என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்; ஜீவ மார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர்; உம்முடைய சந்நிதானத்திலே என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர் என்று சொல்லுகிறான். சகோதரரே, கோத்திரத் தலைவனாகிய தாவீதைக் குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள்; அவன் மரணமடைந்து அடக்கம் பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள்வரைக்கும் நம்மிடத்திலிக்கிறது. அவன் தீர்க்கதரிசியாயிருந்து: உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப்பண்ணுவேன் என்று தேவன் தனக்குச் சத்தியம் பண்ணினதை அறிந்தபடியால், அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லையென்றும், முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிச் சொன்னான். இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்;

இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு பிதா அருளிய வாக்குத்தத்தத்தின் பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார். தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே. நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும், நீர் என் வலது பாரிசத்தில் உட்காருமென்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார் என்று அவனே சொல்லியிருக்கிறான். ஆகையினால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்.

மேலும், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம், ஒருமுறை, தாம் பிதாவினிடத்திற்குப் போவதாகவும், அதினிமித்தம் சீஷர்கள் தம்மைக் காணமாட்டார்கள் என்றும் சொல்லியிருக்கிறார். நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் [யோவான் 16:10] என்றார். இப்படியிருக்க, எவ்வித சந்தேகமுமின்றி கிறிஸ்துவின் சீஷர்கள் பரமேறுதல் அல்லது அதற்கு ஒப்பான நிகழ்வுகள் எதையும் அதுவரை கண்டிராதபடியாலும், அவர்கள் வேறு காரியங்களில் நாட்டமாயிருந்தபடியாலும், கிறிஸ்துவின் பரமேறுதலைக் குறித்து அவர்கள் ஆச்சரியமும், குழப்பமும் அடைந்தார்கள். அப்.1:6, அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்.

**வரவிருக்கின்ற பரமேறுதலைக் குறித்து கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் சொன்ன காரியங்களைக் கவனியுங்கள்:**

- **யோவான் 6:62**, மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?
- **யோவான் 12:32**, நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லோரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன் என்றார்.
- **யோவான் 14:28**, நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில், என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்.
- **யோவான் 16:16**, நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே, கொஞ்சகாலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றார்.

- யோவான் 16:28, நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார்.
- யோவான் 20:17, இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்.

**கிறிஸ்துவின் பரமேறுதலைக் குறித்த மறைமுகக் குறிப்புகள்**

புதிய ஏற்பாடு இயேசு கிறிஸ்து பரத்திலிருப்பதை வெளிப்படையாகக் குறிப்பிடுகிறது. சில வசனப் பகுதிகள் கிறிஸ்து பரமேறினதைப் பல வார்த்தைகளாலே வர்ணிக்கின்றன (எபே-4: 8-10; தீமோ.3:16). வேறு சில வசனப்பகுதிகள் கிறிஸ்து இப்போது பரத்தில் வீற்றிருக்கிறபடியால், அவர் பரமேறினதை மறைமுகமாகக் குறிப்பிடுகின்றன.

- பிலிப்பியர் 3:20, நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.
- எபிரெயர் 8:1, மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில்; பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய்...
- எபி.12:2, அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.
- எபேசியர் 4:10, இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்.

கிறிஸ்துவின் பரமேறுதல் என்பது கிறிஸ்து தம்முடைய வாசஸ்தலத்தை பூமியிலிருந்து பரலோகத்திற்கு மாற்றினதை மாத்திரம் அடையாளப்படுத்தாமல், முதலாவது, உயிர்த்தெழுந்து பரமேறிய இயேசு கிறிஸ்து இப்போது எங்கே இருக்கிறார் என்கிற கேள்விக்கு விடை கொடுக்கிறது. இரண்டாவது, பரமேறிய கிறிஸ்து மறுபடியும் மகத்துவமாகப் பரலோகத்திற்குள் பிரவேசித்ததைக் குறிக்கிறது. மேலும், மனித ஆத்துமாக்களின் இரட்சிப்பு சம்பந்தமாக இயேசு கிறிஸ்து செய்து கொண்டிருக்கிற ஊழியத்தின் அடுத்த கட்டத்தின் அடையாளமாகவும் திகழ்கிறது. இயேசு ஆண்டவர் இன்று நமக்காகப் பரத்திலிருந்து ஊழியம் செய்து கொண்டிருக்கிறார் என்றால், பரத்தை நோக்கிய பயணத்திற்கான நம்முடைய ஊழியம் எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும்? அது கிறிஸ்துவின் அச்சடையாளங்களைத் தரித்த தனித்துவமானதாயிருக்க வேண்டும்.



## நிர்வாக ஆசிரியர் உரை

## தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டார்கள்

## Received It As The word of God

*E.Z.S. Rajanayagam*

**ஆகையால் நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்ட போது, அதை மனிதர் வசனமாக ஏற்று கொள்ளாமல் தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் சொலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவ வசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது** [Iதெச.2:13]. பவுலும், பவுலடியாருடைய கூட்டாளிகளும் தெசலோனிக்கேயர் மத்தியில் நற்செய்தியைப் பிரசங்கித்த போது, அதை எந்த வகையாகப் பார்த்து ஏற்றுக்கொள்வது என்ற கேள்வி வந்தது. அவர்கள் வாயின் வார்த்தைகளைப் மனிதர் வார்த்தைகளாகப் பார்த்து நிராகரிப்பதா அல்லது தேவ வார்த்தைகளாகப் பார்த்து ஏற்றுக்கொள்வதா என்று. தெசலோனிக்கேயர் நீதியான முடிவை எடுத்து, விசுவாச வாழ்க்கையில் மிகுந்த பலனைத் தந்தனர்.

இப்பஜ அவர்கள் தேவ வசனத்தை தேவ வசனமாகவே ஏற்றுக் கொண்டு, தங்கள் பக்தி வாழ்க்கையில் பலன் தந்ததற்கான காரணங்கள் என்னவென்று அறிந்து கொள்வதற்கு முன், நமது வழக்கத்தின்படியாக, தெசலோனிக்கேயர் பற்றிய பின்னணியைக் குறித்து கொஞ்சம் பார்த்து விடுவோம்.

அப்போஸ்தலன் பவுல் மேற்கொண்ட மூன்று நற்செய்திப் பயணங்களில், இரண்டாவது பயணத்தின் போது ஆரம்பிக்கபட்டது தான் இந்த தெசலோனிக்கே பட்டணத்து சபை. பவுலடியார் ஒரு மூன்று வாரங்கள் அவர்கள் மத்தியில் தங்கியிருந்து வேத வாக்கியங்களின் நியாயங்களை ஆழமாக எடுத்துப் போதித்து, இயேசுவே கிறிஸ்து என்று உறுதிப்படுத்திக் காண்பித்தார் [அப். 17:1-3]. இங்கே பவுலும், அவனோடிருந்தவர்களும் செய்த ஊழியத் திற்கான பலன் மிகுதியாய் இருந்தது. **யூதர்களில் சிலரும், பக்தி யுள்ள கிரேக்கரில் திரளானவர்களும், கனம்பொருந்திய அநேக ஸ்திரீ களும் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து** சரியானதைத் தெரிந்துகொண்டு கிறிஸ்துவின் நற்செய்திக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தனர். ஆயினும், நீதியை எட்டிக் காயாக எண்ணின எத்தர்கள் கூட்டம், வீணர்களைத் தங்களோடு சேர்த்துக்கொண்டு, கூட்டங்கூடி

பெருங்கலகமுண்டாக்கி, பவுலையும், சீலாவையும் வலுக்கட்டாயமாக வெளியேற்றினர் [ அப். 17:4-10].

கொஞ்ச காலமே தெசலோனிக்கேயரோடு தங்கியிருந்தாலும், அவர்களிடம் அடைந்த ஆவிக்குரிய அனுபவம் அலாதியானதாக இருந்தபடியால் அவர்களை எப்படியாவது மறுபடியும் சந்திக்க வேண்டுமென்று இரண்டு முறை முயற்சித்தார். ஆனால், இரண்டு முறையும் தடையுண்டாயிற்று [1 தெச.2:17, 18]. ஆயினும், புதிதாகப் பக்தி வாழ்க்கையைத் தொடங்கின அந்த இளம் சபையார்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்வில் எப்படியிருக்கிறார்களோ என்று அறியும் படியான ஆவல் பவுலடியாருக்கு அடங்கினபாடில்லை.

ஆகவே, விசுவாசத்தில் தான் பெற்றெடுத்த உத்தமக் குமாரர்களில் ஒருவனாகிய தீமோத்தேயுவை அனுப்பி, தெசலோனிக்கேயர் பற்றிய செய்திகளைத் தெரிந்து வரும்டியாக அனுப்பினார் [1தெச.3:5]. அந்த இளம் சபையார் பக்தி வாழ்க்கையில் படுவேகமாக வளர்ந்து வருகிறார்கள் என்பதும், தங்களைப் பக்தி வாழ்க்கையில் நடத்தின பவுலடியார் மீது மிகுந்த மரியாதையும், பாசமும் வைத்திருக்கிறார்கள் என்பதும் தான் தீமோத்தேயு கொண்டு வந்த இனிமையான செய்தி. அத்தோடு, கிறிஸ்துவின் வருகை போன்ற சில காரியங்களைச் சரியாகப் புரிந்து கொள்வதில் சிறு சிறு குறைபாடுகள் இருப்பதும் பவுலடியாரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இப்படி நிறைந்த நிறைகளையும், கொஞ்சம் குறைபாடு களையும் மனதில் உள்வாங்கிக் கொண்டு, ஆவியானவரின் துணையோடு எழுதப்பட்டது தான் முதலாம் நிருபம்.

தெசலோனிக்கே கிறிஸ்தவர்கள் பவுலடியாரின் வார்த்தைகளை வேத வசனங்களாக ஏற்றுக்கொண்டதற்கும், அவைகள் அவர்களுக் குள்ளே பெலன் செய்ததற்குமான உண்மைகள் எவைகளென்று தெரிந்துகொண்டு, நமக்குத் தேவையான பக்திப் பாடங்களைக் கற்றுக் கொள்ள இப்பொழுது முயற்சிப்போம்

**ஒரு பாசமுள்ள தாயாகப் பவுலடியர் ( I தெச. 2:7-8)**

தெசலோனிக்கே பட்டணத்தார் தேவ வசனத்தை தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டு, விசுவாசித்துப் பலன் கொடுத்தற்கான முதல் காரணமாக பவுலடியார் அவர்களுக்கு மத்தியில் ஒரு தாயாக நடந்து கொண்டதைக் கூறலாம்.

இங்கே பவுலடியாரின் வார்த்தைகளைக் கவனியுங்கள். **உங்களிடத்தில் பட்சமாய் நடந்து கொண்டோம். பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது போல, நாங்கள் உங்கள் மேல் வாஞ்சசையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை**

உங்களுக்குக் கொடுக்க மனாயிருந்தோம்[I தெச.2:7,8]. ஆவிக்குரிய ரீதியில் அவர்களைப் பெற்றெடுத்த அதே ஆரம்ப நாட்களில், பவுல் ஒரு தாயாக நடந்து கொண்டேன் என்கிறார். அப்படியானால், அவர்களை எப்படி பாசதோடு அக்கறையோடு, கரிசனையோடு கவனித்திருப்பார் என்று எண்ணிப் பாருங்கள்.

அன்பானவர்களே, நாம் வாழும் இக்கால கட்டத்தில், ஆவிக்குரிய ரீதியில் பெற்றெடுக்கப்படும் ஆத்துமாக்கள் இப்படிப்பட்ட கரிசனையையும், பராமரிப்பபையும், பாதுகாப்பையும் பெறுகிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

முற்பிதாக்களில் மூன்றாமவராகிய யாக்கோபுக்கு இந்த உண்மை வெகு காலத்துக்கு முன்பே தெரிந்திருக்கிறது. தன் சகோதரனாகிய ஏசாவை அவன் பல வருடங்களுக்குப் பிறகு சந்திக்க நேர்ந்த போது, ஏசா ஒரு பாசம் கொண்ட அண்ணனாக மிகவும் யதார்த்தமாக நடந்து கொண்டான். ஒரு கட்டத்தில் தன் தம்பியாகிய யாக்கோபுக்கு உதவும் பொருட்டு, நாம் புறப்பட்டுப் போவோம் வா, நான் உனக்கு முன் நடப்பேன் என்றான் [ஆதி.33:12]. அப்பொழுது யாக்கோபு, **பிள்ளைகள் இளம் பிள்ளைகள் என்றும், கறவையான ஆடு மாடுகள் என்னிடத்தில் இருக்கிறது என்றும் என் ஆண்டவனுக்குத் தெரியும், அவைகளை ஒரு நாளாவது துரிதமாய் ஓட்டினால், மந்தையெல்லாம் மாண்டுபோம் என்றான்** [ஆதி.33:13]. அங்கே, யாக்கோபு எதை அல்லது யாரை எப்படி நடத்த வேண்டுமென்ற கலையை அறிந்தவனாக இருந்தான். ஊழியங்கள் தோற்றுப்போகாமல், ஆத்துமாக்கள் பின்மாற்றம் அடையாமல், சத்தியத்தில் வளர்ந்தோங்க வேண்டுமானால், பழைய ஏற்பாட்டின் காலத்தில் யாக்கோபுக்கும், புதிய ஏற்பாட்டின் காலத்தில் பவுலடியாருக்கும் தெரிந்திருந்த வழிநடத்தும் பாங்கு ஒவ்வொரு ஊழியருக்கும் தெரிந்திருக்க வேண்டும்.

**ஓர் உண்மை ஊழியனாகப் பவுலடியர் ( I தெச. 2:9-10)**

தெசலோனிக்கே பட்டணத்தார் தேவ வசனத்தை தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டு, விசுவாசித்துப் பலன் கொடுத்தற்கான இரண்டாவது காரணமாக, பவுலடியார் அவர்களுக்கு மத்தியில் ஓர் உண்மை ஊழியனாக நடந்து கொண்டதைக் கூறலாம்.

அவர்களை ஆவிக்குரிய ரீதியில் பெற்றெடுத்த பவுலடியார், ஒரு பால் கொடுக்கிற தாயைப் போல் அவர்களை அணைத்துப் பாதுகாத்து வளர்த்ததோடு நில்லாமல், அவர்கள் கண்களுக்கு முன்பாக எல்லா வகையிலும் தன்னை ஒரு தேவ ஊழியனாக வெளிப்படுத்திக் காட்டினார். அவர் கூறுவதைப் பாருங்கள். **சகோதரரே, நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும், உங்களில்**

**ஒருவனுக்கும், பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் நாங்கள் வேலை செய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம்** [1தெச.2:9] என்று.

நம்முடைய நாட்களில் ஊழியம் என்பது ஒரு தோரணையான வேலை என்று கருதப்படுகிறது. ஆனால், பவுலடியாருக்கோ அது சாட்சியான ஒரு வாழ்க்கையாக இருந்துள்ளது. நம்முடைய நாட்களில் ஊழியம் என்பது அழிந்துபோகும் ஆத்துமாக்களைக் குறித்த அக்கறையற்றதாகவும், இருக்கின்ற ஆத்துமாக்களை எப்படியாவது கரை சேர்க்க வேண்டுமென்ற எண்ணமற்றதாகவும் இருக்கிறது. ஆனால், பவுலடியாருக்கோ எந்தவொரு ஆத்துமாவும் கெட்டுப்போய் விடக்கூடாது என்ற பாரம் கொண்டதாய் இருந்துள்ளது. இன்னும் நம்முடைய நாட்களில் ஊழியம் என்பது பெரும்பாலும் வயிற்றுக்கானதாய் இருக்கிறது. ஆனால், பவுலடியாருக்கோ அது தேவனுக்கானதாய் இருந்துள்ளது. நம்முடைய நாட்களில் பெரும்பாலான விசுவாசிகள் எவ்வித வளர்ச்சியுமில்லாமல் முளைத்த குழிக்குள்ளேயே இருப்பதற்கும், தெசலோனிக்கே சபையார் விசுவாசத்தில் வளர்ந்து கனி தந்ததற்குமான காரணம் என்னவென்று இப்பொழுது புரிகிறதா?

அதுமாத்திரமா, பவுலடியார் வேறென்ன சொல்லியிருக்கிறார் என்றும் கவனியுங்கள். **விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும், நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கும் நீங்களும் சாட்சி தேவனும் சாட்சி** [1தெச.2:10] என்று. இது எவ்வளவு பெரிய காரிமென்று கொஞ்சமாகிலும் விளங்குகிறதா? இன்றைக்கு தேவனுடைய ஊழியத்தைச் செய்கிறோம் என்பவர்களால், தங்களுடைய பரிசுத்தம் பற்றியும், நீதி பற்றியும், பிழையற்ற வாழ்க்கை பற்றியும் தேவனை சாட்சியாக வைத்து வாயைத் திறக்க முடியுமா? சொல்லுங்கள். அதிகபட்சம், என் மனைவியைக் கேட்டுப்பார் அல்லது என் பிள்ளைகளைக் கேட்டுப்பார் என்று வேண்டுமானால் சொல்ல முடியும். அதற்கு மேல் பேச முடியுமா?

**ஒரு நல்ல தகப்பனாகப் பவுலடியார் (1தெச.2:11,12)**

தெசலோனிக்கே பட்டணத்தார் தேவ வசனத்தை தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டு, விசுவாசித்துப் பலன் கொடுத்ததற்கான இன்னுமொரு காரணமாக, பவுலடியார் அவர்களுக்கு மத்தியில் ஒரு நல்ல தகப்பனாக நடந்து கொண்டதைக் கூறலாம்.

தெசலோனிக்கே கிறிஸ்தவர்களுக்கு நடுவே ஒரு பாசத் தாயாக, ஓர் உண்மையுள்ள நேச ஊழியனாகப் பணியாற்றிய பவுலடியார், அவர்களுடைய ஆவிக்குரிய தேவையினிமித்தம் இங்கே தன்னை

ஒரு நல்ல தகப்பனாக மாற்றிக் கொள்ளுகிறார். இது சம்பந்தமாக, ஆவியானவரின் வெளிப்பாட்டைப் பாருங்கள். **மேலும், தம்முடைய ராஜ்ஜியத்திற்கும், மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டுமென்று, தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும், தேறுதலும், எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்** [1தெச.2:11,12]. திருமண உறவின் வாடை கூடப்படாத பவுலடியார், இப்படித் தன்னை ஒரு தாய் என்றும், ஒரு தகப்பன் என்றும் பேசுவது உண்மையாகவே பிரமிப்பை ஏற்படுத்து கிறது. பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில், **...எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்** [1கொரி.9:22] என்பதின் பொருளில் இதுவும் அடக்கமோ? இந்த தேவ மனிதர், பிறருடைய ஆத்தும மேம்பாட்டுக்காகப் படுகிறபாட்டைப் பார்க்கும் போது வியப்பாய் உள்ளது.

பவுலடியார் தன்னை ஒரு தகப்பன் இடத்தில் வைத்துக் காரிய மாற்றியதற்கு ஆதாரமாக மூன்று தேர்ந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார். 1. புத்தி, 2. தேறுதல், 3. எச்சரிப்பு. இந்த மூன்று வார்த்தைகளின்படி ஒவ்வொருவனுக்கும் ஊழியம் செய்துள்ளார்.

இப்பொழுது அந்த மூன்று வார்த்தைகளில் கவனம் செலுத்துவோம். முதல் வார்த்தை **புத்தி**. புத்தி என்பது அறிவு சம்பந்தப்பட்ட வார்த்தை. ஒருவன் செய்ய வேண்டிய ஒன்றைச் சரியாகச் செய்யாத போது புத்தி இருக்கிறதா என்று கேட்கிறோம். சரியாகச் செயல்படாத கன்னிகைகள் **புத்தியில்லாத கன்னிகைகள்** என்று தான் வேதாகமத்தில் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் [மத்.25:11,12]. இதன் மூலம், பவுலடியார், தெசலோனிக்கே சபையார் பக்தி ரீதியாகச் செய்கின்ற மற்றும் செய்ய வேண்டியவைகளை எப்பொழுதும் சரியாகச் செய்ய வேண்டுமென்று போதித்திருக்கிறார் என்று தெரிகிறது.

இரண்டாவது வார்த்தை **தேறுதல்**. தேறுதல் ஆறுதல் இந்த இரண்டும் சமமான பொருள் தரும் வார்த்தைகள். புத்திமதிக்குப் போதுமான மரியாதை இல்லாத போது, ஒரு நல்ல தகப்பன் தண்டிப்பார். எபிரெயர் ஆசிரியர், **...தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ** என்று சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம் [எபி.12:7]. ஆக, பவுலடியார் அவர்களைத் தண்டித்தபோது, அவர்களுக்குத் துக்கம் வந்திருக்க வேண்டும். ஆனால், பவுலடியாரோ அவர்களின் துக்கத்தை வேடிக்கை பார்த்து ரசிக்காமல், அவர்களை ஆற்றி தேற்றி வழி நடத்தியிருக்கிறார்! இவரல்லவா தேவ மனிதர்.

மூன்றாவது வார்த்தை எச்சரிக்கை. எச்சரிக்கை என்பது ஒரு கடைசி கட்ட நடவடிக்கை. காரியங்கள் கைமீறிப் போகும் போது, ஆபத்தும், அழிவும் காத்திருக்கிறது, உன்னைக் காப்பாற்றிக்கொள் என்று விடுவிக்கப்படுவது தான் எச்சரிக்கை. தெசலோனிக்கேயரின் பக்தி வாழ்க்கைக்காகப் பெரும்பாடுபட்ட பவுல், இதையும் விட்டு வைக்கவில்லை. ஏன் இப்படி பவுல் கடுமையாக நடந்து கொண்டார் என்று நாம் எண்ணத் தேவையில்லை. ஏனெனில் , இது பரலோக தேவனின் பாணி மற்றும் இயேசு ஆண்டவரின் பாணி.

ஆகையால், அருமையானவர்களே, தேவ வசனத்தை தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டு , விசுவாசத்தில் வளர்ந்து பலன் கொடுப்பதற்கு, தெசலோனிக்கே சபையாரின் மனநிலையை விசுவாசிகள் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்வோம். விசுவாசிகள் அப்படி எல்லா வகையிலும் வளர்ந்து மிகுந்த பலனைக் கொடுப்பதற்கு பவுலடியாரின் ஊழியப் பாணியை கர்த்தருடைய ஊழியர்கள் எல்லோரும் பின்பற்றுவோம்.

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.**

---

## வாரத்தின் முதல்நாளின் சிறப்புகள்

- வாரத்தின் முதல் நாளில் தான் கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்தார் (மத்தேயு 28:1-7)
- வாரத்தின் முதல் நாளில் தான் சுவிசேஷம் முதல் முறையாகப் பிரசங்கிக்கப்பட்டது (அப்போஸ்தலர் 2)
- வாரத்தின் முதல் நாளில் தான் சபை ஸ்தாபிக்கப்பட்டது (அப்போஸ்தலர் 2:38,47)
- வாரத்தின் முதல்நாளில் தான் சீஷர்கள் அப்பம் பிட்கும்படி கூடினார்கள் (அப்போஸ்தலர் 2:42)
- வாரத்தின் முதல்நாளில் தான் கிறிஸ்தவர்கள் எதையாகிலும் சேர்த்து வைக்கும்படியாகக் கட்டளை பெற்றிருக்கிறார்கள் (1 கொரிந்தியர் 16:12)
- வாரத்தின் முதல் நாளிலே கிறிஸ்தவர்கள் சபை கூடி வருதலை விட்டுவிடக் கூடாது (எபிரெயர் 10:25)

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| இயேசு கிறிஸ்துவின் பரமேறுதல் | Louis Rushmore | ... 1 |
| தேவ வசனமாகவே .... | E.Z.S. Rajanayagam | ... 6 |
| கிறிஸ்து தான் ஒரே வழி | Jerry Bates | ... 14 |
| மரங்களை நடுதல் | Byron Nichols | ... 19 |
| ராஜரீகமான ஆசாரியர்கள் | P.C. Philemon Rajah | ... 22 |
| கர்த்தருடைய சிந்தை | B. Arjunan | ... 26 |
| ஆவியினால் பிறப்பது என்றால் எப்படி? | E.Z.Selvanayagam | ... 31 |
| வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடி... | Benny Martin | ... 35 |

**தேவன் - God**

| | | |
|---|---|---|
| தேவனுடைய பராமரிப்பு | T. Pierce Brown | ... 38 |
| கன்மலையின் வெடிப்பு | Michael L.King | ... 40 |
| பரிசுத்த ஆவியானவரோடு ... | Samuel Matthews | ... 43 |
| பரிசுத்த ஆவியானவரின் ... | | ... 47 |
| வசன ஆராய்ச்சி | Jerry Bates | ...48 |


**இரட்சிப்பு - Salvation**

| | | |
|---|---|---|
| பாவத்தின் வஞ்சனை | Vance Hutton | ... 50 |
| இயேசு சிலுவையில் அறையப்படுதல் | Rusty Russwurm | ... 53 |
| இயேசுவின் உயிர்தெழுதல் | | ... 56 |
| நீங்கள் இரட்சிக்கப்பட்டதை ... | Jimmy Clark | ... 57 |
| மத்தேயுவில் தேடுதல் வேட்டை | Rebecca Rushmore | ... 59 |

**சபை - The Church**

| | | |
|---|---|---|
| இந்த இரகசியம் பெரியது | | ...60 |
| புதிதாக வந்தவர்களுக்கு ... | Kevin.L.Moore | ...61 |
| சபையைத் தெரிந்தெடுத்தல் | | ...63 |
| நாம் யார்? நாம் எதை விசுவாசித்து ... | Richard Taylor | ...64 |
| சபை கூடுதலை சிறப்பாக்க ... | | ...67 |

| | | |
|---|---|---|
| **வாழ்வதற்கான உபதேசம் –** | **Doctrine to Live by** | |
| தேவனுக்கு முதலிடம் | Sis. Rachel nayagam | ... 68 |
| எபேசியர் நான்காம் அதிகாரத்தின் ... | | ... 71 |
| **செயலில் கிறிஸ்தவம் –** | **Christianity in Action** | |
| இலக்கை நோக்கித் தொடருதல் | Wayne Barrier | ... 72 |
| நீங்களோ இதனிடத்திற்கு வந்து... | | ... 74 |
| **ஆராதனை –** | **Worship** | |
| ஆராதனை பற்றி வேதாகமம் ... | J.C.Choate | ... 75 |
| வாழ்க்கையின் சாராம்சம் கொடுத்தலே | Stephen D. Eckstein Jr | ... 79 |
| தேவனை மகிமைப்படுத்துவோம் ... | Thomas R. Dohline | ... 82 |
| நான் எங்கே இருக்கிறேன்? | Rebecca Rushmore | ... 83 |
| நாங்கள் யார்? | Rebecca Rushmore | ... 84 |
| **அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை –** | **Daliy Christian Living** | |
| உபத்திரவக் காலத்தில் நான் ... | Betty Burton Choate | ... 85 |
| கர்த்தர் மனிதனை உருவாக்கினார் | Loy Mitchell | ... 89 |
| நான் | | ... 91 |
| **கிறிஸ்தவ இல்லம் –** | **The Christian Home** | |
| விவாகத்தின் இரகசியம் | Dan R.Owen | ... 92 |
| தகப்பனின் பணி | Kevin L.Moore | ... 94 |
| **வேதாகம கதாபாத்திரங்கள் –** | **Bible Characters** | |
| லீதியாளின் திறந்த மனது | Maxie B. Boren | ... 96 |
| **வேதாகம கேள்விகள் –** | **Bible Questions** | |
| பத்துக் கட்டளைகளை ... | Russel. G. Bell | ... 98 |
| சபை கட்டிடம் ஒரு பரிசுத்த ... | E. Claude Gardner | ... 100 |
| நம்முடைய நோக்கம் ... | | ... 104 |
| **வேதாகம குறிப்புகள் –** | **Charts And Outlines** | |
| சேவல் கூவும் போது ... | Bobby Dockery | ... 105 |
| பவுலின் நான் என்னும்... | Patrick Morrison | ... 107 |



இணை ஆசிரியர் உரை

# கிறிஸ்துதான் ஒரே வழி

## Christ Is The Only Way

*Jerry Bates*

**ம**னிதன் தேவனிடத்தில் சேருவதற்கு ஒரே வழி இயேசு கிறிஸ்துவே என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. ஆம், அப். 4:12-ல், **அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை** என்று வாசிக்கிறோம். இன்று பல மதங்களை உள்ளடக்கிய சமுதாயத்தில் வாழும் ஜனங்கள் எல்லா மதங்களும் சரியானது தான் என்று எண்ணுகிறார்கள். இந்த உணர்வு சமூக ரீதியாகச் சரியானது அல்ல. மேலும், அவைகள் பரலோகம் போவதற்கான வித்தியாசமான வழிகள் என்றும் எண்ணுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை யாராவது ஒருவர் நாள் முழுவதும் உண்மையைச் சொல்கிறேன் என்று சொன்னால், அந்நபர், அகங்காரம் பிடித்தவர் போல அவர்களுக்குத் தெரியும். பொதுவாகவே மனிதர்கள், தேவன் தயவும், அன்பும் உடையவராயிருக்கிறபடியால் ஒருவர் தனக்கு எந்த வழி சிறந்தது என்று தோன்றுகிறதோ அதைப் பின்பற்றி நல்ல மனிதராக இருந்தால் இரட்சிக்கப்பட முடியும் என்றும், சிலர் தங்களுக்கு இரட்சகர் தேவையில்லையென்றும், ஒரு வேளை அப்படி இரட்சிப்புத் தேவைப்பட்டால் தங்களைத் தாமே இரட்சித்துக் கொள்ள முடியும் என்றும் யாரோ ஒருவர் நம்மை இரட்சிப்பார் என நம்புவது முட்டாள்தனமானது என்றும் நினைக்கிறார்கள். இப்படிப் பட்ட மனப்பான்மைக்கு மூலகாரணம் பெருமை தான்.

கிறிஸ்தவம் தான் ஒரே மார்க்கம் மற்றும் தனித்துவம் வாய்ந்த மார்க்கம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இதேபோல், இஸ்லாமும் தன்னை ஒரே மதமென்றும், தன்னுடைய ஒரே மெய்யான தீர்க்கரிசி முகமது என்றும் சொல்லிக்கொள்ளுகிறது. இஸ்லாத்தை ஆதரிப்பவர்கள் அதற்கான ஒரே ஆதாரம் குரான் என்று சொல்லுகிறார்கள். ஆனால், ஒரு இஸ்லாமியர் இதைக் காண குரான அதன் மூலபாஷையில் கற்க வேண்டும். அதிலே, குரானை நம்பாதவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது.

இதேபோல் இந்துக்களும் எல்லா மதங்களையும் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அதாவது எம்மதமும் சம்மதம் என்று. அவர்களைப் பொறுத்தவரை உண்மையான மதம் என்பது எல்லா மதங்களின் கலவை என்று சொல்லும் அவர்கள், கர்மா, மறு அவதாரம் போன்றவைகளில் சமரசம் கொள்வதேயில்லை. மேலும், அவர்கள் தங்கள் மதத்தைப் பின்பற்றாமல், வேறு மதத்தைப் பின்பற்றுபவர்களை அடித்து மிகவும் கடுமையாகத் துன்பப்படுத்துகிறார்கள். இந்தியாவில் இது அடிக்கடி நிகழும் நிகழ்வுகளில் ஒன்றாயிருக்கிறது. ஆனால், மறுமுனையில் கிறிஸ்தவத்தை மற்ற மதங்களோடு ஒப்பிடும்போது, அது அதிக சகிப்புத் தன்மையுடன் விளங்குகிறது. ஆனால், வேறுபட்ட நம்பிக்கையுடையவர்களை அதாவது கிறிஸ்தவத்தைப் பின்பற்றாதவர்களை கிறிஸ்தவம் ஒருபோதும் துன்பப்படுத்தியதில்லை.

கிட்டத்தட்ட எல்லாக் கலாச்சாரங்களும், மதங்களும் இவ் வாழ்க்கைக்குப் பிறகு ஒரு சிறந்த வாழ்க்கை இருக்கிறது என் நம்புகின்றன. இன்னும் உலக முழுவதுமுள்ள பல போதகர்கள் அந்த நித்தியத்திற்கான வழியைக் கண்டுபிடித்துவிட்டதாகச் சொல்லியிருக்கிறர்கள். மேலும், இதற்கான வழியை இயேசு கிறிஸ்து மாத்திரம் காட்டவில்லை. மாறாக, தங்களுக்கும் அதற்கான வழி தெரியும் என்று பலர் சொல்லியிருக்கிறார்கள். இதிலே, மற்றவர்களுக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? மற்றவர்களுடைய கூற்றை விட கிறிஸ்துவின் கூற்று எந்தளவு நம்பகத்தன்மை வாய்ந்தது என்பதை நாம் தான் கண்டறிய வேண்டும்.

நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தம் உபதேசங்கள் உண்மையானவைகள் தான் என்பதை அற்புத அடையாளங்களின் மூலம் நிரூபித்தார். அவர் யோவான்5:36-ல், **யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு; அதென்னவெனில், நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும், நான் செய்து வருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறது** என்று சொல்லியுள்ளார். இன்னுமாக யோவான் 10:25- ல் **என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது என்றார்.** அவர் செய்த அற்புத அடையாளங்களெல்லாம் எந்தளவுக்கு நம்பகத்தன்மையுள்ளது என்று பார்த்தால், அவருக்கு எதிரானவர்கள் கூட அவைகளை மறுக்க முடியாதளவுக்கு நம்பகத்தன்மையுள்ளதாயிருந்தது. அவருடைய அற்புதங்களில் மகத்தானதும், அவருடைய தெய்வீகத் தன்மைக்கு மிகச்சிறந்த மறுக்கமுடியாத சான்றாயிருப்பது அவருடைய உயிர்த்தெழுதல் தான். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை இன்று வரை சிலர் நம்புவதில்லையென்பது உண்மையாக இருந்தாலும் கூட, ஒருவர் சிரத்தை எடுத்து திறந்த மனதோடு ஆழ்ந்து சிந்தித்தால், இந்த அற்புததத்தின்

வரலாற்றுச் சான்று மிகுந்த நம்பகத் தன்மையுடையதாகவே காணப்படுகிறது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் உண்மையாயிருப்பதால், மற்ற மதங்களை கிறிஸ்தவத்திற்கு இணையாகப் பேசுவதென்பது பொருத்தமற்றதாகும். ஏனென்றால், இயேசு கிறிஸ்து மாத்திரமே தேவனால் அனுப்பப்பட்ட தெய்வீகத் தன்மையுடையவர்.

இயேசு கிறிஸ்து நமக்கு பிதாவைக் காட்டுகிறபடியால், அவர் தான் ஒரே வழி. யோவான் 12:44,45, அப்பொழுது இயேசு சத்தமிட்டு: **என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான். என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான் என்றார்.** இயேசு கிறிஸ்து தேவனாயிருக்கிறபடியால் அவரால் மாத்திரமே நமக்கு பிதாவைக் காட்ட முடியும். யோவான்1:1,14, **ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.** ஆகையால், மனிதர்கள் நமக்கு தேவனைக் காட்ட முடியாது. ஏனென்றால், ஒருவரும் தேவனைக் கண்டதில்லை. மாறாக, தேவன் எப்படி இருப்பார் என்று அவர்கள் நினைப்பார்களோ அப்படித்தான் அவைகளில் தேவனை நமக்குக் காட்ட முடியும்.

இயேசு கிறிஸ்து தான் ஒரே வழி என்றால், அவர் தேவனிடத்திற்குப் போகும் வழியை நமக்கு உண்டு பண்ணியிருக்கிறார் எபி.10:19,20,22. **ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்.... விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.** இயேசு கிறிஸ்து, நாம் தேவனிடத்தில் சென்றடையும் வழியை உண்டுபண்ணியிருக்கிறார். அவர் வழியை உண்டு பண்ணினது மாத்திரமல்லாமல், பிதாவினிடத்தில் நாம் கடந்து செல்ல நமக்கு உதவியும் செய்கிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர இதுவரை வேறு யாரும் நமக்கு வழியை உண்டு பண்ணினதாகவோ, நாம் கடந்து செல்ல நமக்கு உதவியதாகவோ சொல்ல முடியவில்லையே. ஆனாலும், அவர்கள் நமக்கு வழியைக் காட்டுவதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். மேலும், அவர்கள்

நமக்கு முன்பாகச் சென்று வழியைக் காட்டாதபடியால், அவர்கள் உத்தேசித்த இலக்கை அடைந்தார்கள் என்று நமக்கு எப்படித் தெரியும்? அவர்களுடைய சரீரங்கள் இன்றும் கல்லறையில் தான் இருக்கின்றன.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறார் [எபி.12:2]. அவரும் அவருடைய உயிர்தெழுதலும் இவ்வுலகின் ஒரே நம்பிக்கையாயிருக்கின்றன. இது உண்மையாயிருந்தும் இன்னும் அநேகர் அவரை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், அவர்கள் மற்ற மதங்களைத் தழுவியிருக்கிறார்கள்

அடிப்படையில், மற்ற மதங்கள் நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள முடியும் என்று சொல்லுகின்றன. இந்து மதத்திலும், புத்த மதத்திலும், இஸ்லாத்திலும் இரட்சகர் என்றெல்லாம் யாரும் கிடையாது. அந்தந்த மதங்களைப் பின்பற்றுபவர்கள் தங்களை இரட்சித்துக் கொள்வத் தங்கள் சொந்தக் கிரியைகளைத்தான் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. இதனால், நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, நம்மை நாமே இரட்சித்துக் கொள்ளலாம் என்னும் பெருமை உணர்வு மனிதர்களுக்குள்ளே ஏற்பட்டிருக்கிறது. ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மனிதன் தன்னைத் தானே இரட்சித்துக் கொள்ள முடியாது என்று சொல்கிறார். யோவான்15:5-ல் கிறிஸ்து, என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என்கிறார். பவுலும் கூட நம்மை நாமே இரட்சித்துக்கொள்ள பெலனற்றவர்களாயிருந்தோம் என்று சொல்லுகிறார். ரோமர் 5:6, அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்.

ஆகையால், நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், நிச்சயம் கிறிஸ்துவைச் சார்ந்திருக்க வேண்டும். அந்தச் சார்ந்திருக்கும் தன்மை, அவருக்கு நம்மை முழுமையாக அர்ப்பணிப்பதை உள்ளடக்கியதாக இருக்கிறது. ரோமர் 12:1,2 வசனங்கள் நம்மை நாம் தேவனுக்கு எந்த அளவுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று விளக்குகிறது. அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

**நாம் தேவனிடத்தில் எப்படி வருகிறோம்?**

ரோமர் 10:14-17, அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே. ஆனாலும் சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக்குறித்து ஏசாயா: கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று சொல்லுகிறான். ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.

ஒருவர் எப்போதெல்லம் முழுமையான அர்ப்பணிப்புக்குத் தன்னை ஒப்புக் கொடுக்கிறாரோ அப்போதெல்லாம் எதிர்ப்புக் கிளம்பும். ஆனால், நீதியையும், நியாயத்தையும் நிறைவேற்றுவதற்கு ஒரு போதும் அஞ்சத் தேவையில்லை. ஏனெனில், கிறிஸ்துவைத் தவிர வேறு ஒருவராலும் இரட்சிப்பு இல்லை. ஆகவே தான், இயேசு கிறிஸ்து, நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14:6) என்றார். ஆம், நாம் இரட்சிப்படைய கிறிஸ்துதான் ஒரே வழி! ✝

---

## கிறிஸ்துவின் மரணம் தந்த ஆசீர்வாதங்கள்.

- யூதர்களையும் புறஜாதிகளையும் ஒப்புரவாக்கினார் (எபேசியர் 2:16)
- பாவங்களை நிவர்த்தி செய்யும் கிருபாதார பலியானார் (I யோவான் 4:10)
- புதிய பிரமாணத்தை நிலைநிறுத்தும்படியாய் பழையதை மாற்றிப்போட்டார் (எபிரெயர் 9:15-17 மத்தேயு 26:28)
- சாத்தானின் வல்லமையை அழித்தார் எபிரெயர் 2:14
- மரண பயத்திலிருந்த அனைவரையும் விடுதலையாக்கினார் (எபிரெயர் 2:15)



# மரங்களை நடுதல்

# Planting Trees

Byron Nichols

அமெரிக்க தேசத்திலுள்ள டென்னிசி மாகாணத்தில் ஹெண்டர்சன் என்னும் இடத்திலுள்ள ஃப்ரீடு ஹார்டிமேன் பல்கலைக்கழக வளாகத்திற்கு நான் சமீபத்தில் சென்றிருந்தேன். அந்த பல்கலைக்கழக மைதானத்தின் பிரதான பகுதியில் கண்ணைக் கவரும் ஒரு கோபுரம் எழுப்பப்பட்டிருந்தது. அது பார்ப்பதற்கு வசிகரமாக இருப்பது மட்டுமல்லாமல், அதிலிருந்து வரும் மணியோசை அவ் வளாகத்தில் செயல்படுகிறவர்களுக்கு இனிய ஓசையை அளிக்கிறது.

அக்கோபுரத்தின் அடிப்பாகத்தில், சில எழுத்துக்கள் கற்பலகை களிலும், உலோகத்தகடுகளிலும் பொறிக்கப்பட்டிருந்தது. அவைகள் பெரும்பாலும் அந்த பல்கலைக்கழகம் சம்பந்தமாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகவே இருந்தன. இருந்தபோதிலும், அடிப்பாகத்தின் ஒரு மூலையில் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்கள் தான் என் கவனத்தை அதிகமாக ஈர்த்தது. அவ்வாசகத்தில் இதோ இவ்விதம் எழுதப்பட்டிருந்தது.

**வாழ்க்கையின் உண்மையான அர்த்தம் மரங்களை நடுவதுதான் அதின் நிழலில் நீங்கள் உட்கார வேண்டுமென எதிர்பார்க்காதீர்கள்**

-(NELSON HENDERSON)

நான் முதலில் ஹெண்டர்சன் என்னும் பெயர் அப்பட்டணத்தோடு வரலாற்றுப் பூர்வமாகத் தொடர்புடையது என்று நினைத்தேன். ஆனால், ஒரு சிறிய ஆராய்ச்சிக்குப் பிறகு, அப்பெயருக்கும், அந்தப் பட்டணத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதைக் கண்டேன். இங்கே இவ்விதம் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்கள் அதை யார் எழுதினார்கள் என்பதை விட, அதின் ஞானமான காரியத்திற்காகத் தெரிந்து கொள்ளப்பட்டதை உணர்ந்தேன்.

ஹெண்டர்சன் அவர்களுடைய வாக்கியம் மரங்களைப் பொறுத்தவரை மிகவும் பொருத்தமான ஒன்றாக இருக்கிறது. ஆம்,

பெரும்பாலான மரங்கள் மற்றவர்களுக்குப் போதுமான அளவு நிழலைக் கொடுக்கப் பல வருடங்களை எடுத்துக்கொள்கிறது. ஏனென்றால், அப்போதுதான் அம்மரங்களுக்குப் போதிய அளவு நிழல் கொடுப்பதற்கான முதிர்ச்சி ஏற்படுகிறது. ஆகவே,, மரத்தை நடுபவர்க்குப் பின்னாளில் அதன் நிழலை அனுபவிக்கும் வாய்ப்புக் பெரும்பாலும் கிடைப்பதில்லை. மரம் நடுவதுதென்பது, ஞானமான, சுயநலமற்ற, உதாரத்துவமான செயல்பாடாகக் காணப்படுகிறது. நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிற நிழலை நாம் உண்டாக்கு வதென்பது கிட்டத்தட்ட இயலாததொரு காரியமாகும். ஆகையால், நமக்கு முன்பு யாரோ ஒருவர் நட்டுவைத்த மரத்தின் நிழலைத்தான் நாம் இன்றளவும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இதினிமித்தம் தன்னிறைவாய் இருப்பது நல்லது தான். ஆனால், முற்றிலுமாகத் தன்னிறைவாய் இருப்பது நல்லதல்ல. நமக்கு முன்பாக வாழ்ந்த முன்னோர்களுடைய நற்கிரியைகளினால் தான் நாம் பயனடைந்திருக்கிறோம்.

நாம் அடுத்ததாகப் பார்க்கப்போகிற காரியம் நிச்சயமாக ஒரு வேதாகம மேற்கோள் அல்ல. மாறாக, வேதவாக்கியங்களில் பிரதானமாக இடம் பெற்றிருக்கும் விதிகளை இது பிரதிபலிக்கிறது. அதுமட்டுமல்ல, இப்பூமியில் நாம் வாழ்கின்ற வரை இது நம்மைக் குறித்த தேவனுடைய சித்தமாயிருக்கிறது. வேதாகமம் முழுவதுமே, நாம் நம் குடும்பத்தை விசாரிக்க வேண்டும், அவர்களைப் பராமரிக்க வேண்டும் என்ற ஆக்கப்பூர்வமான அறிவுரைகளால் நிறைந் திருக்கிறது. ஆனால், இதையும் தாண்டி பொதுவாக, நாம் மற்றவர்களைக் குறித்த சிந்தையுடையவர்களாகவும், அக்கறை யுடையவர்களாகவும், இன்னும் ஒருபடி மேலேசென்று மற்றவர் களுக்கு உதவி செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டுமென்று போதிக்கப்படுகிறோம். அப்போஸ்தலனாகிய பவுலும் கலா. 6:9,10 வசனங்களில் இவ்விதம் போதிக்கிறார். **நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம். ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்.**

நம்முடைய தனிப்பட்ட நலனுக்காக, நம் வாழ்நாளில் நிழலை அனுபவிப்பதற்காக மரங்களை நடுவதை விட, தேவனுடைய ஜனங்களாக, இப்போதும், வருகின்ற நாட்களிலும் மற்றவர்களுக்கு நன்மை உண்டாகும்படி நற்கிரியைகளைச் செய்வதைக் குறித்து உணர்வுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஆம், சாலொமோனுக்கு அதிக ஞானத்தைக் கொடுத்த தேவன் நமக்கு ஒரு காரியத்தை வசனத்தின் மூலமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார். ஒன்றுமில்லா திருக்கத் தன்னைச் செல்வனாகப் பாராட்டுகிறவனும் உண்டு; மிகுந்த செல்வமிக்கத் தன்னைத் தரித்திரனாகப் பாராட்டுகிறவனும் உண்டு

(நீதி.13:7). ஒருவர் மற்றவருடைய நலனுக்காகத் தன்னுடைய வைகளைக் கொடுப்பதினால் எவ்விதத்திலும் குறைந்து போவதில்லை, அவர் தரித்திரனாவதுமில்லை என்பதுதான் இதன் பொருளாகும்.

ஆகையால், பெற்றோர்களாக, தாத்தா பாட்டிகளாக இருந்து பிள்ளைகளைப் பராமரிப்பதென்பது எளிதான காரியமல்ல. தங்கள் பணியை மேன்மையாக நினைப்பவர்கள், பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் என்னும் ஆலோசனையை நிச்சயமாக ஆதரிப்பார்கள் (நீதி.22:6). இது ஒரு நீதிமொழி என்பதை நாம் புரிந்து வைத்திருக்கிறோம். இதன் பொருள் நல்ல பெற்றோர்களால் வளர்க்கப் பட்டு தேவனுடைய வார்த்தையால் பயிற்றுவிக்கப்படும் குழந்தைகள் வருங்காலத்தில் பரமப் பிதாவுக்கும், பெற்றோருக்கும் கீழ்ப்படிகிறவர் களாகத்தான் இருப்பார்கள். வருங்காலத்தை மனதில் வைத்துப் பார்த்தால் இத்தகைய பயிற்சிகூட மரங்களை நடுவது போன்றதுதான்.

இதேபோல், நாம் சபைகூடுமிடங்களில் உள்ள விசுவாசிகளும், தலைமைத்துவத்தில் உள்ளவர்களும் இதைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்து சபையானது நன்மை செய்வதில் வளர்ந்து, ஆவிக்குரிய பிரகாரமாகப் பெலனடைய வேண்டும். ஆம், இயன்றதைச் செய்தவர் களின் நிலைமை பன்மடங்கு ஆசீர்வதிக்கப்பட்டதைப் போல (மரியாள், எஸ்தர்) நம்முடைய நிலைமையும் எப்படியிருக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள். இத்தகைய ஆவிக்குரிய மரம் நடுதல், கிறிஸ்துவின் (சரீரத்தில்) சபையில் மிகப்பெரிய வளர்ச்சியை ஏற்படுத்து வது மாத்திரமல்ல, வருங்காலங்களில் சபை விசுவாசிகளிடையே நிச்சயமாக நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும். ஆகையால் நன்மை செய்வதில் சோர்ந்து போகாமலிருந்தால், ஏற்ற சமயத்தில் தேவன் நம்மை உயர்த்துவார்.

**எல்லாம் புதிதாயின**

| | |
|---|---|
| புதிய கட்டளை | (யோவான் 13:34) |
| புதிய சிருஷ்டி | (II கொரி. 5:17) |
| புதிய ஏற்பாடு | (மத்தேயு 26:28) |
| புதிய மனுஷன் | (எபேசியர் 4:24) |
| புதிய ஜீவன் | (ரோமர் 6:4) |

## ராஜரீகமான ஆசாரியர்கள்
## Royal Priests

Philemon Rajah

நம்மில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்மை பாவங்களறக் கழுவி, நம்மை தேவனுக்கு முன்பாக இராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கிய சர்வவல்ல ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற நாமத்தினாலே தேவ வசனத்தை தினை ஆராய்வதிலிருந்து, நாம் கடை பிடிக்க வேண்டியவை களை அறிந்து கொள்ள முடியும். எரேமியா 31:14 ஆசாரியர்களின் ஆத்துமாவைக் கொழுமையானவைகளினால் பூரிப்பாக்குவேன்; என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**ஆசரிப்பு கூடாரத்தின் மகிமை, மகத்துவம் என்ன?**

யாத். 25:9 நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின்படியும், அதினுடைய எல்லாத் தட்டுமுட்டுகளின் மாதிரியின்படியும் அதைச் செய்வீர்களாக.

ஆசரிப்புக் கூடாரம் என்பது, முழுக்க முழுக்க தேவனாலே திட்டமிடப்பட்ட ஒன்று; அதற்குள்ளே இருக்கின்ற தட்டுமுட்டுக்கள் முதற்கொண்டு எல்லாமே தேவன் வடிவமைத்ததே! மோசே அவைகளை, தேவன் சொன்னபடியே செய்தார்.

இந்த ஆசரிப்புக் கூடாரம் பரிசுத்த ஸ்தலம், மகாபரிசுத்த ஸ்தலம் என்று இரண்டு பிரிவுகளாக இருந்தது. பரிசுத்த ஸ்தலத்தில் குத்துவிளக்கு, தேவ சமூக அப்ப மேஜை, தூபபீடம் போன்றவைகள் இருந்தன. மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே உடன்படிக்கை பெட்டியும், அதன் மேலே கிருபாசனமும் இருந்தது. அங்கே தேவனுடைய பிரசன்னம் இருந்தது (எபி. 9:1-5). ஆயினும் ஆசாரிப்புக் கூடாரமும், பழைய பிரமாணமும் நிழலாக இருக்கிறது. சபையும், புதிய பிரமாணமும் நிஜமாக இருக்கிறது (எபி. 10:1-3).

ஆசரிப்பு கூடாரத்தைப் பற்றியும், எப்படி அதைச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும், தேவன் மாத்திரமே முடிவெடுத்தார். யாருக்கும் அதில் என்ன செய்ய வேண்டுமென முடிவெடுக்கும் உரிமை இல்லை. அதைவிட மேன்மையான கிறிஸ்துவின் சரீரமான சபைக்குள்ளும், என்ன செய்ய வேண்டும்? என்கிற முழு உரிமையும் தேவனுடையது தான் (எபி. 9:6 – 14,23,24).

**ஆசாரியன் என்பவன் யார்? அவனுடைய மேன்மை என்ன?**

எபி. 5:4 மேலும், ஆரோனைப் போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக்

கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை. ஆசரிப்புக் கூடாரத்திற்குள் எல்லாரும் செல்ல முடியாது. லேவிக்கோத்திரத்தாருக்கு மட்டுமே அனுமதி உண்டு. அதற்குள்ளே செல்லு முன் பலி கொடுக்க வேண்டும். பின்பு ஆசாரியர்கள் கழுவு தொட்டிக்குச் சென்று தங்களைக் கழுவி சுத்திகரித்துக் கொண்டு, பிறகு தான் முதல் கூடாரத்திற்குள் செல்ல முடியும்.

ஆசாரிப்பு கூடாரத்திற்குள் செல்லும் பாக்கியம் ஆசாரியர்களுக்கு மாத்திரம்; அதேப்போல் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள்ளும், மீட்கப்பட்ட சகோதரனே! சகோதரியே! உனக்கு மட்டும் தான் பாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உன்னைப் பற்றி நீ யார் என்று தேவன் அடையாளம் காட்டுகிறார். நீங்கள் ஞானமுள்ளவர்களால் தேவன் உங்களுக்குத் தந்த நிலையை, தாலந்துகளை, பெற்றுக்கொண்டவைகளை விருத்தியாக்கத் திட்டமிடுங்கள். புண்ணியத்தை அல்ல பரிசுத்தத்தைத் தேடுங்கள். ஏனெனில், புண்ணியம் பெற தயவு தாட்சணியம் தேவை. ஆண்டவர் நம்மை பரிசுத்தமாக்கி உயர்த்தி வைத்திருக்கிறார். தாழ்மையாக இருப்போம் அதுவே சரியானது! ஆனால், என்னிடம் ஒன்றுமில்லை என தாழ்வுமனப்பான்மையோடு இருந்துவிடாதே! அது விசுவாசமின்மையாகும்.

1 பேதுரு 2:9 நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.

இது நடக்கப் போகிற காரியம் அல்ல, நடந்த காரியம். ஆம், அவர் நம்மை திருமுழுக்கிலே பரிசுத்தமாக்கி நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாயிக்கிறார். அவர் தான் நம்மை உயர்த்தியிருக்கிறார். விசுவாசம் விருத்தியாக வேதாகமத்தைத் தொடர்ந்து படியுங்கள்; வேத ஆராய்ச்சியில், சபை கூட்டங்களில் தவறாமல் பங்கு பெற்று ஆசாரியனுக்குரிய ஆசீர்வாதத்தை உங்கள் பாத்திரங்களில் மொண்டு செல்லுங்கள்.

**ஆசாரியனுடைய வேலைகள் என்னென்ன?**

எபி. 9:6-7 "இவைகள் இவ்விதமாய் ஆயத்தமாக்கப்பட்டிருக்க, ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாங் கூடாரத்திலே நித்தமும் பிரவேசிப்பார்கள். இரண்டாங்கூடாரத்திலே பிரதான ஆசாரியன் மாத்திரம் வருஷத்திற்கு ஒருதரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான்

இஸ்ரவேலின் கோத்திரங்கள் 12; ஆனால் 11 கோத்திரமும் இந்த ஆசாரியனுக்காக நிலத்தை வாங்கனும், விவசாயம் பண்ணனும், ஆடு, மாடு வளர்க்கனும்; ஆனால் ஆசாரியனோ 24 மணி நேரமும் ஆசாரிப்பு கூடாரத்திலேயே வேலை செய்ய வேண்டும். அதன் மகிமையும், மங்களமும் தொடர்ந்திட உழைக்க வேண்டும். ஆசரிப்பு கூடாரத்தை இருட்டாக்கி பரிசுத்த குலைச் சலாக்காதபடி, விளக்கை ஏற்ற வேண்டும். தூபம் காட்ட வேண்டும். தேவன் மற்ற 11 கோத்திரத்தையும் வேலை செய்ய வைத்து, ஆசாரியனை கொழுமையானவைகளினால் செழிப்பாக்கினார்; இதை விசுவாசிக்க ஞானம் தேவை.

வசனத்தை திரும்ப திரும்ப படியுங்கள், வாசியுங்கள், கேள்வி கேட்டு படியுங்கள், காலை மாலை இரவு என படித்துக் கொண்டே இருங்கள். ஏனெனில், ஆசாரியன் ஆசரிப்பு கூடாரத்தின் விளக்கை அணைய விடாமல் எரிய வைக்க வேண்டும் என்பது நித்திய கட்டளை. வேத வசனமான தீபத்தை நீங்கள் எரிய வைத்துக் கொண்டே இருங்கள்.

வசனத்தின் மீது பசி தாகம் கொண்டு வாசிக்க மட்டுமல்ல, ஆராய்ச்சி செய்யவும் கற்றுக் கொள்ளுங்கள் மத். 5:6 நீதியின் மேல் பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்

**உபா. 33:8 லேவியைக் குறித்து; நீ மாசாவிலே பரீட்சை பார்த்து, மேரிபாவின் தண்ணீரி டத்தில் வாக்குவாதம் பண்ணின உன் பரிசுத்த புருஷன் வசமாய் உன்னுடைய தும்மீம் ஊரீம் என்பவைகள் இருப்பதாக.** ஆசாரியனிடத்திலே ஊரிம் தும்மிம் இருக்க வேண்டும். ஊரிம் தும்மிம் என்பவைகள் என்ன? தேவனுடைய பிரசன்னம் உனக்கு இருக்கிறது. பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே வரலாம் என்ற அனுதியின் அடையாளம்.

பரிசுத்த பட்டயத்தைப் பத்திரப் படுத்துங்கள், இழந்து போகாதிருங்கள்; வஸ்திரத்தை தரித்துக் கொள்ள நேரமில்லை என சொல்லாதிருங்கள். ஏனெனில், அவர் நம்மை பரிசுத்தப்படுத்தி, மகிமை நிறைந்த உடையை நமக்குக் கொடுத்திருக்கிறார். தேவன் நமக்கு கிறிஸ்துவின் மூலமாய்க் கொடுத்த மீட்பை பத்திரப் படுத்திக் கொள்ளுங்கள். அது சாதாரணமானது அல்ல.

**உபா. 3:9 தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும்: நான் உங்களைப் பாரேன் என்று சொல்லி, தன் சகோதரரை அங்கிகரியாமல், தன் பிள்ளைகளையும் அறியாமலிருக்கிறவன் வசமாய் அவைகள் இருப்பதாக. அவர்கள் உம்முடைய வார்த்தைகளைக் கைக்கொண்டு, உம்முடைய உடன்படிக்கையைக் காக்கிறவர்கள்.**

அப்பா, அம்மா, வேலை, படிப்பு என காரணம் சொல்லி அவருடையதை தவிர்ப்பவர்களை அவர் வேண்டாம்

என்கிறார். ஆசாரியனே! உனக்கு ஆசாரிப்புக் கூடார வேலை தான் முக்கியம் என்று தெரிய வேண்டாமா? ஆசாரிப்புக் கூடத்தில் வேலை இருக்கின்ற போது, மற்ற வேலைகளைச் செய்ய எனக்கு நேரமில்லை என்ற, அவனது சிந்தைதான் நமக்கும் இருக்க வேண்டும் என்ற உனக்குத் தெரிய வேண்டாமா? வசனத்தை உள்ளே வைத்து காப்பாற்று, அதைக் கடைபிடி, அப்பொழுது உனக்குத் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் முடிவெடுப்பார்.

உபா. 33:10 அவர்கள் யாக்கோபுக்கு உம்முடைய நியாயங்களையும் இஸ்ரவேலுக்கு உம்முடைய பிராமணத்தையும் போதித்து உமது பலிபீடத்தின் மேல் சர்வாங்க தகனபலிகளையும் இடுவார்கள்.

ஆண்களே! ஆசாரியனாக தலைமை தாங்க கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் வீடு என்னும் ஆசரிப்புக் கூடாரத்தில் தினமும், வேதவாசிப்பு என்னும் தீபத்தையும், ஜெபம் என்னும் தீபத்தையும், ஜெபம் என்னும் தூபத்தையும் தேவனுக்கு குடும்பமாகச் செலுத்துங்கள். யோபு தன் பிள்ளைகளுக்காகப் பலியை கொடுத்தது போல, உதடுகளின் கனிகளாகிய ஸ்தோத்திர பலியை 365 நாட்களும் உங்கள் தேவனுக்குச் செலுத்துங்கள் (எபி. 13:15).

மற்றவர்களுக்காகவும் ஜெபியுங்கள். ஆசாரியனின் வேலை பிறருக்காகப் பலியிடுவது ஆகையால், சபையில் ஜெபக் குறிப்புகள் சொல்லும்போது, அவைகளைக் குறித்துக் கொண்டு ஜெபியுங்கள்.

**ஆசாரியனுக்கான பாதுகாப்பும், ஆசீர்வாதமும்**

உபா. 33:11 கர்த்தாவே, சம்பத்தை ஆசீர்வதித்து, அவன் கைக்கிரியையின் மேல் பிரியமாயிரும்; அவனைப் பகைத்து அவனுக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் திரும்ப எழுந்திராதபடி அவர்களுடைய இடுப்புகளை நொறுக்கிவிடும் என்றான். ஆசாரியனின் சம்பத்தை ஆசீர்வதித்து, அவனுக்கு எதிரானவர்களுக்கு எதிரே பாதுகாக்கிறார். ஆசாரியனுக்கான பாதுகாப்பும், ஆசீர்வாதமும் ஆசாரிப்புக் கூடாரத்திற்குள்ளே இருந்ததுபோல, திருமுழுக்குப் பெற்று இரட்சிக்கப்பட்ட சகோதரனே! சகோதரியே! உனக்கான ஆசீர்வதமாமும், பாதுகாப்பும் சபைக்குள்ளே தான் இருக்கின்றது.

ஆசாரிப்புக் கூடாரத்திற்குள்ளே இருக்கிறவனுக்கு தனி ஆசீர்வாதம் மற்றும் பாதுகாப்பு இருக்கிறது. ஏனெனில், அவன் மேல் தேவனுடைய பார்வை இலகுவாயிருக்கிறது. ஆகையால், உங்களைப் பணிவிடைக்காரர்களாக மாற்றுங்கள், தாழ்மையாயிருங்கள். சபையின் வளர்ச்சிக்காக சரீரம், மனம், ஆன்மாவிலே வேலை செய்யுங்கள் (ஏசா. 61:6). அவர் சகலவிதமான நன்மையால் உங்களை திருப்தியாக்குவார் (சங். 65:4). கொஞ்சகாலம் இருந்த நிழலுக்கே இவ்வளவு பாதுகாப்பு என்றால், நாம் (சபை) பரலோகம் வரை சொல்லப் போகிறோமே, நம்மை எப்படிப் பாதுகாப்பர் என்பதை யோசித்துப் பாருங்கள்! ✝

# கர்த்தருடைய சிந்தை

## The Lord`s Mind

*B. Arjunan*

இன்றைக்கு அநேகர் கர்த்தருடைய சிந்தையை அறியாமல் எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லி தேவனுடைய காரியங்களுக்கு விரோதமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கேட்கிறார்; **கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்?** (ரோமர் 11:34). நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு ஒருவரும் ஆலோசனை சொல்லமுடியாது. ஏனென்றால், நாம் அவரால் உண்டாக்கப்பட்டவர்கள். வானமும் பூமியும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கும் முன்னமே தேவனாகிய கர்த்தர் இருக்கிறவராகவே இருக்கிறார். அவருக்கு முன் என்பது இல்லை. அவருக்குப் பின்பே எல்லாம் உண்டாயின. அப்படியிருக்கிறவருக்கு ஒருவரும் ஆலோசனை சொல்லிவிட முடியாது. அவருடைய சிந்தையை அறிந்து விடவும் முடியாது.

யோபு என்ற உத்தம புருஷனைப் பற்றி நாம் அறிவோம். அவன் ஒரு நீதிமான். ஒரு பொல்லாங்கும் செய்யாதவன். அப்படியிருந்த அவனுக்கு வந்த சோதனை அவனுக்குப் பின்பு ஒருவருக்கும் வந்திருக்க வாய்ப்பில்லை என்றே எண்ணுகிறேன். அத்தனை பாடுகளை அனுபவித்தான் யோபு. அத்தனை பாடுகளிலும் கர்த்தரை மறுதலியாமல் தன்னுடைய மனைவியின் நம்பிக்கை அற்றுபோன சூழ்நிலையிலும் தேவன் கையிலே நன்மைகளைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான். இதை அவன் நன்கு வாழ்ந்து கொண்டிருந்த சூழ்நிலையில் அவன் சொல்லவில்லை. மாறாக, அவனுடைய சரீரம் கொடிய பருக்களால் நிறைந்து வேதனையோடு இருந்த சூழ்நிலையில் இதைச் சொன்னான். நமக்கெல்லாம் ஒரு சிறு வேதனை வந்துவிட்டால் போதும் நம்மிடத்தில் பேசுகிறவர்களை பார்த்து எரிந்துவிழுவோம். ஏன் நானே வேதனையோடு இருக்கிறேன். உங்களுக்கு என்ன விளையாட்டாக இருக்கிறதா? என்று பலவீதமான வார்த்தைகளாலே வருத்தப்பட்டு பேசுவோம். ஆனால் யோபுவோ தன் மனைவிக்கு அவன் இருந்த சூழ்நிலையிலும் தேவனைக் குறித்து உயர்வாகப் பேசி அவளுக்கு புத்தி புகட்டினான். இப்படிபட்ட யோபுவை பார்த்து கர்த்தர் **நான் பூமியை அஸ்திபாரப் படுத்தும் போது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை நீ அறிவி** என்று கேட்டார் (யோபு 38:4). பூமியை அந்தரத்தில் தொங்க வைத்திருக்கிறார். நாம் ஒரு வீடுகட்ட அஸ்திபாரம்போடுகிறோம். அதுவும் ஆழமாகத் தோண்டி கற்பாறையின் மீது அஸ்திபாரம் போடுகிறோம். இப்படிப் போட்டும் பூகம்பத்தால் அது பாதிக்கப்படுகிறது.

தேவன், நாம் வாழும் இந்த பூமியை ஆகாயத்தில் அஸ்திபாரமிட்டிருக்கிறார் அவருடைய அநந்த ஞானம் எப்படிப்பட்டது? இதை அறியத்தக்கவன் யார்? அவர் இந்த பூமியை அஸ்திபாரப்படுத்துகிற போது ஒருவரும் இல்லை. அதை அறியத்தக்க அறிவாளி இப்பூமியில் இல்லை. மேலும், **இதோ, தேவன் மகத்துவமுள்ளவர், நாம் அவரை அறிய முடியாது அவருடைய வருஷங்களின் இலக்கம் ஆராய்ந்து முடியாதது** (யோபு 36:26). உலகம் உண்டானது முதல் 6 ஆயிரம் வருஷம் என வேதாகமத்தின் துணைகொண்டு அறிகிறோம். அவருடைய வருஷங்களின் இலக்கம் என்ன என்பதை யாராலும் சொல்லிவிட முடியுமா? அல்லது ஆராய்ந்து சொல்லி விட முடியுமா? ஒருவராலும் ஒருக்காலும் சொல்லி விட முடியாது என அறிகிறோம். நாம் தியானிக்கிற வசனத்தில் அவருக்கு ஆலோசனைக் காரனாயிருந்தவன் யார்? என வேதாகமம் கேள்வி எழுப்புகிறது. ஆலோசனை மிகவும் அவசியமாக இருக்கிறது. ஆனால் **அதே ஆலோசனையை நாம் தேவனுக்கு கொடுத்துவிட முடியுமா? கூடாதே. சார்வவல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக்கிறவன் யார்? தேவன் பேரில் குற்றம் பிடிக்கிறவன் இவைகளுக்கு உத்தரவு சொல்லக்கடவன் என்றார் (யோபு 40:2).**

பலர், நான் தேவனுக்கே ஆலோசனை சொல்லிவிடுவேன் என்று தங்களைக் குறித்து பெருமையாகப் பேசுவார்கள். இப்படிபட்டவர்கள் நான் தேவனாக இருந்திருந்தால் இதை இப்படிச் செய்திருப்பேன், அவருக்கு அது தெரியாமற் போய்விட்டது என்பார்கள். இப்படி பேசுகிறவர்கள் தங்களுடைய மேட்டிமையினால் தான் இப்படிப் பேசுகிறார்கள். இரண்டொரு வார்த்தைகளைப் பேசிவிட்டு எதிர்பேசாமல் தேவசமுகத்தில் அமர்திருந்த யோபு சொல்லுகிறார். **இதோ, நான் நீசன்; நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்; என் கையினால் என் வாயைப் பொத்திக்கொள்ளுகிறேன்** என்றார் [யோபு 40:4]. பெற்றோர்கள் சிலவேளைகளில் பிள்ளைகளை அடிக்கும்போது வாயை மூடு என்று சொல்லி அடிப்பார்கள். இங்கே யோபு தேவ சமூகத்திற்கு முன்பாக தன் வாயைக் தன் கைகளால் பொத்திக் கொண்டான். தேவனுக்கு ஆலோசனை சொல்லவும், அவரைக் குற்றப்படுத்தவும் நினைக்கிறவர்கள் முதலாவது உங்கள் வாயை மூடிக்கொண்டு கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடுங்கள். தேவன் பலிகளையும், காணிக்கைகளையும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை, மாறாக, அவருக்கு செவிகொடுக்கும்படியாகவே விரும்புகிறார். நாம் நேற்று உண்டானவர்கள் ஒன்றும் அறியோம். அவர் ஆதாம் காலம் துவக்கி எத்தனையோ யுகயுகமாக அநேகரைப் பார்த்துகொண்டிருக்கிறார். அவருக்கு நாம் ஒன்றும்

சொல்லிவிடமுடியாது. அவர் ஆலோசனையில் பெருத்தவர், ஞானத்தில் சிறந்தவர், சர்வலோகத்தின் ஞானியாகவும் இருக்கிறார். அவரோடே போராட மனிதன் எம்மாத்திரம். உண்டாக்கப்பட்ட ஜீவன் உண்டாக்கினவரை நோக்கி நான் உனக்கு ஒரு ஆலோசனை சொல்லட்டும் என்று சொல்லுமோ? ஒரு எஜமானை நோக்கி வேலைக்காரன் என்னுடைய வார்த்தைக்கு செவிகொடு என்று சொல்லக்கூடுமோ? நீங்கள் இதை என்றாவது சிந்தித்ததுண்டா? அவரால் உண்டாக்கப்பட்ட நாம் அவருடைய வல்லமையைப் புகழ்ந்து பாடவேண்டும். எண்ணிலடங்கா ஜீவன்களை பிதாவாகிய தேவன் பூமியிலே உண்டு பண்ணியிருக்கிறார். அவைகளுக்கெல்லாம் நேர்த்தியாக ஆகாரம் கொடுக்கிறார். ஒருவராலும் தூண்டிலினால் பிடிக்கக்கூடாத திமிங்கிலங்களை உண்டாக்கியிருக்கிறார். இப்படி அநேக மிருக ஜீவன்களை உண்டாக்கி அதற்கு வேண்டிய ஆகாரங்களையும் கொடுத்திருக்கிறார். அவைகளுக்கு வேண்டிய இருப்பிடங்களையும் ஆயத்தம் செய்திருக்கிறார். இப்படி மகத்துவமுள்ள தேவனுக்கு நீ ஆலோசனை சொல்லிவிட முடியுமா? அவரை நீ குற்றப்படுத்த முடியுமா? நீ தேவனுக்குப் பயந்து அவர் ஏற்படுத்தியிருக்கிற வழியில் நடக்கப் பிரயாசப்படு.

மேலும், தனக்கு பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? [ரோமர் 11:35]. சிலர் பதில் சொல்லுவதில் முந்திக்கொள்வார்கள். அப்படிபட்டவர்கள் தேவனுக்கு முந்தி அவருக்கு ஒன்றைச் சொல்ல முடியுமா? எப்படிப்பட்டவராலும் அதைச் சொல்ல முடியாது. நம்முடைய தேவனுக்கு முந்தி ஒரு ஆலோசனையை எவராலும் சொல்லிவிட முடியாது. சிலருடைய ஆலோசனை நலமாகத் தோன்றும், ஆனாலும் அவைகள் பூமிக்குரியவைகளாகவே இருக்கும். இந்த ஞானத்தை வைத்து தேவனுடைய காரியங்களோடு ஒப்பிட முடியாது. யோபிலே நாம் வாசிக்கிறோம். நான் பேசத்துணிந்தேன் என்று யாதாமொருவன் அவருக்கு முன்பாகச் சொல்லத்தகுமோ? ஒருவன் பேசத்துணிந்தால் அவன் விழுங்கப்பட்டு போவானே எனக் காண்கிறோம் [யோபு 37;20]. ஆனால், மனிதர்கள் துணிவாக எதையும் பேசிவிடுகிறார்கள், துணிவாக எதையும் செய்துவிடுகிறார்கள். தேவன் பாரார் கவனியார் என்று நினைகிறார்கள். அது தவறு அன்பானவர்களே! காதையும், கண்களையும், உண்டாக்கினவர் பாராமலும் கவனியாமலும் இருப்பாரா? நீ தேவசமூகத்தில் பேசும்போது மனம்பதறி ஒரு வார்த்தையும் சொல்லாதிரு என வேதத்தில் வாசிக்கிறோம். ஆகையால் நான் தேவனோடு பேசத்துணிந்தேன் என்று சொல்லாதிருங்கள். மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்று அவரைப் பார்த்து நம்முடைய இஷ்டப்படி அவரோடு எதிர்த்துப்பேசி

விடமுடியுமா? ஒரு மாவட்ட அதிகாரியினிடத்திலே நாம் எதிர்த்துப் பேசப் பயப்படும்போது உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினவரோடு பேசத்துணிந்துவிட முடியுமா? அப்படி பேசினால் என்னவாகும்? அவன் விழுங்கபட்டுபோவான். இது உண்மையிலே ஒருமுறை நடந்தது. மோசேக்கு விரோதமாக கோராகு தாத்தான் கூட்டத்தார்கள் பேசும்போது; கர்த்தர் மோசேயையும் ஆரோ தனையும் நோக்கி, நீங்கள் இந்த இடத்தை விட்டுப் போங்கள் நான் அவர்களை அதம்பண்ணுவேன் என்றார். அவர்கள் அந்த இடத்தை விட்டுச் சென்றவுடன் பூமி தன் வாயைப்பிளந்து கோராகு தாத்தான் கூட்டத்தாரை விழுங்கிப்போட்டது. இது நமக்கெல்லம் இன்றளவும் திருஷ்டாந்தமாக இருக்கிறது. இதையெல்லாம் அறிந்து யோபு சொல் கிறார்; **நான் இரண்டொருதரம் பேசினேன்; இனி நான் பிரதியுத்தரம் கொடாமலும் பேசாமலும் இருப்பேன் என்றான்** (யோபு.40 :5).

கர்த்தர் சகலத்தையும் அறிகிறார், காண்கிறார். அவருக்கு மறைவானவைகள் ஒன்றுமில்லை. இதை அறிந்தவன் அவருடைய சமுகத்தில் பிரதியுத்தரம் கொடாமலும் பேசாமலும் இருப்பான். சிலர் தங்களுடைய வேதனை பெருகும்போது அந்தக் கடவுள் என்கண் முன்னே தோன்றினால் நான் அவரிடம் கேட்பேன். ஏன் இந்தப்பாடுகள் எதற்காக என்னைப் படைத்தாய் என்று. இப்படிப்பட்டவர்களுக்கு வேதாகமம் கொடுக்கும் பதில்: **தன் தகப்பனை நோக்கி ஏன் என்னைப் பெற்றாய் என்று கேட்கக்கூடாது. அப்படி மீறி கேட்கிறவன் சபிக்கப் பட்டவன். அவனுக்கு ஐயோ!** என வேதம் சொல்லுகிறது. இந்த உலகத்தில் நம்மைப் பெற்றெடுத்த பெற்றோரை மதிக்க வேண்டும். அவர்களைக் கனம்பண்ண வேண்டும் என வேதம் போதிக்கிறது. அவர்களால் தான் நாம் இந்த உலகத்திற்கு வந்தோம். ஆகையால் நாம் உயிரோடிருக்கும் மட்டும் அவர்களுக்கு நன்றியுள்ள பிள்ளை களாகவே இருக்கவேண்டும். அநேக பிள்ளைகள் இதை மறந்து அவர்கள் எனக்கு என்ன செய்தார்கள்? என்னைப் படிக்கவைக்க வில்லை எனக்கு சரியான இடத்தில் திருமணம் செய்துவைக்க வில்லை. இப்படி பல காரியங்களைச் சொல்லி அடுக்கிக்கொண்டே போவார்கள். நான் கேட்கிறேன் அவர்களுக்கு என்ன செய்தீர்கள்? அவர்கள் உயிரோடிருக்கும் மட்டும் அவர்களுடைய விருப்பத்தில் ஏதாவது ஒன்றை நிறைவேற்றியிருக்கிறீர்களா? அவர்களை வேதம் சொல்லுகிறபடியாவது கனம்பண்ணுகிறீர்களா? இப்படி ஏதுவுமே செய்யாமல் அவர்கள் எனக்கு என்ன செய்தார்கள் என்று சொல்வது மாபெரும் தவறல்லவா? சிந்தியுங்கள். கர்த்தருக்கேற்ற சிந்தையில் வளருங்கள் இயேசு கிறிஸ்துவிலிருந்த சிந்தை உங்களிலும்

இருக்கக்கடவது. அவர் பிறப்பு முதல் சிலுவை மட்டும் தம்மைத் தாமே தாழ்த்தினார். பரலோக பிதாவின் சித்தத்தையும் விருப்பத்தையும் அவருடைய ஒரேபேறான குமாரனாக இருந்து இப்பூமியில் அதை நிறைவேற்றினார். இன்றைக்கு அவருக்கு அடுத்தபடியாக குமாரரும் குமாரத்திகளுமாக நாம் இருக்கிறோம். இயேசுவானவர் எப்படி பிதாவின் சித்தத்தை அவருடைய விருப்பத்தை நிறை வேற்றினாரோ அதைப்போல, நீங்களும் நானும் அவருடைய சித்தத்தை நிறை வேற்ற வேண்டும். அதைவிட்டுவிட்டு தேவையற்ற காரியங்களை வளர்த்துக் கொண்டு கிடைக்கப் பெற்ற நாட்களை விரயம் செய்யாமல் பிரயோஜனமுண்டாகும்படிக்கு வாழ்ந்து காலத்தை பிர யோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். நாம் பார்க்கிற யாவும் சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக் காகவும் இருக்கிறது. அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக ஆமென் என்கிறார் பவுல் [ரோமர் 11:36]. ஆகையால், அதை மாற்றியமைக்கவோ, அதைக் குறைசொல்லவோ யாருக்கும் அதிகாரம் இல்லை. இதை அறிந்து தேவனுக்கு ஆலோசனைக்காரராகவும், அவருக்கு ஒன்றை முந்திக் கொடுக்கவும், அவரைக் குற்றப்படுத்தவும் துணியாமல், நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற காரியங்களைச் செய்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவோம்.

**கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எவ்விதமான சிந்தையிருக்கிறது?**

கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல் [1கொரி.2:16]. மற்ற அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய யோவான் சொல்லும் போது **ஆதிமுதல் இருந்ததும் நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்தும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு அதைக் குறித்துச் சாட்சிகொடுத்து அதை உங்களுக்கு அறிவிக்கிறோம். நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது** [1யோவான் 1:1-3] என்கிறார். ஆம், ஆதிகாலங்களில் அவர்கள் தேவனோடு வாழ்ந்து மகிமையின் மேல் மகிமை அடைந்தார்கள். அந்த விதமான வாழ்க்கைக்கு உங்களை வேதாகமம் அழைத்துச் செல்கிறது. கிறிஸ்துவின் சிந்தைக்குள்ளாக வரும்போது தேவனால் நீங்களும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். ✝

# ஆவியினால் பிறப்பது என்றால் எப்படி?

## How About Being Born of The Spirit?

*E.Z. Selvanayagam*

இந்தக் கேள்வி நமக்கு மட்டுமல்ல; நியாய சாஸ்திரியாக இருந்த நிக்கொதேமுக்கும் கூட புரிந்து கொள்ளமுடியாமல் இருந்திருக்கிறது. இருப்பினும் பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு இதை விளக்குவதற்கு முயல்வோம்.

இதை நாம் சரியாகப் புரிந்து கொள்வதற்கு உதவியாக சரீரப் பிரகாரமான பிறப்பு எப்படி நிகழ்கிறது என்று கவனிப்போம். ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதற்கு ஒரு ஆணும், ஒரு பெண்ணும் தேவை. ஆணின் வித்து பெண்ணின் கருப்பைக்குள் செலுத்தப்படும் போது பெண் கருவுற்று ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ஒரு குழந்தை பிறக்கிறது.

ஆவிக்குரிய பிறப்பு விஷயத்திலும் கூட இதே விதிதான். ஒருவன் ஆவிக்குரிய பிறப்பு அடைய வேண்டும் என்றால் அவனுடைய [அல்லது] அவளுடைய உள்ளத்தில் ஆவிக்குரிய வித்து செலுத்தப்பட வேண்டும். அந்த ஆவிக்குரிய வித்து எது?

லூக்கா 8-ம் அதிகாரம் 11-ம் வசனத்தில் தேவனுடைய வசனம் விதைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஆவிக்குரிய பிறப்பபைப் பற்றி பேதுரு கூறும்போது, **அழிவுள்ள வித்தினாலே அல்ல; என்றென்றைக்கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருக்கிறீர்களே** என்கிறார் [1பேதுரு 1:23].

**யாக்கோபு நிருபத்திலும் அவர் சித்தம் கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மை சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார் என்று வாசிக்கிறோம் [யாக் 1:18].**

மேற்கூறிய வசனங்களின் மூலம் பரிசுத்த ஆவியினால் அருளப்பட்ட தேவனுடைய வசனங்களே ஜீவனைக் கொடுக்கக்கூடிய ஆற்றல் உள்ள வித்தாக நம்முடைய உள்ளங்களில் ஊன்றப் படுகின்றன என்பது தெளிவாகிறது.

**விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்** என்று பவுல் கூறுவது எவ்வளவு உண்மை [ரோமர் 10:17]. விதை போடாமல் செடி முளைத்து வளராது என்பது யாவரும் அறிந்த உண்மை. ஆணின் வித்து பெண்ணின் கருப்பைக் குள் செலுத்தப்படும் போது பெண் கருவுறுகிறாள். ஆனால் குழந்தைப் பிறப்பு உடனே நடந்து விடுவதில்லை. அதற்கு முன்னதாக கருவுற்றதினால் ஏற்படும் விளைவுகளை நாம் காண்கிறோம். குழந்தை கருப்பைக்குள் வளர வளரத் தாய்மை அடைந்த பெண்ணின் சரீரத்தில் சில மாற்றங்கள் தென்படுகின்றன. இது இயற்கைச் சட்டம்.

அதே போன்று ஒருவன் தேவனுடைய வசனத்தைக் கேட்கும் போது அதை விசுவாசிக்கிறான்; அதைப் பற்றி சிந்திக்கிறான். அதன் காரணமாக அவனுடைய செயல்களில் மாற்றம் உண்டாக வேண்டும். தன்னிடத்தில் இருந்த தவறான பழக்க வழக்கங்கள், பாவச் செயல்கள் ஆகியவைகளுக்காக மனம் வருந்தி அவைகளை விட்டுவிட வேண்டும். நற்பழக்கங்களைக் கைக்கொண்டு, தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையில் தேறி வருகிறது யாவருக்கும் தெரிய வேண்டும். அதைத் தான் மனந்திரும்புதல் என்கிறோம்.

**தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ் செய்யமாட்டான்** என்று யோவான் எழுதுகிறார் (Iயோவான் 3:9). இதற்கு, ஒரு விசுவாசி பாவம் செய்யவே மாட்டான், பரிசுத்தமடைந்து விடுவான் என்று கொள்ளக்கூடாது. ஒரு உண்மையான விசுவாசி பாவம் செய்யும் இயல்பிலே இன்பம் காண மாட்டான். அவனையும் மீறி பாவம் செய்யக்கூடிய இயல்பு மேற் கொள்ளும் போது அவன் அதற்காகத் துக்கப்பட்டு, வெட்கப்பட்டு வேதனைப்படுவான் [ரோமர் 7:15-24] வாசித்துத் தியானிக்கவும்.

மேலும், I யோவான் 5- ஆம் அதிகாரம், 4,5 வசனங்களில் தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இயேசுவானவர் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? என்று யோவான் கேட்கிறார். அதாவது இயேசுவை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொள்ளுகிறவன், உலக ஆசைகளை வெறுத்து ஜென்ம சுபாவ மனிதர்களைப் போல சிற்றின்பம் பாவம் ஆகியவைகளில் நாட்டம் செலுத்தாமல் தேவனுக் கடுத்த காரியங்களில் ஈடுபாடு கொண்டு வெற்றி பெறுவான் என்று பொருள்.

(எப்படி கருவுற்ற நிலையே குழந்தையைப் பெற்றெடுத்ததற்கு சமம் ஆகாதோ அது போன்று மேலே சொல்லப்பட்ட விசுவாசம் மற்றும் மனம்திரும்புதல் மட்டுமே ஆவியின் பிறப்பு ஆகிவிடாது. இந்த இரண்டு காரியங்களும் தேவ வசனத்தினால் ஜெநிப்பிக்கப்பட்ட நிலையே ஆகும்).

இனி ஆவிக்குரிய பிறப்பு என்பது தண்ணீர் முழுக்கினால் ஏற்படுகிறது என்பதைக் கவனிப்போம். இயேசு ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்க வேண்டும் என்று கூறினார். அதன் பொருள் விசுவாசித்து மனம் திரும்பிய ஒரு மனிதன், தண்ணீரில் மூழ்கி எழுந்திருக்க வேண்டும். அதாவது, நாம் விசுவாசித்து மனம் திரும்பும்போது ஜெநிப்பிக்கப்படுகிறோம். **(கருத்தரிக்கிறோம்)** திருமுழுக்குப் பெற்று கொள்ளும் போது பிறக்கிறோம்.

விசுவாசமுள்ளவனாகிய (கருத்தரித்து) ஞானஸ்நானம் பெற்றவன் (பிறப்பு எய்தியவன்) இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16:16) ஞானஸ்நானம் பெறாதவன் ஆக்கினைத் தீர்ப்படைவான் என்று இயேசு சொல்லவில்லையே என்று சிலர் வாதிடலாம். கருத்தரித்திடுதலே பிறப்பாகாது. அதேபோன்று விசுவாசமும் மனந்திரும்புதலுமே ஆவிக்குரிய பிறப்பு ஆகிவிடாது.

நாம் எப்படி இரட்சிக்கப்படுகிறோம் என்பதை விளக்க நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே மறு ஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் என்று பவுல் கூறுகிறார். தீத்து 3:5, ஆக, ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டுமானால் மறு ஜென்ம முழுக்கும் (ஞானஸ்நானமும்) பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலும் (மனம் திரும்புதல்) தேவை என்றாகிறது. இங்கேயும் ஜலமும் ஆவியும் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். ஆகவே மறுபடியும் பிறப்பதற்கு வேதம் சொல்லுகிற ஞானஸ்நானம் இன்றியமையாதது.

கருவுறாமல் பிள்ளைப்பேறு கிடையாது. அது போல ஒருவன் விசுவாசித்து, மனந்திரும்பாமல் ஞானஸ்நானம் மட்டும் பெற்றுக் கொண்டு வேதம் சொல்லுகிற இரட்சிப்பை பெற முடியாது. ஒரு மனிதனை வலுவான கயிற்றினால் கட்டித் தூக்கிக் கொண்டு போய் தண்ணீரில் முழுக்கி எடுத்துவிட்டால் அவன் இரட்சிப்புக்குத் தகுதியடைந்து விடுவானா? அதேபோல விசுவாசிக்க இயலாத ஒரு குழந்தைக்குத் திரு முழுக்குக் கொடுத்துவிட்டு 12 அல்லது 15 ஆண்டுகள் கழித்து

திடப்படுத்துதல் என்ற ஒரு சடங்கின் மூலம் அவன் வேதம் கூறுகிற இரட்சிப்புக்குத் தகுதியுள்ளனாக முடியுமா? விசுவாசமும் மனந்திரும்புதலும் கருவுறுதல் என்றும், தண்ணீர் ஞானஸ்நானம் பிறப்பு என்றும், நாம் மேலே பார்த்தோம். அப்படியிருக்கும்போது, இன்று பிறப்பு என்பது; 12,15 ஆண்டுகளுக்குப் பிறகு கருத்தரித்தல் என்பது இயற்கைக்குப் பொருந்துமா? ஆனாலும் அதைத் திருத்திக்கொள்வதற்கு நம்முடைய பாரம்பரியப் பெருமை இடம் தருவதில்லை. இது தான் நாம் தேவனுடைய வசனத்துக்குக் கொடுக்கும் மரியாதையா? **சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்** என்கிறாரே தேவன் [ ஏசாயா 66:2] சகோதரர்களே சிந்தித்துப் பாருங்கள்.

அதேபோல கருவுறுதலே (விசுவாசம், மனத்திரும்புதல்) புதிய பிறப்பு ஆகிவிடாது என்பதும் கூட உண்மை. ஜலமும் ஆவியும் ஒருங்கிணையும் போதே புதிய பிறப்பு உண்டாகிறது. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைப் பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே (கலா. 3:26,27) என்கிறார். பவுல். குழந்தை பிறப்பை ஆங்கிலத்தில் Delivery என்று கூறுகிறார்கள். கொலோ. 1:13 கூட அதே அர்த்தத்தை தான் தெரிவிக்கிறது. இருளின் அந்தகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி (delivered) அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்துக்குட்படுத்தினார் என்று கூறுகிறது. அதாவது, கருவிலிருந்து குழந்தை எப்படி உலகுக்கு வருகிறதோ அதே போன்று இருளில் அதிகாரத்தினின்று அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்திற்குள் கொண்டு வரப்படுகிறோம்.

(விசுவாசித்து மனந்திரும்பி இருந்தாலும் (கருவுற்றிருந்தாலும்) ஒருவன் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாவிடில் delivery ஆகவிட்டால் கருவில் ஏதோ கோளாறு அல்லது குழந்தை கருவிலேயே இறந்து போயிற்று என்று தானே பொருள்!)

ஆகவே, ஒரு மனிதன் ஜலத்தினால் பிறப்பதற்கு தேவனுடைய வசனமும், பாவங்களை மன்னிக்கிற கிருபையும் தேவை. அது தேவனுடைய இலவசமான ஈவு. வசனத்துக்குக் கீழ்ப்படிந்து, மனந்திரும்பி திமுழுக்குப் பெற்றுக் கொள்வது மனிதனுடைய கடமை. நாம் இந்தச் சிறிய விஷயத்தைக் கூடச் செய்ய மனமில்லாமல் அதையும் தேவனே செய்ய வேண்டும் அல்லது அதிலும் சலுகை வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. தேவனுடைய மகத்தான இரக்கத்தைப் பயன்படுத்தி இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வோமாக! ✝

# வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடி...

## Seeking The Meaning of Life

*Benny Martin*

**ம**னிதர்களாகிய நாம் இப்பூமியில் வாழும் வாழ்க்கையின் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க பல நூற்றாண்டுகளாக முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், நமக்கு முன்பு வாழ்ந்த மனிதன் எண்ணற்ற காரியங்களைக் கண்டுபிடித்திருக்கிறான். நாம் வாழ்கின்ற உலகம் விஞ்ஞான உலகம். நாம் சற்றும் கற்பனை செய்து பார்க்க முடியாதவைகளை எல்லாம் மனிதன் கண்டுபிடித்திருக்கிறான். ஆனால், வாழ்க்கையின் அர்த்தத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தோல்வியையே தழுவியிருக்கிறான்.

குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்கிற டார்வின் கொள்கையையெல்லாம் நம்மால் நம்ப முடியாது. இவ்வுலகில் வாழ்ந்த அநேக தத்துவ ஞானிகள் வாழ்க்கையில் அர்த்தம் பற்றிய தத்துவங்களை உதிர்த்திருக்கிறார்கள். ஆனால், வாழ்க்கையின் அர்த்தத்தை சாலொமோன் ஞானியைப்போல எந்த ஒரு மனிதனாலும் கண்டறிந்து கூறியிருக்க முடியாது. இஸ்ரவேலின் சிங்காசனம் அதன் முழுவல்லமையிலும், கம்பீரத்திலும் இருக்கும் போது சாலோமோன் அரியணையில் அமர்ந்தார். சலொமோனுக்கு ஞானம், செல்வம், புகழ் போன்றவைகள் திரளாயிருந்தன. இவைகளின் மத்தியில் சாலொமோன் ராஜா வாழ்க்கைக்கான அர்த்தத்தைத் தேடினார். இது பிரசங்கி புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர் இவ்விதமாக எழுதினார். மாயை, மாயை எல்லாம் மாயை என்று. **சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன? ஒரு சந்ததி போகிறது. மறுசந்ததி வருகிறது, பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது** (பிரசங்கி 1:2–4)

நான் இந்த உலகத்தை விட்டுப்போன பிறகு எனக்கு என்ன பயன் உண்டாகும்? நான் என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துவேன்? இது போன்ற கேள்விகள் மனித ஆத்துமாவுக்கு பல நூற்றாண்டுகளாக

தொடர்ந்து தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கிறது. சாலொமோன் ராஜா உலக சிற்றின்பங்களினால் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடினார். அவருடைய கண்டுபிடிப்புகள் எல்லாம் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனென்றால், அவர் மட்டுமே உலகத்தின் சிற்றின்பங்கள் எல்லாவற்றிலும் சிறந்தவைகளை முழுமையாக அனுபவித்தவர். இந்த உலகில் எந்த ஒரு மனிதனும் அவரைப்போல எல்லாவற்றையும் விரும்பிய வண்ணம் அனுபவித்ததில்லை. எனவே, அவர் வாழ்க்கையின் அர்த்தத்தை எந்தெந்த கோணங்களில் தேடினார் என்பதை அலசிப்பார்த்து நாமும் வாழ்க்கையின் அர்த்தம் என்ன என்பதைக் கண்டு கொள்வோம்.

## I சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை ஞானத்தில் தேடினார்

I இராஜாக்கள் மூன்றாம் அதிகாரத்தில் சாலொமோன் ஞானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. மாறாக , தேவனிடம் அதைக் கேட்டார். தேவன் அதை அவனுக்கு ஈவாகக் கொடுத்தார். ஆனால், தேவனால் கொடுக்கப்பட்ட ஞானமாக இருந்தாலும் கூட தேவனுக்கு சேவை செய்ய அது பயன்படாவிட்டால் வாழ்க்கைக்கான அர்த்தத்திற்கு விடை காண முடியாது என்று சாலொமோன் சுருக்கமாக சொல்கிறார். அதாவது, உலக கல்வியில் மட்டும் விடை காண முடியாது என்று சாலொமோன் சுருக்கமாக சொல்கிறார். அதிக ஞானத்தினாலே அதிக சலிப்புண்டு அறிவு பெருத்தவன், நோவு பெருத்தவன் [பிரசங்கி 1:18] கல்வி வாழ்க்கையின் ஒரு பகுதியே தவிர அதுவே வாழ்க்கையல்ல. வெறும் கல்வி வாழ்க்கையில் அர்த்தத்தைக் கண்டறிய உதவி செய்யாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

## II சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை செல்வத்தில் தேடினார்

சாலொமோன் ராஜா செல்வச் செழிப்பாக வாழ்ந்தார். அவர் தன் அரண்மனை முழுவதையும் கட்டி முடிக்கப் பதிமூன்று வருடம் சென்றது. அந்த அரண்மனையின் ஆடம்பரத் தோற்றத்தப் பற்றி I இராஜாக்கள் ஏழாம் அதிகாரத்தில் நாம் வாசிக்க முடிகின்றது. இன்றைய அம்பானி மற்றும் பில்கேட்ஸின் மாளிகைகளைவிட ஆடம்பரமானது என்பதை நாம் புரிந்துகொள்ள முடிவது மட்டுமல்ல பூமியின் சகல ராஜக்களைப் பார்க்கிலும் ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும், ஞானத்திலும் சிறந்தவனாயிருந்தான் என்று தேவவசனம் சொல்கிறது [II ராஜாக்கள் 10:23] செல்வத்தின் வாயிலாக வாழ்க்கையின் அர்த்தத்தைக் கண்டறிய முற்பட்ட சாலொமோன் சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள்.

பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடையவில்லை இதுவும் மாயையே. பொருள் பெருகினால் அதைத் தின்கிறவர்களும் பெருகுகிறார்கள். அதை உடையவர்கள் தங்கள் கண்களினால் அதைக் காண்பதேயன்றி அவர்களுக்கு பிரயோஜனம் என்ன? (பிரசங்கி 5:10,11).

### III சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை புகழில் தேடினார்

சில மக்கள் இந்த உலகத்தில் வாழும்போது பெரும் புகழ் பெற்றால் மட்டுமே தாங்கள் முழுமையடைவதாக கருதுகிறார்கள். அதைவிட மகிழ்ச்சி வேறு எதுவுமில்லை என்று சொல்கிறார்கள்.

அப்படிப் பார்த்தால் சாலொமோன் ராஜா இஸ்ரவேல் தேசத்தை ஆட்சி செய்த நாட்கள் மிகச் செழிப்பான நாட்கள். அந்நாட்களில் அவர் புகழின் உச்சியில் இருந்தார். அவருடைய பேரும், புகழும் உலகெங்கிலும் பரவியது. அவருடைய இராணுவச் செலவினங்கள் அபரிதமானது. சாலொமோனிடத்தில் ஆயிரத்து நானூறு இரதங்கள் இருந்தது. பன்னீராயிரம் குதிரை வீரரும் இருந்தார்கள். அங்கே பிரச்சனை என்னவென்றால், அவரோடு போர் செய்ய யாருமில்லை. எல்லா தேசங்களும் அவரை மதித்து அவருக்கு மரியாதை கொடுத்தன. அவரிடம் கப்பம் செலுத்தப்பட்டது (1ராஜாக்கள் 10:22 26). சேபாவின் ராணி சாலொமோனின் கீர்த்தியைக் கேள்விப்பட்டு அவரை சந்தித்திருக்கிறாள் (1ராஜாக்கள் 10:19).

அவருக்குக் கிடைத்த பணத்திலும், புகழிலும் அவர் திருப்தி யடையவில்லை. அவர் வெறுமையானவராகவே உணர்ந்து வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடிக்கொண்டிருந்தார். வாழ்க்கை யையே வெறுத்தாவராய் அவர் சொல்லும் வார்த்தைகளைக் கவனியுங்கள். **ஆகையால், இந்த ஜீவனை வெறுத்தேன், சூரியனுக்கு கீழே நான் பட்டபிரயாசத்தையெல்லாம் வெறுத்தேன். இதுவும் மாயையே என்று சொல்கிறார்** (பிரசங்கி 2:17-23).

நிறைவாக, சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடுவதில் விடை கண்டுவிட்டார். அந்த விடையை அவருடைய வார்த்தைகளாலேயே கேட்போம் **காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைகொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே** (பிரசங்கி 12:13). எனவே, நாம் இவ்வுலகில் வாழ்வதற்கான நோக்கமே தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்வதற்காகத் தான் என்பதை புரிந்து அதை அப்படியே செய்யும்போது நம் வாழ்க்கைக்கும் ஓர் அர்த்தம் இருக்கும்.

தேவன்

# தேவனுடைய பராமரிப்பு

# The Providence of God

T. Pierce Brown

**தே**வன் கடந்த பல நூற்றாண்டுகளாக நமக்குச் செய்திருக் கிறவைகளை நாம் ஒரு முறை திரும்பிப் பார்ப்போம். நாம் அப்படிச் செய்வது பொருத்தமானது தான். ஆம். இவ்வுலகத்தை தேவன் உண்டாக்கி அதிலுள்ள நமக்கு, கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பை நல்கி, சபையை ஸ்தாபித்தார். ஆகையால், தேவனுடைய இந்த வல்லமையுள்ள கிரியைகளுக்காக நாம் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். மேலும், தேவன் இன்றும் நம்முடைய காரியங்களில் அக்கறைகொண்டு நம்மோடு இடைப்படுகிறார் என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். **உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்ஜியத்தில் ஆளுகை செய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்திருக்கிறார் (தானியேல் 4:17).**

நிச்சயமாகவே, தேவன் நம்மை பாதுகாக்க வல்லவராயிருக்கிறார். அவருடைய பராமரிப்பில் வாழும் நாம் ஒவ்வொருவரும் ஒருபோதும் எந்தவொரு காரியத்திலும் குறுகிப் போகமாட்டோம். ஆம், **தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர் (சங்.46:1,2). நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும், உமது தடியும் என்னைத்தேற்றும் (சங்.23:4). நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன் (ஏசாயா 41:10). ஒரு காசுக்கு இரண்டு அடைகலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல் அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப் பட்டிருக்கிறது. ஆதலால், பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக் கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர் களாயிருக்கிறீர்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் மத்.10:29–30). அன்றியும், அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப் பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28]. நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை.**

என்று அவர் **சொல்லியிருக்கிறார். அதினாலே நாம் தைரியங் கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே** [எபி.13:5,6]. என்று நமக்கான தேவனுடைய பராமரிப்பின் வாக்குத்தத்தங்கள் வேதாகமத்தில் பரந்து கணப்படுகிறது.

மேற்சொல்லப்பட்ட வாக்குத்த்தத்தங்களெல்லாம் எப்படி நிறைவேற்றப்படும் என்பதை நம்மால் ஒருபோதும் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், அவைகளின் துல்லியத்தை நாம் நிச்சயித்துக் கொள்ள முடியும். **அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுவதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிராரே** [எபி.10:23]. தேவனுடைய பராமரிப்பின் மீது நமக்கிருக்கும் நம்பிக்கையும், விசுவாசமும் ஒவ்வொரு முறையும் நாம் தேவனிடத்தில் ஏறெடுக்கும் விண்ணப்பத்தில் வெளியிடப்படுகிறது. அதிலும் குறிப்பாக, **எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்களை சோதனைக்குட்படப்பண்ணாமல். தீமையினின்று எங்களை இரட்சித்து கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும் , மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்** [மத்6:11,13]. அதன் மூலம் தேவனுடைய பராமரிப்பில் நமக்கு அதீத நம்பிக்கை உண்டு. ஏனென்றால், **நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் அதிகப் பொலனுள்ளதாயிருக்கிறது** [யாக்5:16] இதை யார் தான் மறுக்க முடியும்? ✝

## கிறிஸ்தவர்கள் எவைகளில் பெருக வேண்டும்?


- **விசுவாசத்தில்** பெருக வேண்டும் (II கொரிந்தியர் 8:7)
- **நம்பிக்கையில்** பெருக வேண்டும் (ரோமர் 15:13)
- **அன்பில்** பெருக வேண்டும் (பிலிப்பியர் 1:9)
- **நற்கிரியைகளில்** பெருக வேண்டும் (II கொரிந்தியர் 9:8)
- **கர்த்தருடைய கிரியைகளில்** பெருக வேண்டும் (I கொரிந்தியர் 15:58)

தேவன்

# கன்மலையின் வெடிப்பு

# The Cleft of The Rock

Michael L.King



ஒவ்வொரு வருடமும், ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இக்கன்மலையின் வெடிப்பின் வழியாய்க் கடந்து செல்கிறார்கள். பெரும்பாலானோர் இப்பகுதிக்கு நடந்தும், ஒட்டகம் மற்றும் குதிரையின் மீது அமர்ந்தும் வருகை தருகிறார்கள். இக்கன் மலையின் வெடிப்பு பகுதியில் தான் நேபேத்தியர்களின் பழங்கால தலைநகரான பெட்ரா அமைந்துள்ளது. இந்த பெட்ரா பட்டணம் மலைப் பட்டணமாகும். அங்குள்ள பாறைகளின் நிறத்தால் அது ரோஜா நிறப்பட்டணம் என்றழைக்கப்படுகிறது. இப்பட்டணம் பாலஸ்தீனத்திலிருந்து எகிப்துக்கு வடக்கு நோக்கிப் போகும் வணிகப் பாதையில் அமைந்துள்ளது. மேலும், இப்பட்டணம் சுற்றிலும் பாதுகாப்பானதாகவும், பாறைகள் அதிகம் உருவாகியிருக்கிற வறண்ட நிலத்தின் மத்தியிலும் அமைந்துள்ளது. இந்தப் பெட்ரா பட்டணம் செல்வந்தர்களின் நிறுவன உடமைகளைப் பாதுகாப்பதற்கும் பயன்பட்டிருக்கிறது.

**இப்பட்டணம் உருவான வரலாறு:** பல வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட பூகம்பத்தின் விளைவாக, நிலப்பரப்பில் பிளவு ஏற்பட்டு அங்கே மிகப்பெரிய பள்ளம் உண்டாயிருக்கிறது. பின்னாளில் அந்தப் பள்ளத்தில் தான் இந்த பெட்ரா பட்டணம் உருவானது. மேலும், அந்தப் பிளவின் கிளைகள் , பலதிசைகளில் பரவியுள்ளதால், யாரும் அதினுள் எளிதில் ஊடுருவ முடியாது. அதாவது, இப்பட்டணத்திற்குள் பிரவேசிப்பதற்கு ஒரேயொரு குறுகிய செங்குத்தான பாதைதான் உண்டு. அதுவும் அப்பாதை, பாறையை ஆழமாக வெட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. இப்பட்டணத்தைத் தூரத்திலிருந்து

பார்த்தால் இருமலைகளுக்கிடையே அமைந்துள்ள பள்ளத்தாக்கு போன்று தான் காட்சியளிக்கும். இன்னுமாக, இப்பட்டணத்தில், பாறைகளைக் குடைந்து கட்டிடங்களை எழுப்பியிருக்கிறார்கள், பாறைகளின் மேடான பகுதிகளில் கல்லறைகளைக் கட்டியிருக்கிறார்கள், பலிகளைச் செலுத்த கற்களால் பலிபீடங்களை அமைத்திருக்கிறார்கள், பாறைகளில் குகைகளைச் செதுக்கி அவைகளில் தங்கள் பொக்கிஷங்களைப் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். மேலும், இந்த நேபேத்தியர்கள் தங்களுடைய வீட்டை விலையேறப்பெற்ற வஸ்துக்களால் அலங்கரித்திருக் கிறார்கள், தங்கள் பட்டணத்தை பாதுகாக்க பணம் வசூலித்திருக்கிறார்கள், பட்டணத்தின் நுழைவாயிலிலும், பள்ளத்தாக்கின் விளிம்பிலும் பாதுகாப்புக்காக காவலர்களை நியமித்திருந்தார்கள்.

தேவனும் தம்முடையவர்களுக்கு மிகச்சிறப்பான பாதுகாப்பை அளித்திருக்கிறார். மோசே, தேவனிடம் உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும் எனக் கேட்டார். அதற்குத் தேவன், **இதோ, என்னண்டையிலே ஒரு இடம் உண்டு; நீ அங்கே கன்மலையிலே நில்லு, என் மகிமை கடந்து போகும்போது, நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து நான் கடந்து போகும் மட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன்** [ யாத்.33:21,22]. மேலும், ஜனங்கள் தங்கள் பாதுகாப்பிற்காக கன்மலையின் வெடிப்புகளுக்கு ஓடினதைக்குறித்து வேத வாக்கியங்கள் பல இடங்களில் பறைசாற்றுகின்றன [ நியா.15:8 ; உ.பாட்டு 2: 14 ; ஏசாயா 2:20]

தேவன் கன்மலையின் வெடிப்பிலே தம்முடைய கரத்தினால் மோசேயை மூடினபடியால், மேசே கன்மலை வெடிப்பிலிருந்து தேவனுடைய மகத்துவத்தை அறிவித்தார். இங்கே, மேசே தேவனையல்ல, தேவனுடைய மகிமையையே கண்டான். அதாவது, மோசேயாக இருந்தாலும் சரி, நாமாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும், தேவனைக் கண்டு உயிரோடிருக்க முடியாது [யாத்.33:20] என்கிறது பரிசுத்தப் பதிவு. எனவே, தேவனுடைய பரிசுத்தமான கிரியைகள் மற்றும் அவருடைய சமூகத்தை உணர்வதற்கு நாம் கன்மலை வெடிப்புக்குள் வர வேண்டும். ஆம் தேவன், அந்த நேபேத்தியர்களைப் போலவே, தமக்குப் பிரியமானவர்களைப் பாதுகாப்பான இடத்தில் எப்போதும் பாதுகாப்பாக வைத்திருக்கிறார். இதினிமித்தம் நாம் தேவனுடைய சமூகத்தை எல்லாக் காலங்களிலும் உணர முடியும்.

இன்று, இதை நாம் சபையோடு பொருத்திப் பார்க்க முடியுமா? சபையானது, தானியேல் தீர்க்கதரிசன புத்தகத்தில், கைகளால்

பெயர்க்கப்படாமல் பெயர்ந்து உண்டு வந்த ஒரு கல்லாக விவரிக்கப்பட்டுள்ளது [தானியேல் 2:34]. மேலும், ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறது [எபே.1:3]. அதினிமித்தம், கிறிஸ்துவுக்குள் வருவதற்கான ஒரே வழி ஞானஸ்நானம் தான் [ரோமர் 6:3; கலா. 3:27]. ஆம், அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள தான் சபையில் சேர்க்கப்பட்டார்கள் [அப்.2:47]. இப்படி, ஞானஸ்நானம் பெற்றவர்கள் சபைக்குள் அமர்த்தப்பட்டு, தேவனுடைய மகிமையை உணர்ந்த படியால், தானியேலில் முன்னுரைக்கப்பட்ட கல்லுக்குள் [சபைக்குள்] அங்கம் வகிக்கிறார்கள்.

உருவக நடையில், பாறை அல்லது கல் என்பது உறுதித் தன்மையையும், பாதுகாப்பையும் குறிக்கிறது. அதாவது யாத்.17:16–ல், கன்மலையிலிருந்து வந்த தண்ணீர் மூலமாகத்தான் தேவன், வனாந்திரத்தில் தமது ஜனமாகிய இஸ்ரவேல் ஜனங்களின் தாகம் தீர்த்து அவர்களைப் பாதுகாத்தார். இதினிமித்தம், I கொரி 10:4–ல், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, வனாந்திரத்தில் இஸ்ரவேலர் களோடே கூடச் சென்ற ஆவிக்குரிய கன்மலையாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறார். மேலும், மத்16: 18–ல் அப்போஸ்தலன் பேதுரு, கிரேக்க வார்த்தையாகிய petros அதாவது பாறை என்ற பதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடியால், நம் கர்த்தர் பேதுரு கிறிஸ்துவைப் பற்றி செய்த விசுவாச அறிக்கையின் மீது தமது சபையைக் கட்டுவதாக பேதுருவிடம் வாக்குரைத்தார் [மத்.16:18]. வாக்குரைத்தவர் உண்மையுள்ளவர்.

அதுபோலவே, வீடுகட்டுகிற புத்தியுள்ள, புத்தியில்லாதவர் களுடைய சம்பவத்தில் **சத்தியம்** என்பது உறுதியான கல்லாகப் போதிக்கப்படுகிறது. அதாவது, கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டினவன்தான் ஞானவான் என்றழைக்கப்படுகிறான். ஏனென்றால், பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின் மேல் மோதியும் அசையவில்லை. காரணம், அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது [லூக்கா 6:48]. மேலும், இங்கே வேதம் புறஜாதிகளுக்கும், அவிசுவாசிகளுக்கும் இன்னுமொரு கல்லை அறிமுகப்படுத்துகிறது. அதாவது, இயேசு கிறிஸ்து இடறுதற்கான கல்லாகவும், தவறுதற்கான கல்லாகவும் குறிப்பிடப் பட்டிருக்கிறார். ஆனாலும், நமக்கு ஒரு நாடிதுடிப்புள்ள நம்பிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்பது தான் அந்த நம்பிக்கை. ✝

# பரிசுத்த ஆவியானவரோடு நம்முடைய உறவு

## Our Relationship With The Holy Spirit

Samuel Matthews

எபேசியர் 3:14-19, இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு, நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து;



அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம்பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

பிரசங்கி ஒருவர், பரிசுத்த ஆவி இந்த வாலிபனுக்குள் வருவதாக என்று ஒரு வாலிபனுடைய தலையின்மேல் கைகளை வைத்துக் கட்டளையிட்டார். அதற்காக அப்பிரசங்கியார் அந்நியபாஷையிலே சுமார் அரைமணி நேரம் பேசினார். அந்த அறையில் பலரும் கர்த்தரை நோக்கி ஜெபித்துக் கொண்டும், ஆர்ப்பரித்துக் கொண்டும் இருந்தனர். உடனே, அந்த வாலிபனுடைய கண்கள் படபடத்தன, உதடுகள் உந்தப்பட்டு நாதமுதழுக்கத் தொடங்கின. பின்பு அந்த வாலிபன் சொல்லும்போது, நான் கர்த்தருடைய சமூகத்தைக் கண்டேன், அதன் பின்பு, ஒரு ஆற்றுப்படுகையையும் அதிலே ஒரு நீரூற்றையும், அதற்குச் சற்றருகில் ஒரு நீச்சல் குளத்தையும் கண்டேன். அதின் தண்ணீர்கள் கொப்பளிக்கத் தொடங்கின. தீடிரென அந்தத் தண்ணீர்

பொங்கி எழுந்து, ஆற்றுப் படுகை வழியாக என்னை நோக்கி வந்தது. அப்படிப் பொங்கிவந்த தண்ணீர் என்னை நெருங்கியதும், இதற்கு முன்பு ஒருபோதும் கேட்டிராத சத்தத்தைக் கேட்டேன். அந்தச் சத்தம் எனக்குள்ளிருந்து வந்தாலும் கூட, அது என்னாலே உருவாகவில்லை என்பதை அறிந்திருந்தேன். அதினிமித்தம் மாபெரும் மகிழ்ச்சி என்னை மூடிக்கொண்டது. அப்பொழுது நான் துள்ளிக்குதித்து, அறையிலிருந்த எல்லோரையும் போல ஆர்ப்பரிக்க ஆரம்பித்தேன். ஏனென்றால், நான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டேன் என்றான்.

இதைக்குறித்து நீங்கள் பயப்படவேண்டாம். ஏனென்றால், மேற்கண்ட சம்பவம் எந்நிலையிலும் நம்மை சோர்வடையச் செய்ய முடியாது. ஆனாலும், இவ்வுலகிலுள்ள பெரும்பான்மையோர், பரிசுத்த ஆவியை இவ்விதமாகத்தான் பெற்றுக்கொள்ள முடியும் என்று நம்புகின்றனர். இன்னும் சிலர் இது போன்ற அனுபவங்களுக்காக ஏங்குகின்றனர். இதற்குக் காரணம், பரிசுத்த ஆவியானவர் யார்? என்பதைக் குறித்த அறிவு இல்லாமைதான். நான் கிறிஸ்துவுக்குள் புதியவனாக இருந்தபோது, பரிசுத்த ஆவியானவரைப் பற்றி எனக்கு எந்தத் தெளிவும் இல்லாதிருந்தது. ஆகையால் பிரியமானவர்களே! நமக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் உள்ள உறவைப் பற்றி நாம் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். இவைகளை மனதில் இருத்தினவர்களாக, முதலில் பரிசுத்த ஆவியானவர் யாரல்ல என்பதைத் தெரிந்து கொள்வோம்.

இன்றைய கிறிஸ்தவ மார்க்கத்தில் உள்ள அநேகர், பரிசுத்த ஆவியானவரை ஏதோ ஒரு ஆவி என்றே கருதுகிறார்கள். ஆனால், முதலில், பரிசுத்த ஆவியானவர் ஓர் ஆவியல்ல என்பதை நாம் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். இன்று பலர், ஆவி என்றால், ஒருவர் மரித்த பிறகு, இப்பூமியில் சுற்றித்திரியும் அந்நபருடைய ஆவி அல்லது பிசாசு என்று நினைக்கின்றனர். ஆனால், பரிசுத்த ஆவியைப் பற்றி வேதாகமம் கொடுக்கும் விளக்கத்திற்கும் இதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. இதைக் குறித்து, பலர் பலவிதங்களில் போதித்தாலும், இன்றைய நாட்களில், அற்புத அடையாளங்களுக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஆம், பரிசுத்த ஆவியானவர், வேத எழுத்துக்களின் படி, உங்களையோ, என்னையோ, அல்லது வேறு எந்த ஒரு தொலைக்காட்சி ஊழியரையோ, அவர்கள் அறியாத பாஷைகளில் பேசவோ அல்லது மரித்த நபரை உயிரோடு எழுப்பும்படி தூண்டுவதோ இல்லை.

பரிசுத்த ஆவியானவரால், அற்புத அடையாளங்கள் ஒரு காலகட்டத்தில் நிகழ்த்தப்பட்டன. ஆனால், அவைகள் முதல்

நூற்றாண்டின் இறுதியிலேயே முடிவுபெற்றுவிட்டன. ஆம், முதல் நூற்றாண்டில் சுவிசேஷம் முற்றிலுமாகப் பதிவுசெய்யப்பட்டு, அற்புத அடையாளங்களால் உறுதி செய்யப்பட்டு நிலைநிறுத்தப்பட்டு விட்டது. எனவே, இன்றைய நாட்களில் அற்புத அடையாளங்களுக்கு எந்தவொரு அவசியமும் இல்லையென்ற இந்த உபதேசத்தை நாம் தெளிவாகக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

அதாவது, பிரதான கட்டளைக்கு முன்பாக, அப்போஸ்தல வரமானது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம் உயிர்த் தெழுதலுக்கு முன்பாக அந்தப் பன்னிவருக்குத்தான் கொடுக்கப் பட்டது [மத்.10]. அந்நேரத்தில், அப்போஸ்தலர்கள் புற ஜாதிகளிடத்தில் போகாமல், நேரடியாக இஸ்ரவேல் ஜனங்களிடத்திற்குப் போகும்படியாக கிறிஸ்துவால் பணிக்கப்பட்டார்கள். காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போகும்படி கட்டளையிடப்பட்டார்கள் [மத்.10:5,6] ஆகையால், இந்த ஊழியம் வலுப்பெற இஸ்ரவேல் வீட்டாரின் தேசத்திற்கு மட்டும் தான் என்பதை நாம் தெளிவுறத் தெரிந்து கொள்ள வேண்டும். இக்கட்டளையோடு சேர்த்து பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கும் படியாகவும் அப்போஸ்தலர்களுக்கு கிறிஸ்து கட்டளையிட்டார். இந்த ஊழியத்தையும், அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையையும் அவர்களுக்குக் கொடுத்தார். வியாதியுள்ளவர்களைச் சொஸ்த மாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள். மரித்தோரை எழுப்புங்கள் பிசாசுகளைத் துரத்துங்கள் என்று அவர்களுக்கு கிறிஸ்து அதிகாரம் கொடுத்தார் [வசனம்8]. இது, அப்போஸ்தலர்களிடமிருந்த வந்த செய்கைகள் அனைத்தும் தேவனிடத்திலிருந்து வந்ததுதான் என்பதற்குப் பலமான சான்றாக அமைந்தது.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அப்போஸ்தலர் களுக்கு கிறிஸ்துவால் புதிய கட்டளை கொடுக்கப்பட்டது. இது, பிரதான கட்டளை என்றழைக்கப்படுகிறது [மத்தேயு 28:18-20]. பெந்தெகொஸ்தே நாளிலே, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றபிறகு இக்கட்டளையை நிறைவேற்ற ஆரம்பித்தார்கள் [அப்போஸ்தலர்2]. அதன் பிறகு, அவர்கள்; காணாமற் போன இஸ்ரவேல் வீட்டாரைத் தாண்டி, எல்லா தேசங்களுக்கும் சென்று ஊழியத்தைச் செய்தார்கள் [மத்தேயு 28:19]. அதற்காக, அவர்கள் செய்த பிரசங்கமும் அதற்கேற்றபடி இருந்தது. ஆம், அவர்கள் முன்பு பரலோக ராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கித்தார்கள். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அவர்கள் சுவிசேஷமாகிய நற்செய்தியைப் பிரசங்கித்தார்கள் [மாற்கு 16:15,16]. அந்த நற்செய்தி என்னவென்றால், பழைய ஏற்பாடு வாக்குத் தத்தம் செய்த கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் போதித்த ராஜ்ஜியமாகிய சபை வந்துவிட்டது.

அதிலே பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்ட அனைவரும் சேர்க்கப்படுவார்கள் என்பதுதான் அந்த நற்செய்தி (கொலோ.1:13). கிறிஸ்து, அவர்களை அவருக்கு எருசலேமிலும் யூதேயாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் சாட்சிகளாயிருக்கும்படி பெலப்படுத்தினார் (அப்.1:8).

இன்றைய நாட்களில், கிறிஸ்தவர்கள் தொடர்ந்து பிரதான கட்டளையை நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்கள். ஆனால், அவைகளை அற்புத அடையாளங்களால் அல்ல, கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அன்று அப்போஸ்தலர்களுக்கு அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையைக் கொடுத்ததின் நோக்கம் தேவன் தமது வசனத்தை உறுதிப்படுத்தத்தான். ஆகையால், இன்றைய நாட்களில் புதிதாக எந்தவொரு வெளிப்பாடும் இல்லாதபடியால், அற்புத அடையாளங்கள் அவசியமில்லை. ஏனென்றால், தேவன் தமது வசனத்தை உறுதிப்படுத்திவிட்டார். அற்புத அடையாளம் தேவை என்று போதிக்கும் போது, நாம் தேவனுடைய செயலைச் சந்தேகிக்கிறோம் என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமாகிறது. சிந்திப்போம்!

சரி, பரிசுத்த ஆவியானவர் ஆவியும் இல்லை, அவர் அற்புத அடையாளங்களும் செய்யவில்லை என்றால், பரிசுத்த ஆவியானவருடைய நோக்கம் என்ன?

பரிசுத்த ஆவியானவர் யார்? இதைப் புரிந்துகொள்வது எளிதானது. ஏனெனில், அவர் தேவத்துவத்தில் ஒருவர். அவரும் ஆள்தத்துவம் உடையவர்தான். எப்படியெனில், தேவன் நம்மை நேசித்து நாம் அவரோடு நெருக்கமான ஐக்கியம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். இயேசு கிறிஸ்துவும், குஷ்டரோகியை நேசித்தபடியால்தான், அவர் தமது கையை நீட்டி, அவரைத் தொட்டு எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார் (மாற்கு 1:40,41).

இப்படியாக, தேவன் நாம் உறுதியான ஆவிக்குரிய வாழ்க்கை வாழவேண்டுமென்று விரும்பி, அவர் நமக்கு பரிசுத்த ஆவியின் வரத்தைத் தந்து, பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் செய்யும்படி அனுமதித்து நம் ஆவிக்குரிய வாழ்வில் நமக்கு புதிதும், ஜீவனுக்கேதுவான பெலனையும் தருகிறார். எபே. 3:16 – ல் அப்போஸ்தலனாகிய பவுல், எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்கள் ஆவியிலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்பட வேண்டுமென்று ஜெபித்தார். ஆக, நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரை ஒருபோதும் துக்கப்படுத்த நாம் துணிய வேண்டாம்! காலம் சமீபித்திருக்கிறது.

தேவன்

# பரிசுத்த ஆவியானவரின் குணாதிசயங்கள்

❋ அவர் நித்திய ஜீவனைத் தருகிறார் ( யோவான் 6:63; I கொரி. 3:6. )

❋ அவர் என்றென்றைக்கும் நம்மோடு இருக்கிறார் ( யோவான் 14:16 )

❋ அவர் கிறிஸ்தவர்களிடத்தில் வாசம் செய்கிறார் ( யோவான் 14:17; I கொரி 3:16 ).

❋ அவர் கிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுக்கிறார் ( யோவான் 15:16 )

❋ அவர் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும் நியாயத் தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துகிறார் ( யோவான் 16:8 ).

❋ அவர் நமக்கு தேவனிடத்திலிருந்து வரமாக தரப்படுகிறார் ( அப்போஸ்தலர் 2:38 )

❋ அவர் நாம் தேவனுடைய பிள்ளைகளென்று சாட்சி கொடுக்கிறார் ( ரோமர் 8:16 )

❋ அவர் தேவனுடைய அன்பை நம் இதயங்களில் ஊற்றுகிறார் ( ரோமர் 5:5 )

❋ அவர் நம்முடைய பெலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார் ( ரோமர் 8:26 )

❋ அவர் நம்மைக் கர்த்தருடைய சாயலில் மாற்றுகிறார் ( கொரிந்தியர் 3:18 )

❋ அவர் நம் இரட்சிப்பின் முத்திரையாக இருக்கிறார் ( எபேசியர் 1:13 )

❋ அவர் நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறார் ( I தெசலோனிக்கேயர் 1:6 )

❋ அவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ( ரோமர் 8:26 )

# வசன ஆராய்ச்சி

I கொரிந்தியர் 2:1-16

Jerry Bates

- பவுல் கொரிந்தியர்களிடத்தில் தேவனைப் பற்றிய சாட்சியை சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை (வசனம்1)
- பவுல் கொரிந்தியர்களுக்கு எதைப் பிரசங்கித்தார் (வசனம்2)
- பவுல் கொரிந்தியர்களோடு வாழ்ந்தபோது எப்படி இருந்தார்? (வசனம்3)
- பவுல் தன்னுடைய பிரசங்கத்தோடு எதைச் சேர்க்கவில்லை? (வசனம்5)
- பவுலின் பேச்சு எவைகளில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது? (வசனம்5)
- பவுல் யாருக்குள்ளே ஞானத்தைப் பேசினார்? (வசனம்6)
- பவுல் தேவ ஞானத்தையே பேசினார் (வசனம்7)
- இப்பிரபஞ்சத்துப் பிரபுக்கள் அதை அறியவில்லை, அறிந்தார்களானால் மகிமையின் கர்த்தரை அவர்கள் என்ன செய்திருக்க மாட்டார்கள்? (வசனம்8)
- வசனம் 9 எந்த பழைய ஏற்பாட்டு வசனத்தின் மேற்கோளாயிருக்கிறது?
- ஆவியானவர் எவைகளை ஆராய்கிறார்? (வசனம்10)
- மனுஷனுக்குரியவைகளை யார் அறிகிறார்? (வசனம்11)
- கொரிந்தியர்கள் யாரைப் பெற்றிருந்தார்கள்? (வசனம் 12)
- யார் போதிக்கின்ற வார்த்தைகளாலே பவுல் பேசினார்? (வசனம்3)
- ஜென்ம சுபாவமான மனுஷன் தேவனுடைய ஆவிக்குரியவைகளை அப்படிப் பார்க்கிறான்? (வசனம்14)
- ஏன் ஜென்ம சுபாவமான மனுஷன் ஆவிக்குரியவைகளை அப்படிப் பார்க்கிறான்? (வசனம்14)
- ஆவிக்குரியவன் எதை ஆராய்ந்து நிதானிக்கிறான்? (வசனம்15)
- யாருடைய சிந்தை கிறிஸ்தவர்களுக்கு உண்டாயிருக்கிறது? (வசனம் 16).

# 1 கொரிந்தியர் 2:1-16

*சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன். உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது. அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம். இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் தம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம். அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே. எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், அறிந்திருக்கிறார்.*

*மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப் போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும் படிக்கு தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி பேசுகிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக் குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம். ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது.*

## இரட்சிப்பு

# பாவத்தின் வஞ்சனை

# The Deceitfulness of sin

Vance Hutton

**பா**வம் என்பது பெரிய விளைவுகளைக் கொண்ட சிறிய சொல்லாகும். பாவம், அது சம்பந்தமான கொடூரத் தண்டனைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அதாவது, ஆதிமனிதன் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டது, நோவாவின் நாட்களில் ஜலப்பிரளயம், சோதோம் கொமோரா அழிக்கப்பட்டது, மாபெரும் சாம்ராஜ்ஜியங்கள் விழுந்தது போன்றவைகளுக்கெல்லாம் பாவம் தான் மையக்காரணமாயிருந்தது. அதிலும் குறிப்பாக, ஜனங்கள் நித்தியத்தை இழந்து போவதற்கு பாவம் தான் பிரதான காரணியாயிருக்கிறது. பாவம் எந்த ஜனத்திற்கும் இகழ்ச்சியாயிருக்கிறது [நீதி.14:34].

**பாவம் என்றால் என்ன?** இது பற்றி வேதவாக்கியங்களில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. அதாவது, நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவமாகும் [I யோவான் 3:4], அநீதியெல்லாம் பாவந்தான் [Iயோவான் 5:17], ஒருவர் நன்மை செய்ய அறிந்திருந்தும், அதைச் செய்யத் தவறுவது பாவமாகும் [யாக்.4:17], மனசாட்சியை மீறுவது பாவமாகும் [ரோமர் 14:23]. சுருங்கச் சொன்னால், தேவனைப் பிரியப்படுத்துவதில் தோல்வியடைதலாகும்.

பாவத்தின் கொடூரத்தை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்வதற்கு, அதன் வஞ்சகத் தன்மையை நன்றாகக் கவனிக்க வேண்டும் எபி.3:13 -ம் வசனம் பாவத்தின் விளைவைப் பற்றி இங்ஙனம் விவரிக்கிறது. உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள். அதாவது பாவம் ஒருவரைத் தவறாக வழி நடத்துகிறது, ஏமாற்றுகிறது மற்றும் மோசம் போக்குகிறது. ஆதியாகமம் 3-ம் அதிகாரத்தில் சாத்தான் அறிமுகப்படுத்தப்படும் போது, அவன் ஏவாளை வஞ்சிப்பதாகத்தான் வசனங்கள் குறிப்பிடுகின்றன. Iதீமோ. 2:14; II கொரி.11:3]. பாவம் என்பது தவறானதாக இருந்தாலும் அது வெளிப்புறமாக சரியானது போல் தோற்றமளிக்கும். எப்படியெனில், சாத்தான் பாவத்தை மனிதன் விரும்பப்படத்தக்க ஒன்றாக மாற்றுகிறான். ஆனால், அது அசிங்கமானது என்பதை பின்பாகத் தான் மனிதன் உணருகிறான். மேலும், பாவம் நமக்குத் தீங்கிழைக்காதது போலத் தோற்றமளித்தாலும், உண்மையிலேயே அது அபாயகரமானது; பிரிவினை மற்றும் அழிவை ஏற்படுத்தக்கூடியது. இன்னுமாக, அது நம்மை நிரந்தரமாகப் பிரித்தும் விடுகிறது.

**பாவத்தின் வஞ்சனையான வழிகள்:**

**பாவம் நமக்குள் தவறு இருப்பதை மறைத்து நம்மை வஞ்சிக்கிறது.**

சிலர், தாங்கள் ஒருபோதும் பாவமே செய்யாதது போல உணர்கிறார்கள் அல்லது பாவம் செய்வது தங்கள் வாழ்க்கையில் ஒரு பொருட்டல்ல என்று நினைக்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே மனிதர்கள் வழிதப்பிப்போன ஆடுகளைப் போலிருக்கிறார்கள். ஆம், பாவம் செய்யாத மனுஷன் இல்லையே [I ராஜா.8:46] ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியில் இல்லை [பிர.7:20]. எல்லாரும், பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி [ரோமர் 3:23] என்றுள்ளது. நாம் வேறுவிதமாகச் சிந்தித்தாலும் வஞ்சிக்கபடுகிறோம் [I யோவான் : 8-10]. மேலும், அப்போஸ் தலனாகிய பவுல் ரோமர் 1-3 அதிகாரங்களில் இவைகளெல்லா வற்றையும் தெளிவாக விளக்குகிறார். யூதர்களாலும் சரி, புறஜாதிகளானாலும் சரி அவர்கள் பாவத்தின் பிடியில் இருந்தால் அதன் காரணமாக அவர்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள் என்று எடுத்துரைத்துள்ளார். ஆக, எல்லோருமே பாவத்தின் பிரச்சனை களோடு எதிர்த்துப் போராட வேண்டியதாயிருக்கிறது. பாவம் நம்மை மேற்கொள்ள ஒருபோதும் நாம் அனுமதிக்கவே கூடாது என்பதில் தீர்மானமாயிருக்க வேண்டியது அவசியம். இதுதான் தேவனால் எந்நாளும் எதிர்பார்க்கப்படுகிறது.

**பாவம் மகிழ்ச்சியை முன் வைத்து நம்மை வஞ்சிக்கிறது.**

இக்காரியத்தில், தேவ தாசனாகிய மோசே ஞானமான முடிவெடுத்தார். அவர் அநித்தியமான பாவ சந்தோஷங்களை வெறுத்துத் தள்ளினார் [எபி.11:24,25]. Iதெச.2:10-12 வசனங்கள் அநீதியினால் உண்டாகும் மகிழ்ச்சியைப் பற்றிப் பேசுகிறது. Iதீமோ.5:6, சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள் என்று எச்சரிக் கிறது. விதைக்கிறவனுடைய உவமையில் வரும் கற்பாறையான நிலம், பாவ சந்தோஷத்தின் வஞ்சனையை நமக்குக் காட்டுகிறது. இப்படிப்பட்ட பாவத்தின் வஞ்சனைக்குள் நாம் விழுந்து போகாமல் வசனத்தின் வழிகாட்டுதலால் வளமான ஆவிக்குரிய வாழ்வைப் பெறுவோம்.

**பாவம் தன் பரந்த செயல்களினால் நம்மை வஞ்சிக்கிறது:**

எல்லோரும் பாவம் செய்து பாவ வலைக்குள் தங்களைச் சிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், வேதம் சொல்லுகிறது தீமை செய்ய திரளான பேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக [யாத்.232]. நோவாவின் நாட்களில் அவரும், அவருடைய குடும்பத்தாரும் தவிர மற்றவர்கள் தங்கள் மனம்போன போக்கிலே தான் வாழ்ந்திருக் கிறார்கள் [ஆதியாகமம் 6] இன்றும் அநேகர் தீமையென்று தெரிந்தும் அந்தப் பாதையில் தான் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். இடுக்கமான வாசல் வழியாய் உட் பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமாயிருக்கிறது;

அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர் [மத்.7:13]. நாம் பாவத்தின் இந்நிலையால் வஞ்சிக்கப் படாதிருப்போமாக.

**பாவம் தன் முன்னேற்றத்தினால் நம்மை வஞ்சிக்கிறது:**

சிலர் பாவத்தீயில் விளையாடத் தீவிரிக்கிறார்கள். பலர் பாவத்தை சிறிய விஷயமாகத்தான் பார்க்கிறார்கள். இன்னும் சிலர், பாவம் தங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதை அறியாமலிருக்கிறார்கள். பாவத்தின் அழிவு மற்றும் அதின் ஆதிக்கத்தின் பாதையை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். பாவம் தொடரோட்டத்தைப் போன்றது. அதாவது மனிதன் முதலில் தன் சுய இச்சையினால் இழுக்கப் படுகிறான். பின்பு அதினாலேயே சோதிக்கப்படுகிறான். அந்த இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கிறது. அந்தப் பாவம் முடிவாக மரணத்தைப் பிறப்பிக்கிறது [யாக்கோபு 1:13-15]. மனிதர்கள் பாவ வலையில் உடனே விழுந்து விடமட்டார்கள். ஆனால், பாவம் கொஞ்சம் கொஞ்சமாக மனிதர்களிடத்தில் முன்னேறி அவனை முற்றிலுமாகத் தன் பக்கம் இழுத்துக்கொள்ளுகிறது. ஜாக்கிரதை யாயிருப்போம்!

**பாவம் அதின் வாக்குறுதிகளால் நம்மை வஞ்சிக்கிறது:**

நாம் மாம்சத்திற்கென்று விதைத்துவிட்டு நித்திய ஜீவனை அறுவடை செய்வோம் என்ற ஒரு பொய்யான தோற்றத்தைப் பாவம் நமக்குக் காட்டுகிறது. இப்படி ஒருபோதும் நடக்காது [கலா.6:7,8]. பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதும்போது, சாத்தானுக்காக வாழ்ந்துவிட்டு, கர்த்தரால் புகழப்படுவோம் என்று நம்பி ஏமாந்து விடாதீர்கள் என்று எச்சரித்து எழுதியிருக்கிறார் [I கொரி.6:9-11]. பாவமானது, சுதந்திரத்தை வாக்களித்து நரகத்தைக் கொண்டுவரக் கூடியதாயிருக்கிறது. விழிப்புடன் இருப்போம்!

**பாவம் அதின் வல்லமையினால் நம்மை வஞ்சிக்கிறது:**

பாவம் நம்மை மனச்சாட்சியில் சூடுண்டவர்களாக மாற்றுகிறது [ Iதீமோ.4:2]. இது ஒருவரை தனக்கு முற்றிலுமாக அடிமையாக்கும் வல்லமை பெற்றிருக்கிறது [II பேதுரு 2:19]. ஆனாலும், நாமெல்லாரும் வசனத்தின் வல்லமையால் பாவத்தின் மீது வெற்றி வாகை சூட முடியம். ஆம், ஜெபத்தினாலும், அர்ப்பணிப்புள்ள வாழ்க்கையினாலும் இது சாத்தியமாகும் [வெளி.12:11]. ஒப்புக் கொடுப்போம் ஒன்றான மெய் தேவனுக்கு!

**பாவத்தினால் வஞ்சிக்கப்படாதிருங்கள்!**
**ஒருவேளை வஞ்சிக்கப்பட்டால், அதற்காக**
**நித்திய நித்தியமாக வருத்தப்படுவீர்கள்!**
**ஆகையால், வஞ்சிக்கப்படாதிருங்கள்!**

இரட்சிப்பு

# இயேசு சிலுவையில் அறையப்படுதல்

# The Crucifixion of Jesus

*Rusty Russwurm*

**வா**ழ்க்கையின் ஏதாவது ஒரு கட்டத்தில் இயேசுவின் பலியை அல்லது அவர் செய்த தியாகத்தைப் பற்றி யாராவது ஒருவராகிலும் சொல்லக் கேட்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். பிரசங்கத்தில் பிரசங்கி யாரோ அல்லது உரையாடலின் போது நண்பர்களோ இயேசுவின் தியா கத்தை அல்லது பலியைப் பற்றி கடந்த இரண்டாயிரம் ஆண்டு களுக்கு மேல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் இயேசுவின் பலியைப் பற்றி நினைக்கும் போதெல்லாம், அவர் சிலுவையில் தொங்கும் காட்சியைப் பற்றி மாத்திரமே நினைக்கிறேன். அப்படி நினைக்கும் நேரங்களில், இயேசு இவ்வுலகை இரட்சிக்க என்ன வெல்லாம் செய்தார் என்பது பற்றிய என் கண்ணோட்டம் ஒரு எல்லைக்குட்படுத்தப்படுகிறது. நாமெல்லாருமே வாழ்க்கையின் ஏதாவதொரு கட்டத்தில் இயேசுவின் பலியை முழுமையாக உணராத குற்ற உணர்வோடு காணப்படுகிறோம் என நான் நம்புகிறேன்.

மத்தேயு26:47 – வசனங்கள் இயேசுவைப் பிடிக்க யூதாஸ் கூட்டிச் சென்ற கூட்டத்தைப் பற்றி விவரிக்கிறது. அவர்கள் பட்டயங்களை யும், தடிகளையும் எடுத்துச் சென்றார்கள். இயேசுவைக் கைது செய்ய ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் ஒரு கூட்டம் தேவைதானா? அதற்கான பதில் நமக்கு நிச்சயமாகத் தெரியும். தேவையில்லை என் பது தான். ஏனென்றால், இயேசு ஒரு பெருங்குற்றவாளி அல்ல. 1பேதுரு 2:21,22 வசனங்களில் அவர் பாவஞ்செய்யவில்லை என்று பேதுரு குறிப்பிட்டி ருக்கிறார். எனவே, பாவமே செய்யாத ஒரு மனி தன், தான் ஒரு பெருங்குற்றவாளியைப் போல் இழுத்துச் சொல்லப் பட்டிருப்பதை எப்படித் தாங்கியிருக்க முடியும்? அவருக்கு எவ்வளவு அவமானமாய் இருந்திருக்கும்? இருந்த போதிலும், இயேசு தம்மைத் தற்காத்து கொள்ள எதையும் செய்யவில்லை ஏனென்றால், அவையெல்லாம் தேவனுடைய திட்டத்தின் பகுதியாயிருந்தது.

மத்தேயு 26:59,60 ம் வசங்களில் பிரதான ஆசாரியரும், மூப்பரும் மற்றும் ஆலோசனைச் சங்கத்தார் யாவரும் பொய் சாட்சிகளைத் தேடினார்கள். ஆலோசனைச் சங்கத்தார் இயேசுவை குற்றவாளியகத்

தீர்த்து அவருக்கு மரணதண்டனை கொடுக்கத் தீர்மானித்து ஒன்றாகக் கூடினார்கள். குற்றப்படுத்தவும் பொய்சாட்சிகளை ஆயத்தப் படுத்தினார்கள். பெரும்பாலானோர் தமது விசாரணைக்காகப் போராடுவார்கள். ஆனால், இயேசுவே அப்படிச் செய்யவில்லை. இங்கே அவர்களுக்கு முழு ஒத்துழைப்பையும் அவர் கொடுத்தார். ஏனென்றால், இதுவும் தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியா யிருந்தது. பின்பு மத்தேயு 27ம் அதிகாரத்தில், பிரதான ஆசாரியர் களாலும்,மூப்பர்களாலும் இயேசு பிலாத்துவினிடத்தில் கொண்டு வரப் பட்டார். ஏனென்றால், ரோம சாம்ராஜ்ஜியத்தின் கையெழுத்தில்லாமல் அவர்களால் இயேசுவுக்கு மரண தண்டனையை விதிக்க முடியாது. தேசாதிபதியாகிய பிலாத்துவினிடத்தில் அவர்கள் இயேசுவை கொண்டு வந்த போது காரியங்களைச் சரி செய்யும் வாய்ப்பு அவனுக்கி ருந்தது. பிலாத்து இயேசுவிடத்திலிருந்து யாதொரு குற்றத்தையும் கண்டுபிடிக்காத காரணத்தால், அவரை விடுவிக்கும் அதிகாரம் அவ னுக்கு இருந்து. ஆனால், அதை அவன் பயன்படுத்தாமல் ஜனங் களைத் திருப்திபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டான். அதே நேரத்தில் இயேசுவை விடுவிக்கவும் சாதுரியமாக முயற்சித்தான். பண்டிகை தோ றும் ஒரு கைதியை விடுதலையாக்குவது வழக்கமாயிருந்த படியால், பிலாத்து யூதர்களைப் பார்த்து எவனை நான் உங்களுக்கு விடுதலை யாக்க வேண்டுமென்றிருக்கிறீர்கள்? பராபாசையோ? கிறிஸ்து என்னப் படுகிற இயேசுவையோ? என்று கேட்டான் ( மத்தேயு 27:18). பிரதான ஆசாரியர்களும், வேதபாரகரும் பரபாசை விடுதலையாக்கும் படி கூச்ச லிட்ட ஜனக்கூட்டத்தைக் பாருங்கள். ஒரு வேளை, நீங்கள் தவறாக குற்றஞ்சாட்டப்பட்டு உங்கள் மரணத்தைத் தங்கள் கைகளில் வைத்தி ருக்கும் ஜனக்கூட்டத்திற்கு முன்பாக நீங்கள் நிற்கிறீர்கள்.அப்போது அந்த ஜனங்கள் உங்களை விடுவிப்பதற்குப் பதிலாக வேறொருவரை விடுவித்தால் உங்களுக்கு எப்படி இருக்கும்?

மத்தேயு 27:26 ல் இயேசு வாரினால் அடிக்கப்பட்டார் என்று எழுதப் பட்டிருக்கிறது. அந்நாட்களில் கைதிகளின் முதுகில் வாரினால் அடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அந்த வார் அல்லது சவுக்கின் முற்புறத்தில் அடிக்கப்படுபவருடைய சதையைப் பிய்த்துக் கொண்டு வரும்படியாக எலும்பு மற்றும் உலோகத் துண்டுகளைப் பதித் திருப்பார்கள். இயேசு அக்காயங்களுடன் வேதனையைக் தாங்க முடி யாத நிலையில் சிலுவையைத் தூக்கி நடந்து சென்றார் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

மத்தேயு 27:31 ம் வசனங்களில் தேசாதிபதியின் போர்ச்சேவகர் முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின் மேல் வைத்து அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து அவர் முன்பாக முழங்காற்படியிட்டு யூதருடைய ராஜாவே வாழ்க என்று அவரைப் பரியாசம் பண்ணித் துப்பி அவர்மேல், அந்தக் கோலை எடுத்து அவரைச் சிரசில் அடித்தார்கள். இது இயேசுவுக்கு அதிக வேதனையைக் கொடுத்தாலும் அவரைப் போர்ச்சேவர்கள் காரித்துப்பி கோலினால் சிரசில் அடித்து அவருக்குக் காயம் இங்கே அவர்களுக்குக் காயம் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் செய்யாமல், அவரைத் தாழ்மைப் படுத்தி சிறுமைப்படுத்த வேண்டுமென்ற நோக்கில் செய்தார்கள்.

இவைகளெல்லாம் நடந்த பிறகு அவர்கள் இயேசுவை வெளியே விட்டு அவர் கீழே விழும் வரை சிலுவையைச் சுமக்கும் படி செய்தார்கள். கடைசியாக கொல்கொதா மலைக்கு அவரைக் கொண்டு போய் அங்கே சிலவையிலறைந்தார்கள். சிலுவையிலறையப்பட்டது தான் இயேசுவினுடைய தியாகத்தின் உச்சமாக இருந்தது. ஆனால், அந்தப்பாடுகளுக்குள்ளாக அவரைக் கொண்டு சென்ற மற்ற சம்பவங்களை நாம் மனதில் வைத்தால் தான், அவர் என்னென்ன பாடுகளையெல்லாம்பட்டார் என்பதைப் பற்றிய சரியான புரிந்து கொள்ளுதல் நமக்கு ஏற்படும்.

## மனதின் பாவங்கள்

*தீமையான எண்ணங்களைப் பற்றிய* கேடான மனது
*(மத்தேயு 5:27,28)*

*சுயமதிப்பபைப் பற்றிய* மேட்டிமையான மனது
*(ரோமர் 12:16)*

*அவிசுவாசத்தைப் பற்றிய* சந்தேகிக்கும் மனது
*(லூக்கா 24:38)*

*கவலைகளைப் பற்றிய* சிந்திக்கும் மனது
*(லூக்கா 12:29)*


*பொருளாசை கொண்ட* சுயநலமான மனது
*(லூக்கா 12:17-21)*

## இரட்சிப்பு

# இயேசுவின் உயிர்த்தெழுதல்

# The Resurrection of Jesus

இயேசு கிறிஸ்து இவ்விதமாகச் சொன்னார்: வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார் [மத்தேயு 11:28 – 30].



கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே. ஆகையால் கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம். மரணம் இனி அவரை ஆண்டு கொள்வதில்லை [ரோமர் 6:3–9]. ✝

### இரட்சிப்பு

# நீங்கள் இரட்சிக்கப்பட்டதை எப்படி அறிவது

## How To Know You Are Saved

*Jimmy Clark*

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவ குமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும் தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன் [I யோவான் 5:13]. இந்த வசனப்பகுதி தொடர்ந்து விசுவாசத்தில் இருக்கும் ஒரு தேவனுடைய பிள்ளை தான் இரட்சிக்கப்பட்ட நிலையில் இருப்பதை அறிந்து கொள்ள முடியும் என்று சொல்கிறது. ஒருவர் விசுவாசத்தை விட்டு வழுவிச் சென்றால் கிருபையிலிருந்து விழுந்து போவது எப்படிச் சாத்தியமோ அதே போல் ஓர் உண்மையுள்ள தேவனுடைய பிள்ளை தான் இரட்சிக்கப்பட்டதையும், தனக்கு நித்திய ஜீவன் உண்டென்பதையும் அறிந்து கொள்வதும் சாத்தியமே. ஒருவர் தான் இரட்சிக்கப்பட்டதை அறிந்துகொள்வதை விட மேலான ஒன்று இல்லை. ஆயினும், மத உலகம் ஒருவர் தான் இரட்சிக்கப்படுவதைக் குறித்து பல பொய்யான தகவல்களைப் பரப்பிக் கொண்டிருக்கிறது. இப்போது ஒருவர் தான் இரட்சிக்கப்பட்டதை அறிந்து கொள்ளும் மூன்று அடிப்படை உண்மைகளைத தெரிந்து கொள்ளலாம்.

**அதிகாரப்பூர்வமான வெளிப்பாடு அவசியமாகிறது.**

ஒருவர் பொய்யை நம்புவதால் அது அவரை இரட்சிப்புக்கு வழி நடத்தாது. ஆம், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத் தக்கதாய் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற் போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக் குள்ளாக்கப்படும் படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். [II. 2:10–12]. சத்தியம் மாத்திரமே ஒருவரை விடுதலையாக்கும் [ யோவான் 8:32]. தேவனுடைய வசனமே சத்தியமாயிருக்கிறது [ யோவான் 17:17] மனித இனம் ஒரு வெளிப்பாட்டினால் தீடீரென இரட்சிக்கப்படுவதில்லை. இரட்சிப்பு தேவனுடையதாயிருக்கிறது.[ வெளி 7:10] மனிதன் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் சுவிசேஷத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் [ரோமர் 1:16].

**அறிவுப்பூர்வமாக சிந்திக்கும் திறன் அவசியமாகிறது.**

மனித இனம் தேவனுடைய வார்த்தையோடு தொடர்பை ஏற்படுத்தியும் இரட்சிக்கப்படவில்லையென்றால் [எபிரெயர் 4:2].

தேவனுடைய வார்த்தை என்னும் சத்தியத்தைக் காண அறிவுப்பூர்வமாக சிந்திக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கே சகோதரர்களுக்கு எழுதும் போது எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள் [ I தெசலோனிக்கேயர் 5:21] என்று எழுதுகிறார். லூக்கா ஆசிரியர் பெரேயவிலுள்ள கிறிஸ்தவர்களைப் பற்றிச் சொல்லும்போது அந்தப் பட்டணததார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தேறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெச லோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் என்று சொல்கிறார். [அப்போஸ்தலர் 17:11] சில யூதர்கள் வேத வசனத்தை ஆராய்ந்து பார்த்து தாங்கள் இரட்சிக்கப்பட்டதாக நினைத்தார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து அவர்களுடைய தவறான எண்ணத்தைச் சாடினார். [யோவான் 5:39-40] அப்போஸ்தலனாகிய பவுல் தன் சொந்த தேசத்தாருடைய பக்தி வைராக்கியத்தைக் குறித்து அறிந்திருந்தாலும் கூட அவர்கள் அறியாமையில் இழந்து போகிறதைக் கண்டு அவர்கள் இரட்சிக்கப்படும் படி ஜெபித்தார் [ரோமர் 10:1-3]. எத்தியோப்பிய மந்திரி தன்னுடைய ஆவிக்குரிய நலனுக்கு தேவவாக்கியங்களைக் குறித்து சரியான அறிவு அவசியம் என்பதை அறிந்திருந்தார் [அப்.8:26-39].

**சரியான கீழ்ப்படிதல் அவசியமாகிறது.**

ஒருவர் சுவிசேஷத்தோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளலாம், அறிவுப்பூர்வமாக ஆராயலாம். அப்படியிருந்தும் கூட இழந்து போகலாம். அதற்கான காரணம் என்னவென்றால், சுவிசேஷத்திற்கு முழுமையாக கீழ்ப்படியாமலிப்பது தான். பேலிக்சும், அவன் மனைவியும் கிறிஸ்துவை விசுவாசித்தார்கள். ஆனால், அவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியவில்லை [அப்.24:24, 25] இரட்சிக்கப்படுவதற்குக் கீழ்ப்படிதல் மிகவும் அவசியமாகிறது. தாம் பூரணரான பின்பு தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி [எபிரெயர் 5:9] என்று எழுதப்பட்டிருக்கிறது. சிலர் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்றும், ஆண்டவரென்றும், இரட்சகரென்றும் விசுவாசிக்கிறார்கள். இருந்த போதிலும் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டதாகவும் விசுவாசிக்கிறார்கள் [கலாத்தியர் 3:26,27]. மனிதன் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள என்னென்ன காரியங்கள் அவசியமென்று தேவன் சொல்லியிருக்கிறாரோ அந்த காரியங்களுக்கெல்லாம் மனிதன் மனதார கீழ்ப்படியவில்லை யென்றால் அவன் பாவத்திலிருந்து விடுதலை பெறவே முடியாது. [ரோமர் 6:3-18] சுவிசேஷமல்லாத ஒன்றிற்கு ஒருவர் கீழ்ப்படியும் போது அவர் இரட்சிக்கப்பட முடியாது. தேவன் மனிதன் இரட்சிக்கப்படும்படியாக எவைகளையெல்லாம் சொல்லியிருக்கிறாரோ அவைகளை அப்படியே செய்யும் போது மாத்திரமே இரட்சிப்படைய முடியும்.




## மத்தேயுவில் தேடுதல் வேட்டை
## From Mathew Hunt

**Rebecca Rushmore**

- ஆபிரகாமுக்கும், தாவீதுக்கும் இடையில் எத்தனை சந்ததிகள் உள்ளன? தாவீதிலிருந்து பாபிலோனிய சிறையிருப்பு வரை எத்தனை சந்ததிகள் உள்ளன? பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து கிறிஸ்துவரை எத்தனை சந்ததிகள் உள்ளன?
- யோவான் ஸ்நானன் வனாந்திரத்தில் எதைப் புசித்தார்?
- ஞானஸ்நானத்திற்குப் பிறகு இயேசு கிறிஸ்து சாத்தானால் சோதிக்கப்படுவதற்கு முன்பாக வனாந்திரத்தில் எத்தனை நாள் உபவாசம் இருந்தார்?
- இயேசு கிறிஸ்து தம்மைப் பின்பற்றும்படி அழைத்த இரண்டு சகோதரரின் பெயர் என்ன?
- இயேசு கிறிஸ்து எந்தப் பட்டணத்தில் நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனை சுகமாக்கினார்?
- ஏரோது ராஜா எந்த விழாவின் போது ஆணையிட்டுக் கொடுத்ததால் யோவான் ஸ்நானன் சிரச்சேதம் பண்ணப் பட்டார்?
- இயேசு கிறிஸ்து ஏழு அப்பங்களையும், சில மீன்களையும் கொண்டு 4000 பேரை போஷித்த பின்பு, மீதம் எத்தனை கூடைகள் இருந்தன?
- இயேசு கிறிஸ்து மறுரூபமானபோது யாரெல்லாம் அவரோடு காட்சியளித்தார்கள்?
- வரி செலுத்தப் பயன்பட்ட பணத்தில் யாருடைய உருவம் பொறிக்கப்பட்டிருந்தது?
- யூதருடைய வற்புறுத்துதலுக்கேற்ப, கிறிஸ்துவுக்குப் பதிலாக பிலாத்து விடுவித்தவனின் பெயர் என்ன?

# இந்த இரகசியம் பெரியது

## This is a Great Mystery

மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலை யாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந் திருக்கவேண்டும். புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்தி கரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.

அப்படியே புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்பு கூருகிறவன் தன்னில்தான் அன்பு கூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறது போல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, ஒரே மாம்ச மாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப் பற்றியும், சபையைப் பற்றியும் சொல்லுகிறேன். எப்படியும் உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்பு கூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள் (எபேசியர் 5:22-33).

சபை

# புதிதாக வந்தவர்களுக்கு வாழ்த்து சொன்னீர்களா?

## Have You Greeted the Visitors?

Kevin L.Moore



சபைக்குத் தலையாயிருக்கிற இயேசு கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். கிறிஸ்து தம்முடைய சுயரத்தத்தினாலே விலைக்கு வாங்கின சபை அவருடைய ஆவிக்குரிய சரீரமாயிருக்கிறது. அவருடைய சரீரம் பல அங்கத்தினர்களை உள்ளடக்கியது. ஒவ்வொருவருடைய கரங்களிலும் இழந்து போனவர்களைத் தேடவும், இரட்சிக்கவும் பயன்படுத்தப்படும் சுவிசேஷம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலான சபைகள் இழந்து போனவர்களைத் தேட ஏதோ ஒரு யுக்தியைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். தொலைக்காட்சி, வானொலி, சுவிஷேக்கூட்டங்கள், வீடு சந்திப்புகள் போன்றவைகள் அதில் உள்ளடக்கம். தேவன் சபையை ஊழியஞ் செய்கிற ஒன்றாயிருக்கும்படி வடிவமைத்திருக்கிறபடியால் இழந்து போனவர்களை சந்திக்கும் படியான ஒவ்வொரு வாய்ப்பும் சரியாக பயன் படுத்தப்பட வேண்டும்.

இவ்விதமாக இழந்து போனவர்களை சந்திப்பதற்கான ஒரு வாய்ப்பு சுவிசேஷக் கூட்டங்கள் மற்றும் ஆராதனை வேளையில் புதிதாக கலந்து கொள்ளும் பார்வையாளர்களால் கிடைக்கிறது, இவர்களைக் குறித்து நம் சிந்தை எப்படியிருக்க வேண்டும்? சில பார்வையாளர்கள் சபை அங்கதினர்களின் குடும்பத்தினர்களாக அல்லது நண்பர்களாக இருக்கலாம், சிலர் சபையின் வீடு சந்திப்பு திட்டத்தின் மூலமாக தொடப்பட்டு வந்திருக்கலாம். அவர்கள் ஏதாவது ஒரு காரணத்தால் ஆராதனைக்கு வந்திருக்கலாம், அவர்களை சந்திப்பது நம் கடமையாக இருக்கிறது.

நாம் நம் அங்கத்தினர்களிடமே நேரத்தை செலவழித்துவிட்டு பார்வையாளர்களைக் கண்டு கொள்ளாமல் இருக்கலாமா? அல்லது சபையின் மற்ற அங்கத்தினர்களிடம் புதிதாக வந்திருக்கிறவர்களை அறிமுகம் செய்யத் தவறிவிட்டு நாம் அழைத்தவர்கள் வந்திருக்கிறார்களா என்று சாதாரணமாக பார்த்தால் போதுமா? அல்லது நம்முடைய பிரதான அக்கறை பார்வையாளருக்குப் பிடித்தமான காரியங்களை அறிந்து கொண்டு அக்காரியங்களில் அவர்களுக்கு உதவிச் செய்வதாயிருக்க வேண்டுமா?

நம் தீவிர அக்கறை ஒவ்வொரு பார்வையாளரையும் வரவேற்பதாக வாழ்த்துவதாக இருக்கிறபடியால், நமக்குள்ளாக இயற்கையாக எழும்புகிற கேள்வி இதேவிதமான சூழ்நிலையில் கிறிஸ்து என்ன செய்வார்? என்பதாயிருக்கிறது. இதற்கான பதில் நிச்சயமாகவே நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பார்வையாளர்களைப் பற்றிய உணர்வுள்ளவர்களாக இருப்பார். நாமும் அவ்விதமாக இருக்க வேண்டும். இனம் கிறிஸ்தவர்கள் ஆராதனைக்கு வரும் வாலிபர்களை வரவேற்று வாழ்த்துதல்களைத் தெரிவிக்க வேண்டும். நடுத்தர வயதானவர்கள் வயது வித்தியாசமின்றி எல்லோரையும் வரவேற்று வாழ்த்துதலைச் சொல்ல வேண்டும். நிச்சயமாகவே இக்காரியங்களை செய்வதற்கு விழிப்புணர்வு காலம் மற்றும் அக்கறை அவசியப்படுகிறது. ஆனால் இதுதான் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவம்!

சபையில் புதிதாக வருகிறவர்களைச் சந்தித்துவிட்டு பிற்பாடு சகோதரர்கள் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்ளலாம். நம் சபை ஆராதனைகளில் புதிதாக பார்வையாளர்களை அழைத்து முதல் நூற்றாண்டு நடைமுறைபடுத்தப்படுவதை காண அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். நாம் கொஞ்ச நேரம் எடுத்து புதிதாக வருகை தரும் பார்வையாளர்களை வரவேற்று வாழ்த்துதல் தெரிவிப்பதினால் ஒரு வேளை அந்த ஆத்துமா இரட்சிப்பில் நமக்கும் பங்கு உண்டு என்பதைவிட மேலான மகிழ்ச்சி வேறென்னவாயிருக்க முடியும்? ✝


---

**யோபு புத்தகத்திலிருந்து ...**

பாடுகளும், உபத்திரவங்களும் எல்லாச் சமயங்களிலும் நம்முடைய தண்டனைக்கானவைகள் அல்ல. மாறாக, அநேக நேரங்களில் நம்முடைய பயிற்சிக்காகவும், பக்தி மேம்பாட்டுக்கும் ஆனவைகள்.

# சபையைத் தெரிந்தெடுத்தல்

ஜனங்கள் சபையைத் தெரிந்தெடுக்க எவைகள் காரணங்களாக அமைகின்றன?



- வீட்டுக்கு அருகில்
- குடும்பப் பின்னணி
- தனிப்பட்ட விருப்பம்
- நற்கீர்த்தி
- கட்டிடத்தின் தோற்றம்
- நிகழ்ச்சிகள் மற்றும் கூட்டங்கள்
- நட்புத் தொடர்புகள்
- சௌகரிய காரணிகள்
- பிரசங்கியர் மீது விருப்பம்

ஆயினும், இவைகளில் பிரதான காரணம், வேதாகமம் சபையைப் பற்றி என்ன போதிக்கிறது என்பதாக இருக்க வேண்டும்.

# நாம் யார்? நாம் எதை விசுவாசித்து நடைமுறைப்படுத்துகிறோம்?

## Who Are We? What do We Believe and Practice?

Richard Taylor

**எங்கள் நோக்கம் :** வேதாகமம் எங்கே பேசுகிறதோ அங்கே பேசுவது வேதாகமம் எங்கே மௌனமாக இருக்கிறதோ, அங்கே மௌனமாக இருப்பது. வேதாகம" காரியங்களை வேதாகம வழிகளிலே செய்வது மற்றும் வேதாகம காரிங்களை வேதாகமப் பெயர்களால் அழைப்பது.

**எங்கள் நம்பிக்கை :** இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் பிலிப்பியர் 2:5–11; எபிரெயர் 1:1–7; மத்தேயு 16:1618.

**நாங்கள் யார்?**

கிறிஸ்தவர்கள், அவ்வளவுதான் அதற்கு மேலுமில்லை கீழுமில்லை! [அப்போஸ்தலர் 11:26]

**நாங்கள் எப்படி கிறிஸ்தவர்களானோம்?**

புதிய ஏற்பாட்டு மாதிரியை பின்பாற்றுவதினாலும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் எதைச்செய்தார்களோ அதைச் செய்வதினாலும்.

- அவர்கள் தேவனுடைய வசனத்தைக் கேட்டார்கள் [ரோமர் 10:14]
- அவர்கள் இயேசு கிறிஸ்துவைக் குறித்து தங்களுக்கு என்ன பிரசங்கிப்பட்டதோ அதை விசுவாசித்தார்கள் [அப்போஸ்தலர் 16:31]
- நாங்களும் அவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறோம் [ மத்தேயு 16:16]
- அவர் இப்பூமிக்கு மாம்சத்தில் வந்தார் என்று விசுவாசிக்கிறோம் [ யோவான் 1:14]
- அவர் பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்தார் என்பதை விசுவாசிக்கிறோம் [II கொரி 5:21]
- அவர் இவ்வுலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார் என்பதை விசுவாசிக்கிறோம் [Iபேதுரு 2:24]
- அவர் மரித்து மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார் என்பதை விசுவாசிக்கிறோம் [ Iகொரிந்தியர் 15:34].

தேவன் அவர்களை சபையில் சேர்த்தார் [அப்போஸ்தலர் 2:47]. தேவன் தான் விசுவாசிகளை சபையில் சேர்க்கிறார், மனிதன் அல்ல அவர் கீழ்ப்படிதலுள்ள விசுவாசிகளாக சிறந்த கிறிஸ்தவர்களாக இருந்தார்கள்.

கிறிஸ்தவர்களாக [தேவனுடைய பிள்ளைகளாக] ஆதிக் கிறிஸ்தவர்கள் செய்தது போல வாரத்தின் முதல் நாளிலே கூடுகிறோம். நாங்கள் கூடும் போது என்னச் செய்கிறோம்?

- நாங்கள் தேவனுடைய வார்த்தையைப் படிக்கிறோம் [1தீமோத்தேயு 2:15]
- நாங்கள் தேவனைத் துதித்துப்பாடுகிறோம் [ எபேசியர் 5:19]
- நாங்கள் கிறிஸ்துவின் மூலமாக தேவனிடத்தில் ஜெபிக்கிறோம் [ யோவான் 14:13]
- நாங்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கிறோம் [லூக்கா 22:14-20; அப்போஸ்தலர் 20 :7].
- எங்கள் வரவுக்குத்தக்கதாகத் கொடுக்கிறோம் [1கொரிந்தியர் 16:2]

நாங்கள் எங்களை கிறிஸ்துவின் சபை என்றழைக்கிறோம். ஏனெனில், சபை கிறிஸ்துவுக்குச் சொந்தமானது [ரோமர் 16:16] ஆனால், வேதாகமம் வேறு சில வார்த்தைகளாலும் சபையை வர்ணிக்கிறது.

- சபை [1கொரிந்தியர் 11:2 எபேசியர் 5:15]
- தேவனுடைய வீடு [எபிரெயர் 3:6]
- தேவனுடைய ராஜ்ஜியம் [1கொரிந்தியர் 15:24; கலாத்தியர் 5:21]
- கிறிஸ்துவின் சரீரம் [எபி. 1:22,33; கொலோ 1:18]
- தேவனுடைய குடும்பம் [ 1தீமோ. 3:15].

**எங்கள் பணி**

- ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துதல் [ மத்தேயு 28:1820]
- ஒருவருக்கொருவர் பக்தி விருத்தி உண்டாக்குவது [செலதோனியர் 5:11]
- விசுவாச குடும்பத்தாருக்கு நன்மை செய்தல் [கலாத்தியர் 6:10]
- உலகத்திற்கு வெளிச்சமாயித்தல் [ மத்தேயு 5:14,16].

**எங்கள் நம்பிக்கை:**

**நித்திய ஜீவன்:** பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும், இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக. பொய்யுரையாத தேவன் ஆதிகால முதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணி அதைக் குறித்த நம்பிக்கையைப் பற்றி தேவ பக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும் விசுவாசமும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு உண்டாகும்படி, ஏற்ற காலங்களிலே நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய கட்டளையின் படி எனக்கு ஒப்புவிக்கப்பட்ட பிரசங்கத்தினாலே தமது வார்த்தையை வெளிப்படுத்தினார் [தீத்து 1:2–4].

இதினிமித்தம் நம் புதிய ஏற்பாட்டின் மாதிரியை நாம் பின்பற்றுகிறோம். கிறிஸ்தவர்களாக வாழ்பவர்களாக வாழ்பவர்கள் மாத்திரமே வேதாகமம் பேசும் இடத்தில் செயல்படுகிறவர்களாகவும், வேதாகமம் எங்கெல்லாம் அல்லது எக்காரியத்தில் எல்லாம் அமைதியாக இருக்கிறதோ அங்கே கிறிஸ்தவர்களும் அமைதியானவர்களாகவும் இருப்பார்கள். புதிய ஏற்பாட்டு சபைக்குள் அழைக்கப்பட்ட ஒரு நபர் நிச்சயம் இவ்விதமாகத்தான் செயல்படுவர். ஏனென்றால், அவர் கிறிஸ்து எனும் கன்மலையின் மேல் கட்டப்பட்டவராக இருக்கிறார்.

---

## தேவனின் விருப்பம்

- **நமது என்னங்கள் நமது உள்ளான வாழ்வின் உன்மைத் தன்மையை உருவாக்கும்.**
- **நம்முடைய என்னங்களை மாற்றும்போது நம்முடைய மனப்பான்மையை நாம் மாற்றுகிறோம்!**
- **நம்முடைய மனப்பான்மைகளை நாம் பாற்றும் போது நம்முடைய ஒட்டுமொத்த சுபாவமும் மாறுகிறது.**
- **தேவன் நம்முடைய சுபாவம் இயேசு கிறிஸ்துவின் மூலம் ஆவிக்குரிய சுபாவமுள்ள ஒன்றாக மாற்றப்படும் படி விரும்புகிறார் [II பேதுரு 1:4].**

# சபை கூடுதலை சிறப்பாக்க சில கட்டளைகள்

- ஞாயிற்றுக்கிழமையை முதன்மைப்படுத்துங்கள். வாரத்தின் பிரதான வேலையாக இது இருக்கட்டும்.

- மீதமானவைகளை தேவனுக்கு கொண்டு வராதீர்கள். தேவன் எப்போதுமே முதற்கனிகளில்தான் பிரியப்படுவார். மீதமான வைகளைக் கொண்டு அவரை திருப்திபடுத்தவே முடியாது.

- உங்கள் மனதை தயாராக்குங்கள். ஆராதனையில் ஆவிக்குரிய காரியங்களில் செலுத்துவதற்கு முன் கூட்டியே நீங்கள் உங்கள் மனதைத் தயாராக்குங்கள்.

- சரியான நேரத்தில் ஆராதனையில் கலந்து கொள்ளுங்கள். அவசர அவசரமாக ஆராதனையில் பிரவேசிக்கும்போது நாம் நம்மில் வருவதற்கே நேரம் எடுப்பதால் கவனச்சிதறல் ஏற்படும்.

- உங்கள் வேதாகமத்தைக் கொண்டு வாருங்கள். நம் சொந்த வேதாகமம் இல்லாமல் ஆராதனையில் கலந்து கொள்வது என்பது சாவி இல்லாமல் வாகனத்தை ஓட்டப்போவது போன்றதாகும்.

- உங்கள் வாயைத்திறந்து பாடுங்கள். பாடல் என்பது நம் விருப்பப்படி செய்யும் ஒரு செயல் அல்ல, மாறாக அது கட்டளையாயிருக்கிறது.

- முன் இருக்கையில் அமருங்கள். ஒருவர் பின்னால் இருக்கும் இருக்கைகளுக்குக் போகப்போக அவருடைய உணர்வுப்பூர்வமான அளவும், மனரீதியான பங்கெடுப்பின் அளவும் குறைவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

- குடும்பமாகக் கலந்து கொள்ளுங்கள். குடும்பமாக ஆதனையில் கலந்து கொள்ளும் போது ஆராதனையின் தரம் அதிகரிக்கிறது.

- பிரசங்கத்தை நன்றாகக் கவனியுங்கள். பிரசங்கத்தின்போது குறிப்பு எடுங்கள். அது பிரசங்கத்தைக் கேட்கும் உங்களை உற்சாகப்படுத்தும்.

- ஆராதனை தேவனை மையாகக் கொண்ட ஒன்றாக இருக்க வேண்டும். ஆராதனையில் எங்களுக்கு ஒன்றும் கிடைக்க வில்லை என்று சொல்கிறவர்கள் தேவனை மையப்படுத்தவில்லை என்பது தான் உண்மை.

# தேவனுக்கு முதலிடம்

## First Place To God

Sis. ரேச்சல் இராஜநாயகம்

மத்.6:33,- ல் முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும். என்று வாசிக்கிறோம். இது நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம் திருவாய் திறந்து கூறின வார்த்தைகள். உணவு இல்லையே, உடை இல்லையே என்று கவலைப் படுகிறவர்களிடம் இந்த வார்த்தைகளைப் பேசுகிறார். இயேசு பேசினவைகள் யாவும் தன்னை அனுப்பின பிதாவின் வல்லமையுள்ள வார்த்தைகள். முதலாவது தேவனுடைய இராஜ்ஜியம் என்றால் என்ன? எவற்றிற்கெல்லாமோ அர்த்தம் கண்டு கொள்ளும் நாம் இதை அப்படியே நமக்கு சம்பந்தமில்லாத ஒரு வார்த்தை என்று அசட்டை பண்ணிவிடுகிறோம். தேவனுடைய இராஜ்ஜியம் என்பது சபை. இயேசு கிறிஸ்து தமது இரத்தத்தை சிந்தி சம்பாதித்தது தான் சபை. இதைத்தான் நாம் முதலாவது தேட வேண்டும். நீதி என்பது அவருடைய வசனம். ஆம், வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வசனங்கள். உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள் [சங். 119:172] சரி, இதை நாம் எப்படி நம் வாழ்க்கை யோடு சம்பந்தப்படுத்துவது?

மத். 6:33,- ல் உள்ள தேவனுடைய ராஜ்ஜியத்தின் வரலாறு நம் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்க வேண்டும். பின்பு அதை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். இதை வாசிக்கும் அநேகராகிய நாம் அதைக் கண்டுபிடித்து அந்த சபையில் அங்கமாக இருக்கிறோம். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார் என்ற வசனத்தின்படி [அப்:2:47] அங்கமானோம். இந்த மாபெரும் பாக்கியத்தைப் பெற்ற நாம் தேவனுக்கு எதை திரும்பக் கொடுத்திருக்கிறோம்? நம்முடைய நேரம், நம் பிள்ளைகள், குடும்பம், நம் வருமானம், நம் தாலந்து, நம் வாழ்க்கை இப்படி எல்லாவற்றையும் நாம் தேவனுக்குச் செலுத்தக்

கடமைப்பட்டுள்ளோம், கொடுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும் என்று நமதாண்டவர் திருவுளம் பற்றியிருக்கிறார். தேவன் பொய்யுரையாதவர். சிந்தித்துப் பார்ப்போம். எப்படியெல்லாம் நாம் அவருக்கு நம்முடையதை கொடுத்திருக்கிறோம் என்று. பக்தன் தாவீது சொல்லுகிறார் [சங். 116:12,13] கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன். ஆம், நம்மை நாமே அவருக்கு அர்ப்பணித்து ஓயாமல் அவரைத் தொழுது கொள்வது என்பது புதிய ஏற்பாட்டிலே வாரத்தின் முதல் நாளிலே சபை கூடி வந்து அவரைத் தொழுது கொள்ள வேண்டும்என்பது தான். நேரமாக சென்று சபையின் வேலைகளை பார்க்கிறோமா? சாமுவேல் பிள்ளையாண்டனைப் போல் நம் பிள்ளைகள் சபையில் ஏதெனும் ஒரு பணி செய்ய வேண்டும் என்று எண்ணி அவர்களை ஊக்குவிக்கிறோமா? நாம் பெற்றிருக்கும் ஆசீர்வாதங்கள் அனைத்தும் நாம் தேவனிடத்திலிருந்து பெற்றவைகளே. அவைகளை நாம் திரும்ப அவருக்கு கொடுத்தேயாக வேண்டும்.

அருமையானவர்களே! நாம் எவ்வளவு நேரம் தினமும் வேதம் வாசிக்கிறோம். வேதாகமம் ஆலோசனை புத்தகமாயிற்றே! பின் ஏன் எடுத்துப் பார்ப்பதேயில்லை? நம் பிள்ளைகள் வேத அறிவு பெற அனுமதிக் கிறோமா? தீமோத்தேயு விசுவாசத்தில் உத்தம குமாரனாயிருப்பதற்கும், பவுலோடு பயணங்கள் செய்யவும் உதவியாயிருந்தது பாட்டி லோவிசாளும், தாய் ஐனிக்கேயாளுந்தானே! [II தீமோ. 1:5]. ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவைப் போன்று சொந்த வேலையும் செய்து கொண்டு ஊழியர்களைத் தாங்கி, உற்சாகப்படுத்தி ஆத்துமாக்களைத் தேடி ஆதாயம் செய்வோம் [அப்.18:26]. இவர்களைப்போன்று தான் நாமும் நமது பொன்னான நேரங்களைக் கர்த்தருக்காக செலவு செய்ய வேண்டும். மக்கதோனியா நாட்டு சபையின் விசுவாசிகள் கொடிய தரித்திரத்திலும் மிகுந்த உதாரத்துவமாய் [II கொரி 8:2] கொடுத்தார்கள். நாம் சுயநலவாதிகளாய் இருந்தால் கிறிஸ்துவின் சுவிசேஷம் எப்படிப் பெருகும், வளரும்? அனுப்பப்படாவிட்டால் யார் பிரசங்கிப்பார்கள்?

தாய்மார்களே, நம் கையில் தேவன் எதை எதிர்பார்க்கிறார் என்பதை சிரத்தையெடுத்து சிந்தித்து உட்கார்ந்து யோசித்துப் பார்த்து, உடனே செயல்படுவோம். வல்லமையும், மகத்துவமும் சகல

அதிகாரமும் நிறைந்த தேவனையும், குமாரனையும், வசனங்களையும் அற்பமாய் எண்ணினோமானால் நம்மைவிட பரிதாபத்திற்குரியவர்கள் யாருமில்லை. சரீரத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு, சுகபோகமாய் வாழ்வதற்குத்தான் தேவன் நம்மை இந்த உலகத்தில் பிறக்கச் செய்தார் என்று எண்ணி நாட்களைக் கழித்துக் கொண்டுள்ளோம். இல்லை பிரியமானவர்களே! தனியாகப் பிறந்தோம், தனியாக மரிக்கப் போகிறோம், தனியாக நியாயத்தீர்ப்பில் போய் நிற்கப் போகிறோம். எப்படி தேவனை சந்திக்கப் போகிறோம்? அவர் எதிர்பார்ப்பு எதையுமே மதிக்காமல், கீழ்ப்படியாமல் நம் இஷ்டப்படி வாழ்ந்தால் முடிவு எப்படித்தான் இருக்கும்?

கிறிஸ்துவின் வசனம் தான் நம்மை நியாயந்தீர்க்கும் [யோவான்12:48]. கரிசனையும், அன்பும் கொண்ட தேவன் பலபல விஷயங்களை சம்பவங்களை நமக்கு வேதத்தில் எழுதிக் கொடுத்துள்ளார். அனைத்து வினாக்களுக்கும் இப்புத்தகம் விடை சொல்லுகிறது. எனவே முதலாவது தேவனின் வார்த்தைக்கு இடம் கொடுப்போம். இந்த உலகம் நிலையல்ல, சதமல்ல. பரலோக நம்பிக்கை உள்ளவர்கள், அதை சுதந்தரிக்க ஆசைப்படுபவர்கள் ஆகையால், முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேட தீர்மானம் எடுப்போம். பரலோகத்தின் தேவன் அதற்கு உதவி செய்வாராக! ஆமென். ✝

## தேவனின் நாமங்கள்

எல் எமெத் - **சத்தியபரன்** [சங்கீதம் 31:5]

எல் ரஹீம் - **இரக்கமுள்ள தேவன்** [உபாகமம் 4:31]

எல் சேலா - **கன்மலையாகிய தேவன்** [சங்கீதம் 42:9]

எல் கிப்போர் - **வல்லமையுள்ள தேவன்** [ஏசாயா 10:21]

எல் மஉஸ் - **என் அரணான தேவன்** [II சாமுவேல் 22:33]

எல் ஹக்காதோல் - **மகத்துவமுள்ள தேவன்** [உபாகமம் 10:17]

# எபேசியர் நான்காம் அதிகாரத்தின் ஒரே ஞானஸ்நானம்

**ஒரே ஞானஸ்நானம் என்பது என்ன?**

- யோவானின் ஞானஸ்நானம் அல்ல [அப்.19:4]
- பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் அல்ல [ அப்.1:1-8]
- அக்கினி ஞானஸ்நானமும் அல்ல [ மத்தேயு 3:10-12]

**யார் ஞானஸ்நானம் பெற வேண்டும்?**



- குழந்தைகள்? இல்லை
- இரட்சிக்கப்பட்டவர்கள்? இல்லை
- பாவத்தைக்குறித்து மனஸ்தாபப்பட்டு விசுவாசிக்கிறவர்கள்? ஆம் [மாற்கு 16:15,16]

**ஞானஸ்நானத்தின் விதம் என்ன?**



| அவசியமானது | மூழ்குதல் | தெளித்தல் |
|---|---|---|
| தண்ணீர் [அப்.8:36] | ஆம் | இல்லை |
| மிகுதியான தண்ணீர் [யோவான் 3:32] | ஆம் | இல்லை |
| கிறிஸ்துவுக்குள் [அப். 8:38] | ஆம் | இல்லை |
| அடக்கம் [ ரோமர்6 : 35] | ஆம் | இல்லை |
| புதிய பிறப்பு [யோவான் 3:5] | ஆம் | இல்லை |
| நாட்டப்படுதல் [ரோமர் 6:5] | ஆம் | இல்லை |

**கொலோசெயர் 2:12** ஞானஸ்நானத்திலே அவரோடு கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடு கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்

| | | | |
|---|---|---|---|
| ஞானஸ்நானம் | கிறிஸ்துவுக்குள் | ஆசீர்வாதங்கள் | இரட்சிப்பு |
| | நாமத்துக்குள் | பாவமன்னிப்பு | |
| | சரீரத்திற்குள் | சபை | |
| | மரணத்திற்குள் | இரத்தம் | |

இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே நீங்கள் கழுவப்பட்டிருக்கிறீர்களா?

# இலக்கை நோக்கித் தொடருதல்
# Press Toward the Goal

Wayne Barrier



**கி**றிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் (பிலி. 3:14) என்று அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியருக்கு எழுதினார். பவுல், அதற்கு முன்பாக, பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடுவதாகச் சொல்லுகிறார். இவ்வார்த்தைகள் பவுலால் எழுதப்பட்ட அதே காலகட்டத்தில் தான் அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது (கொலோ. 1:23) என்று கொலோசெயப் பட்டணத்து மக்களுக்கு எழுதினார். அதாவது, பவுலின் சுவிசேஷப் பணி சுவிசேஷத்தை யூதரல்லாத உலகத்திற்கும் எடுத்துச் செல்வதாகத் தான் இருந்தது. இப்போது, அப்பணி செய்து முடித்தாகி விட்டது. அப்படியென்றால், பவுல் ஓர் அவசரமான வேலையைச் செய்ய, தான் அழுத்தத்தில் இருப்பது போல் ஏன் பேசினார்? அவர் தன் கடந்த கால வெற்றியைக் குறித்துப் பேசியிருக்க முடியும். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. ஏனென்றால், சுவிசேஷத்தைக் கேட்ட எல்லோருமே அதற்குக் கீழ்ப்படியவில்லை. ஆகையால், பவுல் அங்கே, இன்னும் அதிகப்படியான காரியங்களைச் செய்ய வேண்டியதாயிருக்கிறது!

அதேபோல் தான், இன்றும் சுவிசேஷத்திற்காக அதிகப்படியான காரியங்கள் செய்யப்பட வேண்டியதாயிருக்கிறது. இதில் வேதனை என்னவென்றால், நியாயத்தீர்ப்பில் தேவனைச் சந்திக்க ஆயத்தமில்லாத எண்ணற்ற மக்கள் மரித்துப்போகிறார்கள் என்பதுதான். இதிலிருந்து நாம் முன்னேறிச் செல்லும் ஊக்கமான காரியத்தை எப்படிப் பெற்றுக் கொள்ள முடியும்? அது எப்படியென்று பவுல் தேவ வசனங்கள் மூலமாக நமக்குப் போதிக்கிறார். நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக

நோக்குங்கள் [பிலி . 3:17] என்று சொல்லியிருக்கிறார். அதன் பின்பு, அவர் முன்னோக்கி நடந்து, ஊக்கத்திற்கு ஆதாரமாக காணப்படும் பல காரியங்களைக் குறித்து கீழ்க்கண்டவாறு விவாதிக்கிறார். அதை சுருக்கமாகக் காண்போம்.

- நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. இதினிமித்தம் பரலோகத்தின் குடிமக்கள் இங்கு தேவனுடைய ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ளுகிறார்கள் [பிலிப்பியர் 3:20].

- நம்முடைய அற்பமான சரீரம் மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபமாக்கப்படும். அந்த ஆசீர்வாதத்தை நாம் எதிர்நோக்க முடியும்[3:21].

- நாம் எல்லாவற்றையும் குறித்து, நம் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துவதால் கவலையில்லாமல் இருக்கிறோம். அவருடைய பதில் நமக்கு எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானத்தைத் தரும் [4:6,7].

- கிறிஸ்துவில் நாம் பெலப்பட முடியும் [4:13]

- உண்மையுள்ளவைகளை, ஒழுக்கமுள்ளவைகளை, நீதியுள்ளவைகளை, கற்புள்ளவைகளை, அன்புள்ளவைகளை, நற்கீர்த்தியுள்ளவைகளை நாம் சிந்தித்து, அவைகளின் வாயிலாக ஊக்கத்தையும், பெலனையும், சத்துவத்தையும் பெற்றுக் கொள்ள முடியும் [4:8].

இன்று உலகெங்கிலும், சுவிசேஷத்தைப் பரப்ப நாம் தளராமல் முன்னோக்கிச் செல்ல வேண்டும். இப்பணி அவசியமும், அவசரமுமாயிருக்கிறது. ஆகவேதான் பவுல் சுவிசேஷப் பணியில் தன்னுடைய மாதிரியைப் பின்பற்றும்படி மன்றாடுகிறார். நம் தேவன், பரலோகத்தில் கை வேலையல்லாத ஒரு வீட்டையும், அங்கே நாம் வசிப்பதற்கான குடியுரிமையையும் தரப்போகிறாது. ஆகவே, நம்மைப்போல, மற்றவர்களும் இந்த மேலான வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக நாம் முன்னோக்கிச் சென்று சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்.

# நீங்களோ இதனிடத்திற்கு வந்து சேர்ந்தீர்கள்

*அன்றியும், தொடக்கூடியதும், அக்கினி பற்றியெரிகிறதுமான மலையினிடத்திற்கும், மந்தாரம் இருள் பெருங்காற்று ஆகிய இவைகளினிடத்திற்கும், எக்காள முழக்கத்தினிடத்திற்கும், வார்த்தைகளுடைய சத்தத்தினிடத்திற்கும், நீங்கள் வந்து சேரவில்லை; அந்தச் சத்தத்தைக் கேட்டவர்கள் பின்னும் தங்களுக்கு வார்த்தை சொல்லப்படாதபடிக்கு வேண்டிக்கொண்டார்கள். ஏனெனில், ஒரு மிருகமாகிலும் மலையைத் தொட்டால், அது கல்லெறியுண்டு, அல்லது அம்பினால் எய்யுண்டு சாக வேண்டுமென்று சொல்லப்பட்ட கட்டளையைச் சகிக்க மாட்டாதிருந்தார்கள். மோசேயும்; நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன் என்று சொல்லத் தக்கதாக அந்தக் காட்சி அவ்வளவு பயங்கரமாயிருந்தது.*

- நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும்
- ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத் திற்கும்
- ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும்
- பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேரானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும்
- யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும்
- பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும்
- புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும்
- ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையான வைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்

எபிரெயர் 12:18-24]

# ஆராதனை பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறது?

## What Does The Bible Say About Worship?

*J. C. Choate*

**கீ**ழ்க்காணும் கேள்விகளைக் குறித்து தயவு செய்து ஆழ்ந்து சிந்தியுங்கள், வசனங்களை வாசியுங்கள் , விடைகளை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.



**1. ஆராதனை என்றால் என்ன?**

பூமியின் மீதெங்கும் உம்மைப் பணிந்து கொண்டு உம்மைத் துதித்துப் பாடுவார்கள்; அவர்கள் உம்முடைய நமத்தைத் துதித்துப் பாடுவார்கள் என்று சொல்லுங்கள். ஆண்டவரே நீர் உண்டாக்கின எல்லா ஜாதிளும் வந்து, உமக்கு முன்பாக பணிந்து, உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள். நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள் [சங்கீதம் 66:4 ; 86:9 ; 95:6].

- சில விதிகளைப் பின்பற்றுதல்
- ஆராதனையில் கலந்துகொள்ளுதல்
- தேவனைத் துதித்து மகிமைப்படுத்துதல்

**2. நாம் எப்படி ஆராதிக்க வேண்டும்?**

தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளு கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும் என்றார் [யோவான் 4:24]

- வேத வாக்கியங்களின்படி உண்மையாய் ஆராதித்தல்
- மனசாட்சியின் படி
- மனிதர்களுடைய போதனையின்படி

**3. நாம் யாரை ஆராதிக்க வேண்டும்?**

உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவர்களுக்கும் ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் ; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன் [ யாத்திராகமம் 20:2–5].

- தேவன்
- சபையின் தலைவர்கள்
- உருவங்கள், விக்கிரகங்கள்

**4. பெரும்பாலானோர் எப்படி தேவனை ஆராதிக்கிறார்கள்?**

மனுஷடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார் [மத்தேயு 15:9].

- வேதாகமம் போதிக்கிறபடி ஆவியோடும் உண்மையோடும்
- தங்களுடைய மனசாட்சியின் படி
- மனுஷருடைய உபதேசங்கள் மற்றும் கற்பனைகளின் படி

**5. வாரத்தின் எந்த நாளில் கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்க வேண்டும்?**

வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்குபடி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான் [அப்.20:7].

- வியாழக்கிழமை
- சனிக்கிழமை
- வாரத்தின் முதல் நாள்

**6. தேவனை யார் ஆராதிக்க வேண்டும்?**

அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப்.2:41,42).

- **ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் அதாவது கிறிஸ்துவைத் தரித்தவர்கள்**
- **மிகவும் பக்தியுள்ளவர்கள் மட்டும்**
- **எல்லோரும்**

**7. எங்கே ஆராதிக்க வேண்டும்?**

ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார் ( மத்தேயு 18:20).

- **கூடும் வீடுகளில்**
- **ஆலயங்களில் மட்டும்**
- **ஆராதனைகளுக்காகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட கட்டிடங்களில்**

**8. ஆராதனையின் பங்கு என்ன?**

அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி.. நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு. நான் வந்திருக்குபோது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன் (அப்.2:42; எபே. 5:19; IIதீமோ. 2:15; Iகொரி.16:2).

- **பாடல், ஜெபம், தேவ வசனத்தைப் படித்தல், கர்த்தருடைய பந்தியில் பங்கெடுத்தல், காணிக்கை**
- **உள்ளூர் சபை என்ன முடிவெடுக்கிறதோ அதை மாத்திரம் செய்வது**
- **மெழுகுவர்த்தி மற்றும் தூபம் காட்டுதல், ஜெபமாலையைப் பயன்படுத்துதல்**

**9. இசைக்கருவிகளின் பயன்பாட்டை தேவன் ஆராதனையில் அங்கீகரிக்கிறரா? கிட்டார், பியானோ, கைத்தாளங்கள் போன்றவை).**

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி... இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன் [கொலோ.3:16;1கொரி.14:15].

- **தேவன் ஆராதனையில் அங்கீகரித்திருக்கிற ஒரே இசை வாய்ப்பாட்டு தான்.**
- **தேவன் எல்லாவிதமான இசைக்கருவிகளையும் அனுமதிக்கிறார்.**
- **நாம் உண்மையாயிருக்கும் வரை எப்படி தேவனைத் துதிக்கிறோம் என்பது ஒரு பொருட்டே அல்ல.**

**10. கிறிஸ்தவர்கள் எப்படி கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்க வேண்டும்?**

ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். [Iகொரி.11:2629].

- **தன்னைத்தான் சோதித்தறிந்து பங்குபெற வேண்டும்.**
- **தேவ நாமத்திற்கு இடறல் வராதபடி பங்குபெற வேண்டும்**
- **எல்லா கிறிஸ்தவர்களும் பந்தியில் பங்கு பெறத் தகுதியானவர்கள்.**

- ***நீங்கள் கிறிஸ்தவரா?***
- ***நீங்கள் எங்கே ஆராதிக்கிறீர்கள்?***
- ***நீங்கள் எப்படி ஆராதிக்கிறீர்கள்?***

இது நிச்சயமாகவே விசுவாசத்தை ஏற்படுத்தும்

# வாழ்க்கையின் சாராம்சம் கொடுத்தலே

## The Essence of Living is giving

*Stephen D. Eckstein Jr*

**மே**ற்சொல்லப்பட்ட தலைப்பு நம்மை ஆச்சரியப்படுத்தலாம். ஆனால், அதன் ஆதாரம் அலாதியானது. தேவன் தாமே, தம்மைப் பற்றிய இந்தச் சத்தியத்தை மூன்று விதங்களில் வெளிப்படுத்தி இருக்கிறார். அவை, 1. கடந்தகால ஈவுகள் 2. நிகழ்கால ஈவுகள் 3. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஈவுகள்.

**கடந்த கால ஈவு**

வேதாகமம் முழுவதும், தேவனுடைய வாக்குத்தத்தங்களினாலும் அதன் நிறைவேறுதல்களினாலும் நிறைந்து காணப்படுகிறது. தேவன் ஆதிப் பெற்றோருக்கும், அவர்களுடைய சந்ததியாருக்கும் ஜீவனையும், அதற்கான ஆதாரத்தையும் கொடுத்தார். நோவாவுக்கு பேழையைக் கட்டுவதற்கான மாதிரியையும் அதற்கான திறனையும் கொடுத்தார். மேலும், அவர் நோவாவுக்கும், அவனுக்குப் பின்வரும் சந்ததிக்காகவும் வானவில்லை உடன்படிக்கையாக உண்டாக்கினார். இதினிமித்தம் நிகழ்காலத்தில் வாழும் நாமும் நன்மை பெற்றிருக்கிறோம் கடந்த காலத்தில் வாழ்ந்தவர்களைப் போலவே. ஆகையால், உலகம் உள்ளவரைக்கும் இந்த கடந்த கால ஈவினால் நாம் நன்மை பெறுகிறோம். தேவன் இஸ்ரவேலர்களுக்கு எரிகோவைத் தருவதாக வாக்குத்தத்தம் பண்ணினார். அதை அவர்களுக்கு நாற்பது வருடங்களுக்குப் பிறகு யோசுவாவின் மூலமாக இஸ்ரவேலர் களுக்குக் கொடுத்தார்.

மேலும், தேவனுடைய மாபெரும் ஈவுகளில் மகத்தான ஈவு மேசியாவைப் பற்றியதுதான். அவருடைய வருகை பற்றி பரிசுத்தல் பதிவுகளில் பல்வேறுபட்ட காலகட்டங்களில், பரிசுத்த தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது. அவர் வாக்குத்தத்தம் செய்தபடியே காலம் நிறைவேறினபோது, இவ்வுலகத்திற்கு வந்து மனித இனத்தை இரட்சிப்பினால் அலங்கரித்தார். ஆம், அவருடைய போதனையை தங்களுக்குள் அனுமதித்து, மாற்றத்தைக் கண்ட எல்லோருடைய வாழ்க்கையையும் அவர் வளப்படுத்தியிருக்கிறார். அதிலும், பிரதானமாக வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்ற ஏற்றமிகு எண்ணத்தை அவரைப் பின்பற்றுகிறவர்களுடைய வாழ்க்கையில் ஏற்படுத்தியிருப்பது இன்னும் அலாதியான இன்பமாயிருக்கிறது என்றால் அது மிகையல்ல!

### நிகழ்கால ஈவு

நம்முடைய நாட்களில் நாம் எண்ணிப்பார்க்க முடியாத ஆசீர்வாதங்களைத் தேவன் நமக்குத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார். தேவன், நம்முடைய பாவங்களைக் கழுவிச் சுத்திகரிக்கும் வல்லமையை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

தேவன், தம்மை நோக்கி உண்மையான விசுவாசத்தோடு வேண்டுதல் செய்கிறவர்களுக்குத் தொடர்ந்து பலன் அளித்துக் கொண்டுதான் இருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 8:32-ல், **தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?** என்று வினவுகிறார். இக்கேள்விகான பதில், ஆம் என்பதாகும். ஏனென்றால், தேவன் பரலோகத்தின் அரும்பெரும் விலையேறப்பெற்ற பொக்கிஷமாகிய இயேசு கிறிஸ்துவையே நமக்காகத் தந்திருக்கும் போது, அவருடைய நித்திய அன்பினால் மற்ற எல்லாவற்றையும் நமக்குத் தருவது என்பது அவருக்கு இலேசான காரியமாகும்.

### வருங்கால ஈவு

தேவன் எல்லாக் காலங்களிலும் பொய்யுரையாதவராகத் தான் இருக்கிறார். ஆகவே, அவர் பொய் பேசமாட்டார். **அந்தப்படி தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக் கொள்கிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார். நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக் கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்** (எபி.6:17,18). இதினிமித்தம், தேவன் வருங்காலத்தில் நிறைவேற்றுவதாகச் சொல்லியிருக்கும் வாக்குத்தத்தங்களை நம்மால் முழுமையாக நம்ப முடியும் என்பது நிச்சயம்.

தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய வருகையின்போது, தம்முடைய பிள்ளைகளுக்குப் பரலோகத்தில் நித்திய ஜீவனை அளிக்க வல்லமையும், ஜீவனுமுள்ளவராயிருக்கிறார் (1யோவான் 3:1-3). மேலும், அவர் நமக்கு, கிறிஸ்துவினுடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பான ஆவிக்குரிய சரீரத்தைத் தருவார் (பிலி.3:20,21). வெளிப்படுத்தின விசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களை ஜெயங்கொள்ளு

கிறவர்களுக்கு நிச்சயம் கொடுப்பார். மீட்கப்பட்டவர்கள் தம்மோடு இருப்பதற்கான பரிபூரண ஆசீர்வாதத்தின் ஐக்கியத்தையும் கொடுப்பார். இன்னுமாக, அவர் பரலோகத்தில் நாம் எப்பொழுதும் அவரைத் துதிக்கும்படியான சிலாக்கியத்தையும் கொடுப்பார். என்னே! ஓர் அனுகூலமான ஈவு!

### பயன்பாடு

பிரியமானவர்களே! தேவன் நமக்காகக் கொடுத்தார். இன்றும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இனிமேலும் கொடுப்பேன் என்று வாக்குத்தத்தமும் செய்திருக்கிறார்.

**நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை** (யாக்கோபு 1:7). நாமும் அவருடைய பிள்ளைகளாக இருக்கிறபடியால் கொடுக்கிறவர்களாக இருப்போம்.

மேலும், நாம் மற்றவர்களுக்கு உயிர்ப்பிக்கும் உற்சாகமான வார்த்தைகளை அவர்களின் ஆத்தும மகிழ்ச்சிக்காகவும், வளர்ச்சிக்காகவும் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யும்பொழுது நாம் உண்மையாகவே அவர்கள் மீது அக்கறை காட்டுகிறோம் என்பது அவர்களுக்குப் புலப்படும். இன்னும் அவர்களோடு நெருக்கமாக, வண்ண வண்ண வாழ்த்து அட்டைகளையும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கும் வேதாகமத்தையும் வாங்கிப் பரிசளிப்பதின் மூலமாகவும் நம் மகிழ்ச்சியை அவர்களிடத்தில் வெளிப்படுத்தலாம். காரணம் நம்மிடம் உள்ள பணம் நம்முடையதல்ல, மாறாக அது தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக் கொண்டதாகும். அதின் மூலமாக நாம் மற்றவர்களை மகிழ்விக்கும் போது, உற்சாகம் தானாக வந்து வல்லமையின் வார்த்தைகளைக் கேட்டு ஆன்மீக வாழ்வில் வளம் பெறும்படியான ஆசீர்வாதம் அவர்களுக்குக் கிடைக்கும். **இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்** (I நாளா.29:14).

மேலும், உங்கள் பெலனையும், ஆற்றலையும் தேவனுக்குக் கொடுங்கள். அதாவது, சரீரப் பிரகாரமாக, உணர்வுப்பூர்வமாக, ஆவிக்குரிய பிரகாரமாக, பொருளாதார ரீதியாகக் கொடுங்கள். இவையெல்லாவற்றிலும் முதன்மையாக உங்கள் இருதயத்தில் தேவனுக்கு முதலிடம் கொடுங்கள். ஏனெனில், அவர் நமக்குக் கொடுக்கிறார்! என்பதை நினைவில் நிறுத்தினவர்களால் அவருக்காக கொடுப்போம்! ஆத்தும அறுவடை செய்வோம்!

# தேவனை மகிமைப்படுத்துவோம் வாருங்கள்
# Come Let Us Glorify God

*Thomas R.Dohline*

இழந்துபோனதைத் தேடி வந்த இறைமகன் இயேசு தமது இனத்தாரான யூதர்களுக்கு மறுமொழி கூறுகையில்... என் பிதாவைக் கனம் பண்ணுகிறேன் நீங்கள் என்னைக் கனவீனம் பண்ணுகிறீர்கள். நான் எனக்கு மகிமைத் தேடுகிறதில்லை; அதை தேடி நியாயத்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார் என்றார் [ யோவான் 8:49,50]

மனித கண்களால் பார்க்க முடியாத மாசற்ற தேவனை இவ்வுலகிற்கு காண்பிக்கவே வந்தார் மாறாத தேவனின் ஒரே மைந்தன் இயேசு அவருடைய மகிமையின் பிகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருக்கிறார் [எபி.1:3] இந்த பூமியில் அவர் இருந்த காலத்தில் எல்லா வகையிலும் அவரை கனம் பண்ணவும். அவரையே மகிமைப்படுத்தவும் செய்தார். தன்னலமில்லா தமையனாயிருந்ததாலே தனக்கென்று மகிமையைத் தேடவில்லை. அப்படித் தேடியிருந்தால் தம்மை தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலாக்கியிக்கமாட்டார் [ பிலி.2:7] தம்மைத்தாமே தாழ்த்தி கோர பயங்கரமான சிலுவையின் மரணத்தை ருசிபார்த்திருக்க மாட்டார். சிலுவையில் மரிக்கும் நபரை சிலுவை மகிமைப்படுத்தாது. மாறாக அது சாபப்படுத்தும் [ உபா. 21:23]; அது ஒரு நபரின் அடிப்படை குணத்தை வெளிப்படுத்தும். ஆனால், பாவம் அறியாத புண்ணியன் இயேசுவோ, ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்ட மரியாளிடம், தூய ஆவியானவரால் பிறந்து இப்படிக் கொடிய மரணத்தை ஏற்றுக் கொண், தன் மகிமையைத் துறந்து மகிமைக்குத் தகதியான பிதாவை மகிமைப்படுத்தினார். இயேசு தமது பிதாவின் சித்தத்திற்குப் பூரணமாய் தம்மை ஒப்புக்கொடுத்தார்,

தேவன் ஒருவரே மகிமைக்குப் பாத்திராமயிருப்பதால் அதை அவர் தேடுகிறார். இயேசு அவரை மகிமைப்படுத்துவது தவறென்று எண்ணவில்லை. பரிசுத்த தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்று நமக்கு வேதாகமம் போதிக்கிறது. நாம் ஏன் அவரை மகிமைப்படுத்த கூடாது? தேவன் மகிமையைத் தேடுவதால் அப்படிசெய்வதில் நமக்கு வெட்கம் தேவையில்லை. நாம் அவரை மகிமைப்படுத்தும் போது அவரைப் பிரியப்படுத்துகிறோம். இப்பொழுது நாம் அவரை மகிமைப்படுத்துவோம். [ரோமர் 8:18]

ஆகவே, இப்பொழுதும், எப்பொழுதும், எல்லா வழிகளிலும் மகிமைப்படுத்த தேவனை தீர்மானிப்போம்!

# நான் எங்கே இருக்கிறேன்?

## Where I am

*Rebecca Rushmore*

*என்னை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா? ஒவ்வொரு வாக்கியத்தையும் வாசித்து யோசியுங்கள். முதல் குறிப்பிலேயே என் பெயரை நீங்கள் யூகித்து விட்டால் 100 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்து விடுங்கள். ஐந்தாவது குறிப்பிற்குப் பிறகு நான் யார் என்பதைக் கண்டுபிடித்தால் உங்கள் மதிப்பெண் 60. என் அடையாளத்தை நீங்கள் உறுதிசெய்துவிட்டால் தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்மையைச் சரிபார்க்க கொடுக்கப்பட்டுள்ள வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.*

- பழைய ஏற்பாட்டின் நாட்களில் உலகின் பல பகுதிகளில் நான் ஆட்சி செய்தேன்.
- என் பழங்கால நிலப்பரப்பு சுமார் 9,600 சதுர மைல்களை உள்ளடக்கியது.
- என் நிலத்தின் நாகரீகமானது ஆற்றுப் பள்ளத்தாக்கு மற்றும் டெல்டாவை சுற்றிலும் தான் இருந்தது.
- என் நிலப்பரப்பில் கிழக்கிலும் மேற்கிலும் பாலைவனங்கள் எல்லைகளாக உள்ளன.
- ஆபிராம் என் நிலத்தில் தங்கினார் (ஆதியாம் 12:10-20).
- வேறுநாட்டைச் சேர்ந்த வல்லமையுள்ள ஆட்சியாளர் என்னை ஆட்சி செய்தார் ( ஆதியாகமம் 41).
- எபிரெய தேசத்து வரலாற்றில் என் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது (ஆதியாகமம் 39 – யாதிராகமம் 40).
- யோசேப்பு குழந்தை இயேசுவை ஏரோது ராஜாவிடமிருந்து பாது காக்க என்னிடத்தில் கொண்டு வந்தார் ( மத்தேயு 2:13-15).
- இன்று வடகிழக்கு ஆப்ரிக்காவில் நான் ஒரு தேசம்.
- நைல் நதி என் தேசத்தின் வழியாக வடக்கு நோக்கி மத்திய தரைக் கடலுக்குப் பாய்கிறது.

# நாங்கள் யார்?

# Who we are?

*Rebecca Rushmore*

*எங்களை உங்களால் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறதா? ஒவ்வொரு குறிப்புகளையும் வாசித்து கவனமாக யோசியுங்கள். முதல் குறிப்பிலேயே எங்கள் பெயரை நீங்கள் யூகித்துவிட்டால் 100 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்து விடுங்கள். ஐந்தாவது குறிப்பிற்குப் பிறகு நாங்கள் யார் என்பதை கண்டுபிடித்தால் உங்கள் மதிப்பெண் 60. எங்கள் அடையாளத்தை நீங்கள் உறுதிசெய்துவிட்டால் தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்மையை சரிபார்க்க கொடுக்கப்பட்டுள்ள வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.*

- நேபுகாத்நேச்சார் எங்கள் நாட்டின் மீது படையெடுத்து எங்களை சிறைபிடித்துப் போனான் [ தானியேல் 1:1–3]
- பிரதானிகளின் தலைவன் பணிபுரிவதற்காக எங்களைத் தெரிந்தெடுத்து எங்கள் பெயர்களை மாற்றினான் [ தானியேல் 1:3–7]
- நாங்கள் ராஜாவின் போஜனத்தைப் புசிக்க மறுத்தோம் [தானியேல் 1:8–14]
- நாங்கள் பாபிலோன் மாகாணத்துக்கு காரியங்களை விசாரிக்கும்படி வைக்கப்பட்டுப் பின்பு பாபிலோன் தேசத்திலே உயர்த்தப்பட்டோம் [2:49,3:30]
- ராஜா உண்டு பண்ணின பொற்சிலையை பணிந்து கொள்ள நாங்கள் மறுத்தோம் [தானியேல் 3:1–12,18].
- நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார் என்று நாங்கள் விசுவாசித்தோம் 3:16–18
- ராஜாவின் பலசாலிகள் எங்களை எரிகிற அக்கினி சூளையிலே தூக்கிப் போட்டார்கள் 3:1623.
- தேவன் எங்களை அக்கினியிலிருந்து பாதுகாக்க தேவ தூதர்களை அனுப்பினார் ராஜாவும் அவருடைய மனிதர்களும் காணும்படியாக சூளையில் நான்கு பேர் உலாவினோம் 24–27.
- நாங்கள் சூளையிலிருந்து வெளியே வந்த போது எங்கள் சரீரங்கள் மேல் அக்கினி பெலஞ் செய்யவுமில்லை தலைமயிர் கருகவுமில்லை சால்வைகள் சேதப்படவுமில்லை.
- ராஜா தேவனை ஸ்தோத்தரித்து தேவனுக்கு விரோதமாக யாரும் ஒரு வார்த்தையும் சொல்லாதபடி கட்டளையிட்டார் 3:28,29.

# உபத்திரவக் காலத்தில் நான் நிற்க முடியுமா?

## In a Time Of Persecution Can I Stand?

*Betty Burton choate*

தலையங்கத்தில் காணப்படும் கேள்வி ஒவ்வொரு கிறிஸ்தவருடைய மனதிலும் அடிக்கடி எழும்ப வேண்டும். கிறிஸ்தவத்தைத் துறப்பதற்கு நான் அச்சுறுத்தப்பட்டும், நான் அதற்கு எதிர்த்து நிற்கும் போது, என் உயிருக்கும், என் பிள்ளைகளின் உயிருக்கும் அச்சுறுத்துதல் ஏற்பட்டால் நான் எப்படி நிற்பேன்? அநேகமாக நம்மில் ஒவ்வொருவருக்கும் அச்சூழலைஎதிர்கொள்ளும் வரை விடை தெரியாது. நமக்கு முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களிடம் இருந்த தைரியம் இருக்க வேண்டுமென்பது நம்முடைய ஜெபமாக இருக்க வேண்டும்.



பழங்காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நாம் இப்போது பொருளாதார ரீதியாகவும், சரீரப் பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரகாகவும் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம், அதினிமித்தம் நாம் பசியாகவும் இருப்பதில்லை, இன்று நம்மை யாராவது தாக்கிவிடுவார்களோ என்று பயத்தோடு பின்னால் திருப்பிப் பார்த்துக் கொண்டு பயத்தோடு நாம் வாழவில்லை. எவ்வித சவால்களுமின்றி நாம் விரும்பிய படி ஆராதிக்க முடிகிறது. பலதரப்பட்ட மொழிபெயர்ப்புகளில் தேவனுடைய வார்த்தையைப் படிக்கும் வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. இன்னும் கூடுதலாக ஒத்த வாக்கியங்கள், வியாக்கியான புத்தகங்கள், இணையதள விளக்கங்கள் போன்றவற்றை நாம் பெற்றிருக்கிறோம்.

மேலே பட்டியலிடப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களை நாம் எண்ணிப் பார்க்கும் போது , இக்காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் தேவனுடைய அன்பெனும் சூரிய ஒளியில் குளிர் காய்ந்து கொண்டிருக்கிறேம். ஒரு தகப்பனாக சம்பூரணாயிருக்கிற நம் பரமப்பிதா தம்முடைய பிள்ளைகள் மீது, ஆசீர்வாதங்களை வருஷிக்கச் செய்கிறார். நாம் உண்மையுள்ள பிள்ளைகளாக, தேவனுடைய அன்புக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

நம்முடைய அபரிதமான ஆசீர்வாதங்கள் மற்றும் சௌகரியங்கள் மத்தியில் இஸ்ரவேல் ஜனங்கள், பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தில் பிரவேசிப்பதற்கு முன்பாகத் தேவனாகிய கர்த்தர் அவர்களுக்கு விடுத்த எச்சரிப்பை நாம் மறந்துவிட வேண்டாம். **ஆகையால், நீ புசித்துத் திருப்தியடைந்திருக்கையில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த அந்த நல்ல தேசத்துக்காக அவரை ஸ்தோத்தரிக்கக்கடவாய். உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும் நியாயங்களையும் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போகாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. நீ புசித்துத் திருப்தியாகி, நல்ல வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருக்கும் போதும், உன் ஆடுமாடுகள் திரட்சியாகி, உனக்கு வெள்ளியும் பொன்னும் பெருகி, உனக்கு உண்டானவையெல்லாம் வர்த்திக்கும் போதும், உன் இருதயம் மேட்டிமையடையாமலும், உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினவரும்...** [உபா.8:10-14].

கடந்த பல வருடங்களுக்கு முன் தேவன் இஸ்ர வேலர்களுக்கு விடுத்த எச்சரிக்கை அப்படியே இன்றைய கிறிஸ்தவர் களுக்குப் பொருந்துகிறது. பிரசங்கிமார்களும் சபையை நடத்து கிறவர்களும் உயிர்ப்பிக்கும் உபதேசத்தைக் கண்டு கொள்ளாமல், வேதாகமத்தை ஒரு வரலாற்றுப் புத்தகமாகவும், வாழ்வின் ஒழுக்க நெறிகளைக் காட்டும் வழிகாட்டியாகவும் பார்க்கும் போக்கு தான் அதிகரித்து வருகிறது. சிலர், சபையின் ஒருமைத்தன்மை, இரட்சிப்பின் உபதேசம், புதிய ஏற்பாட்டு ஆராதனை முறைமை, விவாகம், விவாகரத்து, பிரிவினையை உண்டாக்கும் காரியங்கள் போன்றவற்றில் மெத்தனப் போக்காக இருக்கின்றனர். ஏனென்றால், இதினிமித்தம் மற்றவர்களின் மனதைப் புண்படுத்த வேண்டாமென்று நினைத்து மேற்சொல்லப்பட்ட காரியங்களைப் போதிக்கத் தயங்கு கிறார்கள். வேறு சிலர், உபதேசக் காரியங்களில் மௌனம் காத்து, மார்க்கப் பிரிவினை உலகத்தோடு சமரசம் செய்து கொள்கிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை, கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் எல்லோருமே கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள தான் என்பதாகும். இப்படி உபதேசக் காரியங்களில் பிரசங்கியர்கள் மௌனம் காத்ததின் விளைவு, சபை அங்கத்தினர் தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அழமான அறிவு இல்லாமற்போய்விட்டது. எனவே, அவர்கள் கிறிஸ்வுக்குள் நிலையாக நிற்பதற்கான உறுதியான அஸ்திபாரம் இல்லை.

பிரசங்க பீடத்திலிருந்தும், மூப்பர்களிடமிருந்தும் மௌனம் ஒரு புறமிருக்க, மறுபுறத்தில், பெரும்பாலான கிறிஸ்தவர்களின் பார்வை உலகத்தின் பக்கமாய்த் திரும்பிவிட்டது. இவர்கள் பொருளாதார ரீதியாக முன்னேறி, உலகின் விலையுயர்ந்த பொருட்களைப் பெற்றுக் கொண்டு பொழுதுபோக்குகளில் தங்களை மூழ்கடித்து, சினிமா,

விளையாட்டு போன்ற காரியங்களில் தங்கள் நேரத்தை விரயமாக்குவது வாடிக்கையாகிவிட்டது. மேலும், பெற்றோர்கள் கடுமையாக உழைத்து, பொருளீட்டி, தங்கள் பிள்ளைகளைப் படிப்புக் காரியங்களில் ஈடுபடுத்தி, உணவு தயார் செய்து, வீட்டைப் பராமரிப்பதில் நேரமனைத்தையும் செலவழித்துவிட்டால், பிறகு, பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்ப்பதற்குப் போதிய நேரம் எங்கே இருக்கிறது? தங்களுக்குள்ளே வேர் கொள்ளாதபடியால், கொஞ்சகால மாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், இதனிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள். இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் ( மாற்கு 4:17).

இன்று கிறிஸ்தவர்கள் சிலர், தேவனுடைய வார்த்தையைக் குறித்த ஆழமான அறிவு இல்லாத காரணத்தினாலும், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள, விசுவாசத்தை உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாடும் இல்லாத காரணத்தினாலும், வரும் உபத்திரவத்தை எதிர்கொள்ளும்போதும், நிலை கொள்ளாமல் ஓடிவிடுகிறார்கள். மேலும், இவ்வுலகம் நம்மை அனுதினமும் அச்சுறுத்திக் கொண்டுதான் இருக்கும். எப்படியெனில், நாம் வேதாகம போதனைகளுக்காக, நிற்பதற்கு அச்சுறுத்தலாக சட்ட திட்டங்கள் இயற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்னும், விவாகரத்து, கருக்கலைப்பு, ஓரினச்சேர்க்கை, போன்றவைகளுக்கு ஆதரவாகத்தான் அரசாங்கம் சட்டங்களை இயற்றுகின்றன. இன்னும் மோசமாக, மணமாகாமலேயே சேர்ந்து வாழும் முறை மற்றும் பலதார முறை ஏகோபித்த பேரால் இன்றளவும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

மேலும், உலகெங்கிலும் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு ஆதரவான குரல் ஓங்கத் துவங்கியிருக்கிறது. ஆனால், தேவனுடைய பார்வையில் ஓரினச்சேர்க்கை அருவருப்பானதாகும். அத்தகைய ஓரினச்சேர்க்கைக்கு எதிராகச் செய்யப்படும் பிரசங்கங்கள் குற்றங்களாக அறிவிக்கப்படவேண்டுமென்று சமூகத்தில் அதற்கு ஆதரவு பெருகியிருப்பதால், அதற்கு எதிராக பிரசங்கம் செய்யும் பிரசங்கிமார்களுக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டுமென்ற குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டே இருக்கிறது. ஆதலால், இப்போதிருக்கிற சூழ்நிலையில், நாம் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு ஆதரவாகப் பேசவில்லையென்றால், அதினிமித்தம் நாம் சிறையில் அடைக்கப்பட்டு தண்டனையை அனுபவிப்போம். இப்போது எனக்குள் எழும் கேள்வி என்னவென்றால், நாம் சத்தியத்திற்காக நிற்போமா? உபத்திரவத்தை எதிர்கொள்வோமா? சத்தியத்தோடு சமரசம் செய்து கொள்வோமா? அல்லது, சிறைக்குச் செல்வோமா?

நாத்திகமும், மனிதக் கொள்கைகளும் பல வருடங்களாக வேதாகமத்தில் வேரூன்றியிருக்கிற நமது கலாசாரத்தை அழிக்க களம் இறங்கியிருக்கின்றன. இப்போது, அதோடு சேர்ந்து மற்றுமொரு அச்சுறுத்தல், உலகின் பல இடங்களில் முளைக்கத் தொடங்கி யிருக்கிறது. அது வேறொன்றுமல்ல மதவெறியாட்டம் தான். அவர்களுடைய ஒரே குறிக்கோள் வேதாகமத்தின் கலாசாரத்தை வேரறுப்பதே!

மதவெறியர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வாழும் கிறிஸ்தவர்களை அவர்கள் மிருகத்தனமாகத் தாக்கி, கொலை கூட செய்கிறார்கள். இவர்கள் இப்படி காட்டுமிராண்டித் தனமாக நடந்து கொண்டு, அதை இறை சேவை என்று இதயத்தில் ஈரமில்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் இறை நம்பிக்கைக்கு எதிராகக் கிறிஸ்தவர்கள் தூஷணம் சொல்லுகிறார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு துன்புறுத்தப்படுவதும், கொல்லப்படுவதும் தான் வேதனைக்குரிய விஷயமாகும்.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரனே, சகோதரியே, நமக்குள்ளே இக்கேள்வியைக் கேட்கும்படி உங்களை நான் வேண்டிக் கொள்கிறேன். உபத்திரவ காலத்தில் நான் தாக்குப்பிடிப்பேனா? என்பதுதான். நிச்சயமாக, நாம் தேவனுடைய வார்த்தைக்குள் மூழ்கி, அவருக்கென்று அர்ப்பணிப்புடன் செயல்பட்டால் நாம் தாக்குப் பிடித்து, அவருக்காக நிலைநிற்க முடியும். **கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?** (ரோமர் 8:36). நாம் உறுதியான நிலையிருந்தால், நம்முடைய கர்த்தராகிய இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு எதுவும் நம்மை பிரிக்க முடியாதென்று நிச்சயித்துக் கொள்ள முடியும். ✝

**வேதாகமத்தில் முதலாவது**


1. **புதியஏற்பாட்டில் *மாற்கு புத்தகம்* தான் முதலாவது எழுதப்பட்ட சுவிசேஷப் புத்தகம்**
2. **வேதாகமத்தில் முதல் உவமை *நியாயாதிபதிகள் 9:8-15* ல் உள்ள மரங்கள் உவமை**
3. **தேவன் மனிதனிடம் கேட்ட முதல் கேள்வி *நீ எங்கே இருக்கிறாய்* என்பது.**

# கர்த்தர் மனிதனை உருவாக்ினார்

# The Lord Formed Man

*Loy Mitchell*

**தே**வனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்( ஆதி.2:7).



Picture used with permission:
(c)2006 www.TheGloryStory.com

தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கினார். இதன் பொருள் மனுஷன் வெறும் மண் என்பதல்ல. இருந்தபோதிலும், விஞ்ஞானிகள் உடற்கூராய்வு மூலம் மனித உடலில் மண்ணின் பண்புகள் அல்லது தன்மைகள் இருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது நம்முடைய அற்புதமான ஆரம்பத்தையும், சரீரத்தின் பெலவீனத்தையும், மனித சரீரத்தின் முடிவையும் நமக்கு உணர்த்துகிறதாக இருக்க வேண்டும். பிரசங்கி3:20, **எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது; எல்லாம் மண்ணிலே உண்டாகிறது, எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது.**

நாம் மண்ணிலே உருவாக்கப்பட்டிருந்தாலும், தேவனுடைய கரத்தினாலும் வனையப்பட்டிருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஒருவர் மனித சரீரத்தின் ஒருங்கமைவு, அதின் விகிதாச்சாரம் மற்றும் இணக்கம் போன்றவைகளைக் கூர்ந்து கவனித்துத் தன் கை, கண் மற்றும் மூளை போன்றவைகளைப் பரிசோதித்துப் பார்க்கும் போது, சங்கீதக்காரன் 139:14 ல் சொல்லியிருப்பதை மறுப்பேதும் சொல்லாமல் நிச்சயம் அப்படியே ஒத்துக்கொள்ள வேண்டும். **நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்.**

மனித சரீரத்தில், பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறபடியால், தேவன் அதற்கு அதிக முக்கியத்துவத்தையும், மதிப்பபையும் கொடுத்திருக்கிறார். Iகொரி.6:19, **உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?** ஆகையினால் தான், தேவன் அதிக முக்கியத்துவத்தை மனிதனுக்குள்ளிருக்கும் ஆத்துமாவுக்குக் கொடுத்திருக்கிறார். அதேவேளையில், மிருகங்களுக்கு ஜீவனைத் தேவன் கொடுத்திருக்கிறார். அந்த ஜீவன் அழிவுள்ள. ஆனால், மனித ஆத்துமாவோ என்றென்றும் அழிவில்லாதது.

**உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும்; தாழப் பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்? இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும்** (பிரசங்கி 3:21;12:7).

மனிதன் ஏதோ ஓரிடத்தில் தன் நித்தியத்தைக் கழிக்கப் போகிறான். ஒவ்வொருவருக்கும் தெரிந்தெடுக்கும் உரிமை கொடுக்கப் பட்டுள்ளது. பவுல் Iகொரி.6:20–ல் இவ்விதமாகச் சொல்லியிருக்கிறார். **கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவர்களாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.**

கர்த்தருக்கு அனுதினமும் சேவை செய்வதின் மூலமாக அவருக்கு மகிமையைச் செலுத்துவோம். ✝

# நான்

- பவுலைப்போல பின்னானவைகளை மறந்து, முன்னான வைகளை நாடி இலக்கை நோக்கித் தொடருவேன்
  [பிலி. 3:13]

- தாவீதைபோல எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுப்வேன் [சங்கீதம் 121:1]

- ஆபிரகாமைப்போல என் தேவனை முழுமையாக நம்புவேன்
  [யாக்கோபு 2:23]

- ஏனோக்கைப்போல தேவனோடு தினமும் சஞ்சரிப்பேன்
  [ஆதியாகமம் 5:22]

- யோசபாத்தைப்போல தேவனைத் தேட என் இருதயத்தை நேராக்குவேன்
  [II நாளா . 19:2,3]

- தானியேலைப்போல எப்போதும் தேவனோடு உறவாடுவேன்
  [தானியேல் 6:10]

- யோபுவைப்போல எல்லாச் சூழ்நிலைகளிலும் பொறுமை யாயிருப்பேன்
  [யோபு 13:15,16]

- ஆரோன், ஊரைப்போல சபையை நடத்துபவர்களுடைய கரங்களைத் தாங்கிப் பிடிப்பேன் [யாத். 17:12]

- காலேப், யோசுவைப்போல அதிக எண்ணிக்கையைப் பார்த்து சோர்ந்துபோக மாட்டேன் [எண்.13:30]

# விவாகத்தின் இரகசியம்

# The Mystery of Marriage

*Dan R. Owen*

**வி**வாகம் என்பது ஓர் இரகசியமாகவும், சிருஷ்டிப்பு ஒழுங்கின் ஒரு பகுதியாகவும் இருக்கிறது. மேலும், இவ்வார்த்தை தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையே காணப்படும் உறவை விவரிப்பதற்கும், கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையே உள்ள உறவை விவரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. விவாகம் என்பது விசேஷித்த பரிசுத்த காரியமாகும். இயேசு கிறிஸ்துவும் இதன் முக்கியத்துவத்தைக் குறித்தும், நிரந்தரத்தைக் குறித்தும் தம் வார்த்தைகளால் அலங்கரித்திருக்கிறார்.

ஆதியிலே தேவன் இவ்வுலகத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த போது, **தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்** [ஆதி.2:18]. ஆம், வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் துணையும், உதவியும் அவசியமாயிருக்கிறது. அத்தேவைக்கு தேவனுடைய பதில் விவாகம் என்பதாயிருக்கிறது. ஆதி.2:24 –ல், ஒரு முக்கியமான உண்மை இவ்வுறவைப் பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது. வெற்றியுள்ள விவாகத்திற்கான மூன்று விதிகள் அதிலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதை இரத்தினச் சுருக்கமாகச் சொன்னால், **தகப்பனையும், தாயையும் விட்டு விட வேண்டும் இசைந்திருக்க வேண்டு மனைவியோடு ஒரே மாம்சமாயிருக்க வேண்டும்** என்பதுதான்.



இங்கே, விட வேண்டுமென்பது, நமக்கு முதன்மையாயிருக்கிற மற்ற உறவுகளை விட வேண்டும் என்பதாகும். அதாவது, உங்கள் வாழ்க்கையில் தாயோ, தகப்பனோ, சகோதர, சகோதரிகளோ அல்லது நண்பர்களோ முக்கியமான நபர்களாக இருக்கும் பட்சத்தில், விவாகத்திற்குப் பிறகு அவர் களை முக்கியமானவர்களாகக் கருதக்கூடாது. இதினிமித்தம் அவ்வுறவுகளையெல்லாம் தள்ளிவிட வேண்டுமென்பதல்ல. மாறாக, வாழ்க்கைத் துணைக்குத் தான் முதலிடத்தைக் கொடுக்க

வேண்டும். அப்படியில்லை யென்றால், மற்ற உறவுகளோடு போட்டி ஏற்பட்டு, அதினி மித்தம், விவாகம் எப்படியிருக்க வேண்டுமோ அப்படியிராமல், அதற்குத் தடையாக இது மாறி விடும்.

இரண்டாவது, இசைந் திருப்பது என்பதும் மிக முக்கிய மானதாகும். இதன் பொருள் கணவனும், மனைவியும் இணைந்து ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, உதவி களைச் செய்து, காரியங்களை விவாதித்து, ஒருவரையொரு வர் சார்ந்து, இலக்குகளை அடைய ஒன்றாகச் செயல் பட வேண்டும். ஒருவருக் கொருவர், உணர்வுப் பூர்வ மாகவும், பாசமாகவும் இருந்து, அவர்களின் தேவைகளை அறிந்து அதை நிறைவேற்றி தங்களுக்குள் அவர்கள் எல்லா வற்றிலும் தொடர்ந்து ஆதரவாக இருந்து தங்களுக்குள் அவர்கள் நம்பிக்கையைக் கட்ட வேண்டும்.

அடுத்து, ஒரே மாம்சமாயிரு ப்பதென்பது, கணவன் மனைவி இடையே காணப்படும் இல்லற மாகிய நல்லற உறவைத் தான் குறிக்கிறது. இந்த உறவில், தம்பதிகள் தங்களுக்குள் குறை வேதும் இல்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். மாறாக, அதை அலட்சியப்படுத்தக் கூடாது. ஏனென்றால், இந்த அலட்சியத்தை சாத்தான் பயன் படுத்தி, தூய்மையான விவாக த்தை அசுசிப்படுத்தி விடுவான்.

நிறைவாக, விவாகம் என்பது ஓர் உன்னதமான உடன் படிக்கையாகும். அதிலும் குறிப்பாக, ஒரு ஆணும், பெண்ணும் தேவனுக்கு முன்பாகச் செய்யும் பொருத்த னையாகும். இது, துணைகள் இருவரும் இல்லற வாழ்வை உறுதியாக்க தங்கள் வாழ்நாள் முழுவதும் ஒருவருக்கொருவர் அர்ப்பணிப்புடன் இருப்பதற் கான செயல்பாடாகும்.

மேலும், விவாகமானவர்கள் ஒன்றாக இருப்பதென்பது பெரி தல்ல. மாறாக, அதன் மேம் பாட்டிற்காகவும், அதைப் பேணி க்காக்கவும் தங்களை முற்றிலுமாக அதற்கென்று அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். இங்கே, உடன் படிக்கை என்பது பொருத்தனை களை நிறைவேற்றுவதாகும். இதன் பொருள், ஒருவர் மற்றவரிடம் வாக்களித்ததை நிறைவேற்ற அயராது பாடுபடுவதாகும்.


தேவன் எப்போதும், தம் முடைய ஜனங்கள் தங்கள் விவாக உடன்படிக்கையைக் கனம்பண்ணவேண்டுமென்று எதிர்பார்க்கிறார். இதினிமித்தம், நாம் பண்ணின பொருத்தனை களை ஒருபோதும் ஒதுக்கி ஓரமாகத் தள்ளிவிடாமல், நம் ஜீவனைப் போல அவைகளைப் பாதுகாத்து, தேவனுடைய வார்த்தையின்படியாக அதைக் கனப்படுத்த வேண்டும். ஆம், சிருஷ்டிப் பின் ஆரம்பத்தி லிருந்தே இதுதான் தேவனுடைய மாபெரும் சித்தமாயிருக்கிறது. ✞

கிறிஸ்தவ இல்லம்

# தகப்பனின் பணி

## Daddy`s Job

*Kevin L.Moore*



பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப் படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபேசியர் 6:4)

யாரோ ஒருவர் தகப்பன்மார்களுக்கு இரண்டாவது வாய்ப்பு கிடைப்பதில்லை என்று சொன்னார். நாம் பிள்ளைகளோடு நேரத்தை செலவு செய்யும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறபடியால் நாம் அதை சரியாக செலவழிக்க வேண்டும். தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டிய சில காரியங்கள் இதோ.

**பிள்ளைகளுக்கு நல்ல தாயைக் கொடுங்கள்**

ஒவ்வொரு குழந்தையும் நல்ல கிறிஸ்தவத் தாயை பெறும் தகுதி பெற்றிருக்கிது. தாவீதின் குமாரர்களில் சிலர் தேவ பக்தியற்றனர்களாயிருந்தார்கள். அதற்குக் காரணம் தாவீது விவாகம் பண்ணின பெண்களில் சிலர் தாய்களாக இருக்கும் தகுதி பெறாதவர்களாயிருந்தார்கள். தகப்பன்மார்களே உங்களுக்கு நல்ல பிள்ளைகள் வேண்டுமானால் அவர்களுக்கு நல்ல தாயாக இருக்கத்தக்கதான ஒரு பெண்ணை திருமணம் செய்யுங்கள்

**பிள்ளைகளுக்கு நல்ல தகப்பனாயிருங்கள்**

தகப்பன்மார்களுடைய மிகப் பெரிய பாவங்களுள் ஒன்று பிள்ளைகளோடு நேரத்தை செலவு செய்யத் தவறுவது தான். பிள்ளைகளுக்கு அப்பாவுடைய அரவணைப்பு அவசியமாகும். அவர்களுக்கு ஒரு நல்ல தகப்பன் தேவை. ஒருநல்ல தகப்பன் தன் பிள்ளைகளை நேசிக்கிறான். நம் பூரணப் பிதாவாகிய தேவன் அதற்கு மிகச் சிறந்த உதாரணமாயிருக்கிறார். தேவனே மிகச் சிறந்த தகப்பனுக்கு உதாரணமாயிருக்கிறபடியால், நாம் நல்ல தகப்பன்மார்களாக இருப்பதில் தோற்றும் போனால் எந்த சாக்கு போக்கையும் சொல்ல முடியாது.

**ஒரு நல்ல தகப்பன் தன் பிள்ளைகளைப் பராமரிக்கிறான்**

நம் பரமபிதா நம் தேவைகள் எல்லாவற்றையும் சந்தித்து நம்மைப் பராமரிக்கிறார். தகப்பன்மார்கள் அவ்விதமாகப் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்; ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத்தான் தன் வீட்டாரையும் விசாரியாமல்போனால் அவன் விசுவாசத்தை மறுத்தலித்தவனாயிருப்பான் [*I* தீமோத்தேயு 5:8].

**ஒரு நல்ல தகப்பன் தன் பிள்ளைகளை ஒழுங்குபடுத்துகிறான்**

தேவன் நம்மை ஒழுங்குபடுத்துகிறார். நம் பிள்ளைகளை சரியாக வளர்க்க வேண்டுமென்றால் அவர்களை நாம் ஒழுங்குபடுத்த வேண்டும்.

**அவர்களுக்கு ஒழுக்க நெறிகளைக் கற்றுக் கொடுங்கள்**

அவர்களுக்கு வாழ சரியான வழியைக் காட்டுங்கள். தேவனைப் பற்றியும், அவருடைய வார்த்தை பற்றியும் அவர்களுக்குப் போதியுங்கள். சரியானவைகளுக்கும், தவறானவைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை அவர்களுக்கு போதியுங்கள். நல்ல பிரஜைகளாக இருக்க அவர்களுக்கு போதியுங்கள். நேர்மையான உழைப்பின் கௌரவத்தை அவர்களுக்குக் கற்பியுங்கள். அவர்களோடு சேர்ந்து தேவனை ஆராதியுங்கள். அவர்களோடு

அவர்களுக்கு வாழ சரியான வழியைக் காட்டுங்கள். தேவனைப் பற்றியும், அவருடைய வார்த்தை பற்றியும் அவர்களுக்குப் போதியுங்கள். சரியானவைகளுக்கும், தவறானவைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை அவர்களுக்கு போதியுங்கள். நல்ல பிரஜைகளாக இருக்க அவர்களுக்கு போதியுங்கள். நேர்மையான உழைப்பின் கௌரவத்தை அவர்களுக்குக் கற்பியுங்கள். அவர்களோடு சேர்ந்து தேவனை ஆராதியுங்கள். அவர்களோடு சேர்ந்து விளையாடுங்கள். வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்கும் நினைவுகளை அவர்களுக்கு பரிசாகக் கொடுங்கள்.

**அவர்களுக்கு மெய்யான சபைக் காட்டுங்கள்**

நீங்கள் எந்த சபைக்கு போகிறீர்களோ அந்த சபைக்கு அவர்களும் போவார்கள். எனவே, நீங்கள் சரியான சபையில் அங்கம் வகிக்கும் போது அவர்களும் சரியான சபையில் அங்கம் வகிப்பார்கள். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் [I தெசலோனிக்கேயர் 5:21].

எந்த ஒரு தகப்பனும் பூரணரல்ல. ஆனால், நீங்கள் உங்கள் பிள்ளைகளிடத்தில் நேர்மையானவராக, நியாயமானவராக, நல்லவர்கராக இருந்தால் பாராட்டபடுவீர்கள். நல்ல கிறிஸ்தவ தகப்பனாக இருங்கள். உங்கள் பிள்ளைகளை பரலோகத்திற்கு ஆயத்தப்படுத்துங்கள். ✝

# லீதியாளின் திறந்த மனது

## Lydia`s Open Heart

Maxie B. Boren

**அ**ப்போஸ்தலர் 16:13–15 வசனங்களில் லீதியாள் என்னும் பேருள்ள ஒரு பெண்ணின் மனமாற்றச் சம்பவம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் சீலா, லூக்கா மற்றும் தீமோத்தேயுவோடு இணைந்து கிறிஸ்வின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக இரண்டாம் சுவிசேஷப் பயணத்தில் பிலிப்பி பட்டணத்துக்குச் சென்றிருந்தார். அங்கேயிருக்கும் போது ஓர் ஓய்வு நாளில் பவுலும் அவரோடிருந்தவர்களும் ஆற்றினருகில் ஜெபிப்பதற்காகப் போனார்கள். அங்கே லீதியாள் என்றும் பேருள்ள ஸ்திரீ உட்பட சில பெண்கள் கூடியிருந்தார்கள். அவள் தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும், தேவனை விசுவாசிக்கிறவாருமாயிருந்தாள். மேலும் அவள் மற்ற விசுவாசிகளுக்குப் பரிச்சயமானவளாருந்தாள். அவர்களோடு சேர்ந்து தான் அவள் வழக்கமாய் ஜெபிக்கிற இடத்திற்குச் சென்றிருக்கிறாள். அங்கே தான் பவுலும் அவரோடிருந்தவர்களும் லீதியாளுக்கு சுவிசேஷத்தைப் போதித்திருக்கிறார்கள்.



அங்கே பவுல் போதித்த தேவனுடைய வார்த்தைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார் என்று நாம் வாசிக்கிறோம். அவள் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டதன் விளைவாக அவளும், அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

சில வேத வல்லுநர்கள் லீதியாளின் இருதயம் திறக்கப்பட்டதை வைத்து அது தேவனால் அற்புதவிமாகத் திறக்கப்பட்டது என்று

தவறாக வியாக்கியானம் செய்கிறார்கள். தேவன் தன்னிச்சையாகவே லீதியாளின் மனதைத் திறந்தார் என்று சொல்கிறார்கள். இது தவறான விளக்கமாகும். இங்கே உண்மை என்னவென்றால், பவுலல் போதிக்கப்பட்ட தேவனுடைய சித்தத்தை அவள் விருப்பப்பட்டு ஏற்றுக்கொண்டாள். பதினான்காம் வசனத்தில் பவுல் சொல்லியவைகளை அவள் கவனித்தாள் என்று நாம் வாசிக்கிறோம். அவள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளும் மனநிலையைக் கொண்டிருந்தன் காரணமாக கர்த்தர் லீதியாளின் இதயத்தைத் திறந்ததாக வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது. இது தேவன் பார்வோனின் இருதயத்தைக் கடினமாக்கினார் என்பதை நாம் எப்படிப் புரிந்து கொள்ளுகிறோமோ அவ்விதமாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, தேவன் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தவில்லை. அவன் தான் தன்னுடைய இருதயத்தை கடினப்படுத்திக்கொண்டான் [யாத்திராகமம் 7:3, 13,14; I சாமுவேல்; 6:6].

இதன் விளக்கம் இதோ: தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக யாரெல்லாம் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்திக்கொள்ளுகிறார்களோ சர்வவல்ல தேவன் அப்படிப்பட்டவர்களுடைய இருதயம் கடினமாக அனுமதித்துவிடுகிறார். ஆனால், மறுமுனையில் தேவனுடைய செய்தியையும், அவருடைய சித்தத்தையும் யாரெல்லாம் ஏற்றுக் கொண்டு, அதற்குக் கீழ்ப்படியத் தங்கள் மனதைத் திறக்கிறார்களோ அப்படிப்பட்டவர்களுடைய இருதயங்கள் திறக்கப்பட தேவன் அனுமதிக்கிறார். தேவன் தன்னிச்சையாகவோ, நேடியாகவோ யாருடைய இருதயத்தையும் திறப்பதில்லை.

லீதியாள் தேவனுக்கு கீழ்ப்படிய விரும்பின ஓர் நபராக இருந்திருக்கிறார். பவுல் மற்றும் அவரோடிருந்தவர்களால் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டபோது அதற்கு அவள் கீழ்ப்படிந்தாள். அவள் ஞானஸ்நானத்தின் மூலமாகக் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தாள். மத்தேயு 28:18,19, மாற்கு 16:15,16 வசனங்களை வாசியுங்கள். அந்த வகையில் லீதியாள் சுவிசேஷத்தைக் கேட்டு அதை ஏற்றுக்கொண்டபோது கர்த்தர் அவளுடைய இதயத்தைத் திறந்தார். இந்த காரியத்தை மத்தேயு 7:78; அப்போஸ்தலர் 13:44-46; அப்போஸ்தலர் 17:11,15 போன்ற வசனங்களிலும் காண முடியும்.


தேவனுக்கு நம் இருதயங்களைத் திறந்தால். நம் இருதயங்கள் திறக்கப்படும். நாம் அவரிடத்தில் கிட்டிச் சேர்ந்தால், அவரும் நம்மிடத்தில் கிட்டிச் சேர்வார். ஆனால், நாம் தேவனுக்கு விரோதமாக நம் இருதயங்களைக் கடினப்படுத்தினால் நம் இருதயங்களும் கடினப்படுத்தப்படும். நாம் அவருக்கு முதுகைக்காட்டி அவரிடமிருந்து விலகிச் சென்றால், அவரும் நம்மை விட்டுவிடுவார் [ரோமர் 1:20-28]. ஆகையால், தேவனிடத்தில் சேருவோம், தேவாசீர்வாதம் பெறுவோம்!

வேதாகம கேள்விகள்

## பத்துக் கட்டளைகளைப் பற்றியது என்ன?

## what about the Ten commandments?

Russel G. Bell





**ப**த்துக் கட்டளைகளை உள்ளடக்கிய பழைய ஏற்பாட்டின் கீழ் நாம் இல்லையென்றால், அந்தப் பத்துக் கட்டளைகளும் நமக்குப் பொருந்தாது என்று பொருள்படுமா? இதுதான் இன்று நம்மில் எழுகிற பொதுவான கேள்வியாக இருக்கிறது. இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் இதற்கான பதில் ஆம். பொருந்தாது என்பதுதான்.

இதன் பொருள், நாம் கொலை செய்யலாமா, களவு செய்யலாமா, விபச்சாரம் செய்யலாமா? நிச்சயமாகக் கூடாது என்பதுதான் பதில். பத்துக் கட்டளைகளில் ஒன்றாகிய ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக என்னும் கட்டளையைத் தவிர, மற்ற எல்லாக் கட்டளைகளும் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கிறது. அதனால் தான், கிறிஸ்தவர்கள் ஓய்வுநாளாகிய சனிக்கிழமையில் தேவனை ஆராதிப்பதில்லை. அதற்குப் பதிலாக இயேசு கிறிஸ்து உயிர்த் தெழுந்த நாளாகிய, வாரத்தின் முதல் நாளிலே ஆராதிக்கிறார்கள்.

ஆம், நாம் ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டுமென்ற கட்டளை புதிய ஏற்பாட்டில் இல்லை. ஆனால், மற்ற ஒன்பது கட்டளை களும் இன்றும் நமக்குப் பொருந்துகிறதாகவே இருக்கிறது. அதாவது, இந்த ஒன்பது கட்டளைகளும் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக் கின்றன. ஆகையால், இவற்றைக் கடைபிடிப்பதில் தவறொன்று மில்லை. இது இன்றைய மனிதனுக்குத் தேவையாயிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 7:4 –ல் சொல்லும் வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள். **அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர் களானீர்கள்.** வேறுவிதமாகச் சொன்னால், கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது, பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் (பத்துக் கட்டளைகள் உட்பட) எல்லாம் எடுத்துப்போடப்பட்டுவிட்டது. இப்பொழுதோ, நாம்

பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ் செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். (ரோமர் 7:6). கிறிஸ்து எந்தப் பிரமாணத்திலிருந்து நம்மை விடுவித்தாரோ அதை நீங்கள் இன்னும் பின்பற்ற வேண்டுமா? நிச்சயமாகப் பதில் வேண்டாம் என்பதுதான். அதினால்தான் நாம் இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டைப் பின்பற்றுகிறோம்.



எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்களே தானே. ஏனெனில், நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது. அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும், கற்பலகைகளில்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது. எழுத்துக்களினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டானபடியால், இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக் கூடாதிருந்தார்களே. ஒழிந்துபோகிற மகிமையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்? ஆக்கினைத் தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால், நீதியைக் கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே. மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்போது, இந்நாள் வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின் மேல் இருக்கிறதே. அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது, அந்த முக்காடு எடுபட்டுப்போம். கர்த்தரே ஆவியானவர் கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் (II கொரி. 3:2,3,7-9,15-18). ✝

வேதாகம கேள்விகள்

# சபை கட்டிடம் ஒரு பரிசுத்த ஸ்தலமா?

# Is The Church Building a Sanctuary?


E.Claude Gardner

சபையானது தன்னால் முடிந்தவரை ஓர் அருமையான கட்டிடத்தைப் பெற்றிருக்க வேண்டும். சிலர் தங்கள் பொருளாதார நிலையையும் தாண்டி மிகப்பெரிய கட்டிடங்களை சபைக்காகக் கட்டியிருக்கிறார்கள். இது இன்று ஒரு சிறிய அறை போலில்லாமல், அதைக் கலை நயத்துடன் கட்டுகிறார்கள். மேலும், அதின் அழகை மெருகேற்ற அதினுள் கண்ணாடியினால் ஆன வேலைப்பாடுகளையும் செய்கிறார்கள். ஆம், தேவனும், ஆதியில் பூமியைப் படைத்த போது அதை மிகவும் அழகாகவும், நேர்த்தியாகவும் படைத்தார். அதினிமித்தம் நாம் அனுதினமும் சூரியோதத்தைக் கண்டுகளிக்கும் வாய்ப்பை வழங்கியிருக்கிறார். மேலும், சூரியன் மறையும் அழகைக் கண்டு ரசிக்காதவர் இவ்வுலகில் யார் தான் இருக்க முடியும்?



இருப்பினும், சபை கட்டிடத்தை நாம் எவ்வளவு அலங்கரித்தாலும், அது பரிசுத்த ஸ்தலமாக ஆவதில்லை. ஆனால், பரிசுத்த ஸ்தலம் என்னும் பதத்தை வேதாகமம் அங்கீகரிக்காத நிலையிலும் அதைக் பயன்படுத்துவது பழக்கமாகிவிட்டது. பழைய ஏற்பாட்டில் ஆராதனைகாகப் பயன்படுத்தப்பட்ட இடத்தை மனதில் கொண்டு, இன்றும் சபை கூடிவரும் கட்டிடத்தை பரிசுத்த ஸ்தலம் என்றழைக்கிறார்கள். இன்று இப்படி அழைப்பதற்கு தேவனுடைய அனுமதியும் இல்லை, அங்கீகாரமும் இல்லை.

**பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஸ்தலம்**



பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவாலயம் பரிசுத்த ஸ்தலமாக அனுசரிக்கப்பட வேண்டியதாயிருந்தது. கீழ்க்காணும் வசனங்களில் நாம் பார்க்கும்போது அவைகள் யெகோவா ஆராதனையின் ஓர் அங்கமாயிருந்தது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். அவர்கள் நடுவிலே நான் வாசம் பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக [யாத்.25:8]. என் ஓய்வு நாட்களை ஆசரித்து என் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்துப் பயபக்தியாயிருப்பீர்களாக நான் கர்த்தர் [லேவி. 19:30]-ல், ஓய்வு நாள் மற்றும் பரிசுத்த ஸ்தலம் ஆகிய இருவார்த்தைகளுமே இடம் பெற்றிருக்கிறபடியால் அவைகள் பழைய உடன்படிக்கைக்குரியவைகள் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

ஆனாலும், இயேசு கிறிஸ்து பரிசுத்தமாயிருந்த தேவ ஆலயத்தைச் சுத்தப்படுத்தினார். **இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்தில் விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்து என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்** [மத்தேயு 21:12,13].

இரு ஏற்பாடுகளுக்கிடைப்பட்ட காலத்தில் தேவாலயமானது சிரியா அரசன் Antiochus Epiphanes – ஆல் பரிசுத்தக் குலைக்சலாக்கப்பட்டு அசுத்தமாக்கப்பட்டது. இச்சம்பவமானது கி.மு.167–ல் நடந்தது. இந்த அரசன் பல நாடுகளைக் கைப்பற்றினான், இதில் எருசலேமும் உள்ளடக்கம். இவன் தேவாலயத்திற்குள்ளே Zeus olympus என்ற விக்கிரத்தை எழுப்பினான். மேலும், இவன் பன்றியின் கொழுப்பினால் செய்யப்பட்ட திரவியத்தை தேவாலயத்திலுள்ள பொருட்களுக்குப் பூசி தேவாலயத்தை தீட்டுப்படுத்தினான்.

**புதிய ஏற்பாட்டு பரிசுத்த ஸ்தலம்**

இப்போது நாம் பழைய உடன்படிக்கையின் கீழாக இல்லாமல், புதிய உடன்படிக்கையின் கீழாக இருக்கிறோம். **இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே**

முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார். அதெப்படி யெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் சாம்பலும், சரீரசுத் தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால், .... கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மன சாட்சியைச் செத்த கிரியைளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! ...ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிர மங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு ... நித்திய சுதந்திரத்தை அடைந்துகொள்வதற்காக புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயி ருக்கிறார். புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டது மாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபத்திருக்கிறது (எபி.8:3, 13–15;8:13).

இன்று கிறிஸ்தவ யுகத்தில் வாழும் நாம் ஆலயங்களுக்குப் போய் தான் தேவனைத் தொழுதுகொள்ள வேண்டுமென்றில்லை. மாறாக, நாம் எங்கு வேண்டுமானாலும் தேவனைத் தொழுது கொள்ளலாம். உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமா யிரார் [அப் 7:48]. பரிசுத்த பவுலும் இந்த உண்மையை உறுதி செய்துள்ளார். உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண் டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கி றபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண் ணுகிறதில்லை ( அப்.17:24). கிறிஸ்துவும், நாம் தேவனைத் தொ ழுதுகொள்வதற்கு ஓர் உலகளாவிய இடத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார். ஆம் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என் றார் (மத்.18:20). அதாவது, நாம் ஒன்று கூடும் இடம் முக்கியமானதல் ல நாம் கிறிஸ்துவுடன் ஒன்றிணைவது தான் முக்கியமானதாகும்.


இன்றைய நாட்களில் தொழுகை என்பது மெய்யான கூடாரமாகிய சபையில் தான் நடக்கிறது. எபிரெயர் 8:2 மெய்யான கூடாரமாகிய, ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு. முதல் உடன்படிக்கை பூரிக்குரிய பரிசுத்த ஸ்தலத்தைப் பற்றிப் பேசுகிறது. அன்றியும் முதலாம் உடன்படிக்கை யானது ஆராதனைக்கேற்ற முறைமைகளும் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமும் உடையதாயிருந்தது (எபி.9:1). இது கடந்த காலத்தைப் பற்றி பேசுகிறது.

பழைய ஏற்பாட்டு பரிசுத்த ஸ்தலத்தில் மிருக பலிகள் இருந்த தென்றும், இப்போது புதிய ஏற்பாட்டு மெய்யான கூடாரத்தில் மிரு பலி கள் எதுவும் செலுத்தப்படுவதில்லையென்றும் எபிரெய எழுத்தாளர் பரிசுத்த எழுத்துக்கள் மூலம் பழுதில்லாமல் விளக்குகிறார். ஏனென்றால், எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினி மித்தமாகப் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டு

வரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளையத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும் [எபி.13:11].

**சபை பூமிக்குரிய ஒன்றல்ல**

சபைக் கட்டிடங்கள் கட்டப்படுவதற்கு முன்பாகவே சபை இருக்கிறது. ஆதித்திருச்சபை, கிறிஸ்தவர்களுடைய இல்லங்களில் கூடியிருக்கிறது. அதிலும், அநேகர் உபத்திரவத்தின் காரணமாக இரகசியமான இடங்களில் கூட கூடியிருக்கிறார்கள். இன்று காணப்படும் விசேஷமான சபை கட்டிடங்கள் கட்டப்படுவதற்கு நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பாகவே வீடுகளில் சபையாகக் கூடியிருக்கிறார்கள். இதினிமித்தம் புதிய ஏற்பாட்டு சபையானது ஓர் ஆவிக்குரிய கட்டிடம், வீடு, ஆலயம் என்றழைக்கப்படுகிறது. **நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மளிகையுமாயிருக்கிறீகள். நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? வீட்டை உண்டுபண்ணினவன் வீட்டைப்பார்க்கிலும் அதிகக் கனத்திற்குரியவனாயிருக்கிறான்; அதுபோல மோசேயைப் பார்க்கிலும் இவர் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார். ஏனெனில், எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும் உண்டு பண்ணினவர் தேவன்** [Iகொரி.3:9,16; எபி.3:3,4].




ஆகவே, உண்மையான ஆராதனை சபை கட்டிடத்தை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆராதனையின் போது நாம் யாருடைய சமூகத்தில் வந்திருக்கிறோம் என்பதைக் குறித்து உணர்வுள்ளவர்களாயிருந்து பரிசுத்தமாக நடந்து கொள்ள வேண்டும். ஆம், நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று தேவன் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறாரே [Iபேதுரு 1:16].

ஆகையால், சபை கட்டிடத்தை பரிசுத்த ஸ்தலம் என்றழைப்பது தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றல்ல. இன்னும் சொல்லப் போனால், சபை கட்டிடத்திற்குள் நடக்கும் செயல்பாடுகளுக்குத்தான் நாம் மரியாதை, கனம் கொடுக்க வேண்டுமே தவிர. அதை விடுத்து சபை கட்டிடத்தை பரிசுத்த ஸ்தலமாக நாம் கருதக்கூடாது. ஏனென்றால், Iகொரி. 14:40-ன் படி, சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது. ✝

## நம்முடைய நோக்கம் எப்படிப்பட்டது?

## How Aout Our Motto?

**அ**மெரிக்க தேசத்தின் உள்நாட்டுப்போரின் போது கடிகாரம் சரி பார்த்துக் கொண்டிருந்த ஒரு வாலிபனுக்கு ராணுவ வீரனாகும் வாய்ப்பு கிடைத்தது. ராணுவத்தில் சேர்ந்த போது அவன் கடிகாரம் சரி செய்யும் கருவிகளையும் கொண்டு போனான். ராணுவ முகாமுக்குள்ளேயே அவன் கடை போட்டு தொழிலை செய்து கொண்டிருந்தான்.




அதன் பின்பு போருக்குச் செல்லும்படி அழைப்பு வந்தது. ஆனால், இவனுக்கு போருக்குப் போக விருப்பமில்லை. அவனுக்கு கடிகாரத்தை சரிபார்க்கும் வேலை அதிகமாக இருந்தது. அவன் போருக்குப் போகச் சொன்ன தளபதியைப் பார்த்து சில கடிகாரங்களைப் பழுது பார்த்து போருக்குப் போவதாகச் சொன்னான். அவன் தன் நோக்கத்தையே மறந்துவிட்டான். அவனுடைய நோக்கம் ராணுவ வீரனாயிருக்க வேண்டியதாயிருந்தது, கடிகாரத்தை பழுது பார்க்கிறவராக அல்ல.

நாமும் பல சந்தர்ப்பகளில் நம்முடைய நோக்கத்தை மறந்து விடுகிறேம். நாம் பல வித கவனச்சிதறல்களால் கிறிஸ்தவர்களக நாம் செய்ய வேணடிய காரியங்களை மறந்துவிடுகிறோம்

## வேதாகம குறிப்புகள்

# சேவல் கூவும் போது...

# When The Rooser Crows...

*Boobby Dockery*

**முன்னுரை:**

**மத்தேயு 26:31-75- வசனப்பகுதிகள்**



பேதுருவுக்கு சேவல் கூவும் சத்தம் மிகுந்த துக்கத்தை வருவித்தது.

பேதுருவின் வாழ்க்கையில் நடந்த இந்த சம்பவத்தை நாம் ஆராய்ந்து பார்த்து, நம் வாழ்க்கையிலும் சேவல் கூவும் நேரத்தை நாம் சிந்தித்துப் பார்ப்போம்.

**பொருள்:**

**I. சேவல் கூவின போது பேதுருவுக்கு**

A. மேல் வீட்டில் இயேசு கிறிஸ்து இந்த இராத்திரியில் நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள் என்றார் [ வசனம் 31]

B. பேதுரு இதை ஏற்றுக்கொள்ள மறுத்தார். இதை நாம் மூன்று நிலைகளாகப் பார்க்கலாம்.

- முதல் நிலை : அவர் சந்தேகப்பட்டார். அதாவது, பேதுரு அதற்கு மறுப்புத் தெரிவித்தார் [ வசனம் 35]
- இரண்டாம் நிலை : பேதுரு தூரத்திலே அவருக்குப் பின் சென்றார் [வசனம் 58].
- மூன்றாம் நிலை : பேதுரு, அந்த மனுஷனை நானறியேன் என்று ஆணையிட்டு மறுத்தலித்தார் [வசனம் 72].

C. லூக்கா ஆசிரியர்: அப்பொழுது, கர்த்தர் திரும்பி பேதுருவை நோக்கிப் பார்த்தார் என்கிறார். இயேசு கிறிஸ்து தமக்கு நடந்த எல்லாக் காரியங்களின் மத்தியிலும் பேதுருவுக்கு என்ன நடந்தது என்பதை மிகத் துல்லியமாக அறிந்திருந்தார்.

D. பேதுரு தான் செய்ததைக் குறித்து உணர்வடைந்தபோது வெளியே போய் மனங்கசந்து அழுதார் [வசனம் 75].

## II. சேவல் கூவின போது நமக்கு

A. பேதுரு எங்கெல்லாம் நின்றாரோ அங்கெல்லாம் நாமும் நிற்கிறோம். அதாவது உபத்திரவத்தால் நாம் பாதிக்கப்படும் போது கிறிஸ்துவை நாம் பகிரங்கமாகவே மறுதலிக்கிறோம்.

B. சேவல் கூவும் போது நமக்கு அது மூன்று காரியங்களைச் செய்யும் வேளையாயிருக்கிறது.

- நினைவு கூருதலுக்கான வேளை: பேதுரு நினைத்துக் கொண்டு [ மத் .26:75 ; வெளி.2:5].
- மனந்திரும்புதலுக்கான வேளை: பேதுரு வெளியே போய் மனங்கசந்து அழுதார் [மத்.26:75 ; II கொரி.7:10].
- புதுப்பித்தலுக்கான வேளை: யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா [யோவான் 21:15]

C. சேவல் கூவும்போது அதுவே எல்லாவற்றுக்கம் முடிவல்ல, நாம் முடிவென்று அனுமதிக்கும் வரை.

D. நாமெல்லாரும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்

- யார் வேண்டுமானாலும் விழுந்து போக வாய்ப்புண்டு [ரோமர் 3:23]
- நாம் விழுந்துபோகும் போது அதுவே முடிவாயிருக்க வேண்டிய அவசியமில்லை [ I யோவான் 1:9].

**முடிவுரை:**

பிசாசுக்குப் பிடித்தமான பொய்கள் இரண்டு உண்டு

- இன்னும் நேரமிருக்கிறது.
- நேரம் கடந்துவிட்டது

பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்; தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான் [எபே.4:27; Iபேதுரு 5:8].

வேதாகம குறிப்புகள்

# பவுலின் நான் என்னும் வார்த்தைகள்

## The I am`s of Paul

*Patrick Morrison*

**வே**தாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நான் என்னும் வார்த்தைகளைப் பற்றி நாம் சிந்திக்கும் போது நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் போதனைகளைப் பற்றி நம்மால் நினைக்காமல் இருக்க முடியாது. நம் நேசர் ஜீவ அப்பம் நானே [யோவான் 6:35]; நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் [யோவான் 8:12]; நானே ஆடு களுக்கு வாசல் யோவான் 10:7 நானே நல்ல மேய்ப்பன் [10:11] ; நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் நானே வழியும் சத்திய ஜீவனுமாயிருக்கிறேன் [14:6]. நான் மெய்யான திராட்சைச் செடி [15:1] என்றெல்லாம் நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

நாம் மேலே பார்த்த நான் இருக்கிறேன் என்னும் வார்த்தைகள் இயேசு கிறிஸ்துவை யெகோவாவுக்கு சமமாக்குவது மாத்திரமல்ல [யாத்திராகமம் 3:14], நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து செயல்படுகிறவர் என்பதைக் காட்டுகிறது. அவர் நான் இருந்தேன், நான் இருப்பேன் என்று சொல்லவில்லை. சபையில் பலர் நான் இருந் தேன், நான் இருப்பேன் என்றெல்லாம் சொல்வதை நாம் கேள்விப்படு கிறோம். நாம் பவுலின் ஆயத்தம் மற்றும் வேலை செய்யும் மனது சம் மந்தமாக அவருடைய உதாரணத்திலிருந்து அநேகக் காரியங்களை கற்றுக் கொள்ள முடியும்.

ரோமர் புத்தகத்தில் பவுலின் நான் இருக்கிறேன் என்னும் வாக்கி யங்களை நாம் காண முடியும். இவைகள் பவுலைப் பற்றி நமக்கு எவை களைப் போதிக்கின்றன? நாம் கர்த்தருக்கு ஜாக்கிரதையான ஊழியக் காரர்களாக இருக்க உதவும் படி எப்படிப்பட்ட காரியங்களை நாம் கற்றுக் கொள்ளமுடியும்?

கிரேக்கருக்கும் மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடர் களுக்கு நான் கடனாளியாயிருக்கிறேன் [ ரோமர் 1:14]. இங்கே பவுல் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலுமுள்ள மனிதர்களுக்கும் தான் கடன்பட்டிருப்பதாகச் சொல்கிறார். அவர் தன்னுடைய கடந்த காலபா வங்களிலிருந்து மன்னிப்பைப் பெற்றுக் கொண்டதில் தேவனுடைய கிருபையை அறிந்து கொண்டார். அப்போஸ்தலர் 22:16; I தீமோ. 1:15,

பவுல் எல்லா மனிதர்களும் நற்செய்தியை அறிந்து கொள்ள ஆசைப் பட்டார், அவருடைய வாழ்க்கை அந்த ஆசையை பிரதிபலிப்பதுமட்டு மல்லாமல் உலக முழுவதும் இரட்சிப்பு செய்தியை எடுத்துச் செல்லும் அவருடைய ஆசையையும் பிரதிபலிக்கிறது. இன்று சபையாக நாம் இழந்து போனவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கடன் பெற்றி ருக்கிறோம் என்னும் உணர்வைப் பெற்று அவர்களுக்கு ஆத்துமாவை இரட்சிக்கவல்ல நற்செய்தியை பகிர்ந்து கொள்ள கடன்பட்டிருக்கி றோம். இக்காரியத்தில் நாம் பவுலும், மற்ற அப்போஸ்தலர்களும் பய ணித்த பாதையில் பயணிக்க வேண்டும் [மாற்கு 16:15]. யாரோ ஒருவர் நேரம் எடுத்துத்தானே நமக்குப் போதித்திருக்கிறார். அதேபோல் நம் மைச் சுற்றிலும் இருக்கிற இழந்து போனவர்களுக்கு நாம் செய்ய வேண்டாமா?

ஆகையால், ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன் [ ரோமர் 1:15] பவுல் தொடர்ந்து எழுதும் போது இழந்து போனவர்களுக்கு தான் சுவிசேஷத்தை அறிவிக்க கடன்பட்டிருக்கும் நிலை அவரை அப்பணியைச் செய்ய சோர்ந்து போகச் செய்யவில்லை. அவர் அப்பொறுப்பிற்காக தன்னை ஆயத்தப்படுத்தியிருந்தார். அவர் பிரசங் கிப்பதற்கு ஆயத்தமாக இருந்தார். ஆத்துமாவை இரட்சிக்க வல்ல ஒரே செய்தியை அறிவிக்க அவர் ஆயத்தமாயிருந்தார் யாக்கோபு 1:21]. பல நேரங்களில் தேவன் நமக்கு கொடுத்திருக்கும் பொறுப்புகளை உணர் கிறோம். ஆனால், அந்த சவால்களை எதிர்கொள்ள நம்மை ஆயத்தப் படுத்திக்கொள்ளத் தவறிவிடுகிறோம். நாம் உலகெங்கும் போய், சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டுமென்பதை நாம் அறிந்தி ருக்கிறோம் [மத்தேயு 28:19] ஆனால், நாம் அப்படிச் செய்ய ஆயத்தமா யிருக்கிறோமா? நம் பணியை உணர்ந்து அதை நிறைவேற்றத் தயாராகுவோம்!

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவ னுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது [ரோ மர் 1:16]. பின்பு பவுல் எழுதும் போது சிலர் பவுல் தமஸ்குவுக்குச் செல் லும் வழியில் இரட்சிக்கப்பட்டார் என்று எண்ணுகிறார்கள் இன்னும் சிலர் அவர் பரிசுத்த ஆவியின் நேரடி செயல்பாட்டினால் இரட்சிக்கப் பட்டார் என்று சொல்கிறார்கள். பவுல் சுவிசேஷத்தைக் கேட்டு ஞானஸ்நானத்தில் அதற்குக் கீழ்ப்படிந்தபடியால் தான் இரட்சிக்கப் பட்டார் [அப்போஸ்தலர் 22:16], அதே செயல் முறை தான் எல்லா

காலத்திலும் உலகிலுள்ள ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் பொருந்தும். சுவிசேஷத்தின் இரட்சிக்கும் வல்லமையைக் குறித்து பவுல் மிகவும் உறுதியாக இருந்தார். ஏனென்றால், அவருடைய வாழ்க்கையில் அது கிரியை செய்வதை அவர் கண்டிருக்கிறார். மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு ஒரே வழி சுவிசேஷந்தான் என்பதை நாம் ஒத்துக்கொள்ளும் வரை இழந்து போனவர்களை மனமாற்ற நாம் தயாராகமாட்டோம். மனிதனுடைய ஒரே நம்பிக்கை சுவிசேஷந்தான்! அதைக் குறித்து நாம் மௌனம் காத்தால், ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பே கிடைக்காது (II ராஜாக்கள் 7:9 ; I கொரி. 4:3).

மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக. சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும் படியாகவும், அவனை உயிரோடே காக்கும் படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்தத் துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்தினாலே சாவான்; அவன் இரத்தப் பழியையோ உன் கையிலே கேட்பேன். (எசே.3:17, 18). என்கிறார் தேவன். ஆகையால் நாம் பொறுப்புடனும் செயல்துடிப்புடனும் ஆத்தும ஆதாயம் செய்ய நான் இருக்கிறேன் என்று உந்தப்பட்டு ஊழியம் செய்ய வேண்டும். கிறிஸ்துவைப் போல நாமும் நானும் ஆத்தும அறுவடை செய்யவேன் என்ற முனைப்புக் காட்ட வேண்டும்.

### II தீமோத்தேயு 3:16,17

உலகில் உள்ள அனைத்து ஆங்கில நூல்களும் 26 ஆங்கில எழுத்துக்களை வைத்தே எழுதப்பட்டுள்ளது.


அதுபோலத்தான் ஆங்கில வேதாகமும் அதே 26 எழுத்துக்களைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

ஆயினும், உலகில் உள்ள எல்லா ஆங்கில நூல்களையும் விட ஏன் வேதாகமம் வேறுபட்டதாக இருக்கிறது?

ஒரே காரணம், அது பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டுள்ளது.

பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு தேவனிடமிருந்து வராத வார்த்தை எவ்வளவு ஆழமுடையதாக இருந்தாலும், அவ் வார்த்தைகளுக்கு எவ்வித வல்லமையும் இருக்காது, மனிதனை அடுத்த வாழ்வுக்குரியவனாகவும் மாற்றாது.

## சத்திய வழி



- பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)
- ரேடியோ : ஞாயிறு - வெள்ளி 5.30 p.m.
- நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி


தொடர்புக்கு : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்



- பேச்சாளர் : சகோ. B. அர்ஜுனன்
- நம்பிக்கை TV : திங்கள் & சனி மாலை 7:30 – 7:45 மணி
- மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
- ரேடியோ : 31 Meter Band (சனி மாலை 5.30 5.45) Srilanka all Asia Service



ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம் ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை




- பேச்சாளர் :சகோ. P.C. பிலேமோன் ராஜா
- தமிழன்/நம்பிக்கை :ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி
- பைபிள் பாடங்கள் :அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
- தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை
- **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL
- **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

தொடர்புக்கு : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்



| | | | | |
|---|---|---|---|---|
| நம்பிக்கை | TV | வெள்ளி | காலை | 7:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 மணி |
| வெளிச்சம் | TV | சனி | காலை | 6:15 மணி |

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

வேதாகம அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

<u>தொடர்புக்கு</u>

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.

தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

E.Z.S. ராஜநாயகம் : 98427 30382

P.R. சுவாமி : 098440 70763

P.C. பிலேமோன் ராஜா: 9244204420

B. அர்ஜுனன் : 994435 58041

## ' சத்தியத்தின் குரல் ' சந்தா விண்ணப்பம்

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய .................................... முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. .................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.
(சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)
(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**
"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்
**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**
Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385
E-mail : rajarichal@yahoo.co.in

பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________________